363

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

ஏப்ரல் 13, 1999 தொகுதி 72 எண் 1

D
V211,31'N99
N99.721
221087

வெளியீடு 04-02-2000 Issued 04-02-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 13, 1999 - தொகுதி 72 - எண் 1**

**Tuesday, 13th April, 1999—Volume 72 - No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - **600 009***

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

விலை ரூ. ***3.00***] **[Price Rs. 3.00**

13–04–1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| *1.* **வினாக்கள்--விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-41 |
| *2.* **கவன ஈர்ப்பு--** | |
| மேலூர் கூட்டுறவு நூற்பாலை இயங்காததால் தொழிலாளர்கள் வேலையிழப்பு | 41-47 |
| *3.* **தகவல் கோரல்--** | |
| (அ) கவன ஈர்ப்புக்கான அமைச்சரின் அறிக்கை அவையில் வைக்கப்படாதது | 43 |
| (ஆ) பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பான வழக்கில் உயர்நீதிமன்றத்தின் நடவடிக்கை | 47-49 |
| (இ) புதிய தமிழகம் கட்சி சார்பாகவும், ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் சார்பாகவும் நடைபெறும் பேரணிகளுக்கு அனுமதி மறுப்பு | 49-53 |

D
1211,31 N99
N99.72-1



பக்கங்கள்

4. *மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி--*

கோரிக்கை எண் 31 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் — 54-148,

*மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் — 54,60, 128-143

திரு. சி. ஞானசேகரன் — 60-71

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 62,63,122, 125,127-128

திரு. வ. வேலுசாமி — 71-75

திரு. ஜி.கே. மணி — 75-80

திரு. பால. ஆனந்தன் — 81-86

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் — 86-92

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் — 92-96

திரு. வை. சிவபுண்ணியம் — 97-101

திரு. ம. முத்துராமலிங்கம் — 101-104

திரு. லா. சந்தானம் — 105-108

திரு. ஜி. நிஜாமுதீன் — 109-111

திரு. மு.பெ. சாமிநாதன் — 112-115

திரு. அ. வெங்கடாசலம் — 115-118

திரு. சோ. பாலகிருஷ்ணன் — 118-127

திரு. ஆர். சொக்கர் — 127

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 120-121

5. அறிவிப்பு-- — 144-145

உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி ஏற்பாடு — 71

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- — 148

221087



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப்பணித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன் :**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :**
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா. நா. நேரு :**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு. கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி :**
கைத்தறி, துணித் தொழில்.

16. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் :**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :**
வனம், சின்கோனா மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
*கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.*

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்*

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் :**
*கால்நடைப் பராமரிப்பு.*

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் :**
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education..** **The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | |
|---|---|
| **6. Minister for Agriculture** | .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| **7. Minister for Public Works** | .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| **8. Minister for Transport** | .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| **9. Minister for Highways** | .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :** Highways and Ports. |
| **10. Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| **11. Minister for Food, Public Distribution System and Co-operation** | .. **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| **12. Minister for Milk** | .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |



| | |
|---|---|
| **13. Minister for Labour** | .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| **14. Minister for Law** | .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| **15. Minister for Handlooms** | .. **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms, Textiles. |
| **16. Minister for Backward Classes** | .. **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| **17. Minister for Forest** | .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Environmental Pollution Control. |
| **18. Minister for Housing** | .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| **19. Minister for Rural Industries and Registration** | .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |

20. **Minister for Information, Publicity and Stationery and Printing** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press.

21. **Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme.

23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

24. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation.

25. **Minister for Khadi** .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan.

26. **Minister for Fisheries** .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation.



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. சி.டி. தண்டபாணி

டாக்டர் காஞ்சனா கமலநாதன்

திரு. பெ. ஆசையன்

டாக்டர் ஆ. ஞானசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. வை. சிவபுண்ணியம்

*செயலாளர்*

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 4. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| 7. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 8. | திரு. ரா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச செயலாளர் |
| 9. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 10. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 11. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 12. | திரு. க. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| 13. | திரு. சௌரி. அய்யாத்துரை | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 14. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 15. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 18. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 19. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. | துணைச் செயலாளர் |
| 20. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல் .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 23. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 24. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. | தலைமை நிருபர் |
| 30. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. | தலைமை நிருபர் |
| 31. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. | தலைமை நிருபர் |
| 32. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 35. | திரு. நா. நடராஜன், பி.ஏ. .. | தலைமை நிருபர் |
| 36. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 37. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ.,பி.எல். .. | தலைமை நிருபர் |
| 38. | திரு. தி. உமாபதி, பி.ஏ. .. | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. லி. .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. .. | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. .. | துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. .. | பவானிசாகர் |
| 18. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். .. | வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. .. | ஆலங்குளம் |
| 20. | ஆவுடையப்பன், திரு. இரா. .. | அம்பாசமுத்திரம் |

| | | |
|---|---|---|
| 21. | ஆறுமுகம், திரு. தி.ப. | .. திருச்செங்கோடு |
| 22. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 23. | ஆனந்தன், திரு. பால. | .. வந்தவாசி (செ.வ.) |
| 24. | இரகுமான்கான், திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 25. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. மேலூர் |
| 26. | இராசமாணிக்கம், திரு. பி. | .. ஒரத்தநாடு |
| 27. | இராசன், திரு. வி. பி. | .. ராஜபாளையம் (செ.வ.) |
| 28. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | .. ஆண்டிமடம் |
| 29. | இராமசாமி, டாக்டர் வை. | .. பண்ருட்டி |
| 30. | இராமசாமி, திரு. கே. ஆர். | .. திருவாடனை |
| 31. | இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். | .. கம்பம் |
| 32. | இராமச்சந்திரன், திரு. சி.இரா. | .. தொண்டாமுத்தூர் |
| 33. | இராமச்சந்திரன், திரு. மா. | .. திருவோணம் |
| 34. | இராமலிங்கம், திரு. ஏ. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 35. | இராமலிங்கம், திரு. செ. | .. திருவிடைமருதூர் |
| 36. | இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். | .. பள்ளிப்பட்டு |
| 37. | இராமஜெயம், திரு. ந.பூ. | .. மயிலாப்பூர் |
| 38. | இராஜ ரெட்டி, திரு. ச. | .. தளி |
| 39. | இராஜேந்தர், திரு. டி. | .. பூங்கா நகர் |
| 40. | இளங்கோ, திரு. கோ. | .. அவினாசி (செ.வ.) |
| 41. | ஈஸ்வரன், திரு. ரா. | .. வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 42. | உதயசூரியன், திரு. தா. | .. சங்கராபுரம் |



| | | |
|---|---|---|
| 43. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. தஞ்சாவூர் |
| 44. | கணேசன், திரு. ஐ. | .. எடப்பாடி |
| 45. | கணேசன், திரு. கே. சி. | .. ஜெயங்கொண்டம் |
| 46. | கருணாநிதி, கலைஞர் மு. | .. சேப்பாக்கம் |
| 47. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 48. | கருப்பண்ண உடையார், திரு. ந. | .. பாபநாசம் |
| 49. | கருப்புசாமி, திரு. டி. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 50. | கன்னையன், திரு. க. | .. தொட்டியம் |
| 51. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. கிருஷ்ணகிரி |
| 52. | காந்தி, திரு. ஆர். | .. இராணிப்பேட்டை |
| 53. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 54. | கிருஷ்ணன், திரு. எஸ். வி. | .. நாங்குநேரி |
| 55. | கிருஷ்ணன், திரு. சீ. வெ. | .. வேடசந்தூர் |
| 56. | குண்டன், திரு. டி. | .. உதகமண்டலம் |
| 57. | குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. குத்தாலம் |
| 58. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. கிள்ளியூர் |
| 59. | கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. | .. கும்மிடிப்பூண்டி |
| 60. | குழந்தை தமிழரசன், திரு. | .. விருத்தாசலம் |
| 61. | கோதண்டம், திரு. ஏ. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 62. | கோபால், திரு. பா. | .. மேட்டூர் |
| 63. | கோபு, திரு. சி. | .. அணைக்கட்டு |
| 64. | கோமதி சீனிவாசன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 65. | கோவிந்தன், திரு. ப. | .. தாரமங்கலம் |

66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்

69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்

70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு

71. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்

72. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

73. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு

74. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)

75. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்

76. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)

77. சறகுணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

79. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)

80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

81. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்

82. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

83. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி

84. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி

85. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி

86. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்

87. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



88. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்

89. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்

90. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

91. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)

92. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி

93. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்

94. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்

95. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்

96. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்

97. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு

98. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி

99. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி

100. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி

101. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி

102. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)

103. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்

104. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை

105. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

106. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை

107. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்

108. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்

109. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

110. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி

111. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)

112. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்

113. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்

114. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்

115. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)

116. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை

117. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி

118. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2

119. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு

120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி

121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)

122. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு

123. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி

124. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1

125. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்

126. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்

127. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)

128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி

129. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி

130. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்

131. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)

132. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்

133. துரைமுருகன், திரு. .. காட்பாடி



134. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி

135. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)

136. நடராசன், திரு. ஆ. .. பேரூர்

137. நடராஜன், திரு. த. .. செஞ்சி

138. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்

139. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)

140. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி

142. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்

143. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்

144. நேரு, திரு. கா.நா. .. லால்குடி

145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை

146. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)

147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1

148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)

149. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு

151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

152. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)

153. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்

154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்

155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி

156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

| | | |
|---|---|---|
| 157. பிச்சாண்டி, திரு. கு. | .. | திருவண்ணாமலை |
| 158. புகழேந்தி, திரு. இ. | .. | கடலூர் |
| 159. புரட்சிமணி, திரு. ச. | .. | மங்களூர் (செ.வ.) |
| 160. பூவேந்தன், திரு. த. | .. | பழனி (செ.வ.) |
| 161. பெரியசாமி, திரு. இ. | .. | ஆத்தூர் |
| 162. பெரியசாமி, திரு. என். | .. | தூத்துக்குடி |
| 163. பெரியசாமி, திரு. என்.கே.கே. | .. | ஈரோடு |
| 164. பெரியசாமி, திரு. நா. | .. | பெருந்துறை |
| 165. பெருமாள், திரு. வி. | .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 166. பெர்னார்டு, திரு. இரா. | .. | குளச்சல் |
| 167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | .. | சிங்காநல்லூர் |
| 168. பொன்முடி, டாக்டர் க. | .. | விழுப்புரம் |
| 169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். | .. | பல்லடம் |
| 170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 171. மகேந்திரன், திரு. இரா. | .. | நாட்ராம்பள்ளி |
| 172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. | .. | திருநாவலூர் |
| 173. மணி, டாக்டர் அ. | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 174. மணி, திரு. கோ. சி. | .. | கும்பகோணம் |
| 175. மணி, திரு. டி. | .. | விளவங்கோடு |
| 176. மணி, திரு. ஜி. கே. | .. | பெண்ணாகரம் |
| 177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். | .. | சாத்தான்குளம் |
| 178. மணிமாறன், திரு. இரா. | .. | திண்டுக்கல் |



| | | |
|---|---|---|
| 179. மணிவர்மா, திரு. க. | .. | தண்டராம்பட்டு |
| 180. மதிவாணன், திரு. இரா. | .. | இராயபுரம் |
| 181. மதிவாணன், திரு. செ. | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 182. மனோகரன், திரு. கு. | .. | தர்மபுரி |
| 183. மாயவன், திரு. தி.ப. | .. | ஸ்ரீரங்கம் |
| 184. மாரி அய்யா, திரு. பே. | .. | புதுக்கோட்டை |
| 185. மாரிமுத்து, திரு. அ. | .. | வானூர் (செ.வ.) |
| 186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். | .. | அரவக்குறிச்சி |
| 187. முகம்மது கோதர் மைதீன், திரு. | .. | பாளையங்கோட்டை |
| 188. முத்து, திரு. வி. | .. | சங்கரி (செ.வ.) |
| 189. முத்துராமலிங்கம், திரு. ம. | .. | திருமங்கலம் |
| 190. முபாரக், திரு. பா.மு. | .. | கூடலூர் |
| 191. முருகேசன், திரு. பொ. | .. | காஞ்சிபுரம் |
| 192. முல்லைவேந்தன், திரு. வ. | .. | மொரப்பூர் |
| 193. முனிரத்தினம், திரு. ஆ.மு. | .. | சோளிங்கர் |
| 194. மூக்கப்பன், திரு. இரா. | .. | சின்னசேலம் |
| 195. மூக்கையா, திரு. எல். | .. | பெரியகுளம் |
| 196. மோகனதாசன், திரு. கோ. | .. | பூம்புகார் |
| 197. மோகன் கந்தசாமி, திரு. ப. | .. | பொங்கலூர் |
| 198. மோசஸ், டாக்டர் எம். | .. | நாகர்கோவில் |
| 199. ரங்கநாதன், திரு. எம். | .. | குன்னூர் (செ.வ.) |
| 200. ரங்கநாதன், திரு. ப. | .. | புரசைவாக்கம் |
| 201. ரவி அருணன், திரு. கே. | .. | தென்காசி |

| | | |
|---|---|---|
| 202. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 203. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 204. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 205. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 206. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 207. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என். எஸ். | .. | காங்கேயம் |
| 210. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 211. வல்லரசு, திரு. பி. என். | .. | உசிலம்பட்டி |
| 212. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 213. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 214. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 216. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 217. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 218. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 219. வெங்கடாசலம், திரு. ஜி. எல். | .. | பாலக்கோடு |
| 220. வெங்கடேசன், திரு. ச. க. | .. | மதுராந்தகம் |
| 221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 222. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 225. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 226. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 227. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 229. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 233. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |
| 234. வெற்றிடம் | .. | திருவட்டாறு |
| 235. வெற்றிடம் | .. | நத்தம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 30, வெகுதான்ய-திருவள்ளுவர் ஆண்டு 2030
## 1999 ஏப்ரல் 13, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்'*

பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காணமுடியும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 361, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**361--**

**புறக்காவல் நிலையங்களை முழுக் காவல் நிலையங்களாக்குதல்**

*19693--**திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் புறநகர் காவல் நிலையங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றை முழுக் காவல் நிலையங்களாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1999 ஏப்ரல் 13

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் தற்போது 111 புறக்காவல் நிலையங்கள் உள்ளன.

(ஆ) எல்லா புறக்காவல் நிலையங்களையும் முழுக் காவல் நிலையங்களாக நிலை உயர்த்த வேண்டும் என்று அரசு கொள்கையளவிலே முடிவு எடுத்துள்ளது. அதன்படி, ஆண்டுதோறும் நிதிநிலைமைக்கேற்ப இவற்றைப் படிப்படியாக முழுக் காவல் நிலையங்களாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டில் இத்திட்டத்திலே எத்தனை புறக் காவல் நிலையங்கள் முழுக் காவல் நிலையங்களாக் மாற்றப்படும்? அப்படி முழுக் காவல் நிலையங்களாக மாற்றப்படும்போது அரசுக்குக் கூடுதலாக எவ்வளவு செலவாகிறது? தமிழ்நாட்டிலுள்ள 111 புறக் காவல் நிலையங்களையும் முழுக் காவல் நிலையங்களாக மாற்றும் திட்டத்தை எந்த ஆண்டுக்குள் நிறைவேற்ற அரசு உத்தேசித்துள்ளது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தொடக்கத்திலே குறிப்பிட்டதைப்போல 1996 ஆம் ஆண்டு 147 புறக் காவல் நிலையங்கள் இருந்தன. இப்போது 111 புறக் காவல் நிலையங்கள் என்றால், ஏதோ அந்த நிலையங்கள் குறைந்து விட்டன என்று தவறாக மதிப்பிடத் தேவையில்லை. அவற்றை எல்லாம் முழுக் காவல் நிலையங்களாக மாற்றிக்கொண்டிருக்கின்றோம். 1996-97 ஆம் ஆண்டில் மாத்திரம் புறக் காவல் நிலையங்கள் முழுக் காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டவை 14; 1997-98 ஆம் ஆண்டில் முழுக் காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டவை 17; 1998-99 ஆம் ஆண்டில் நிலை உயர்த்தப்பட்டவை 5; ஆக மொத்தம் இதுவரையிலே 36 புறக் காவல் நிலையங்கள் முழுக் காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டிருக்கின்றன. படிப்படியாக எல்லா புறக் காவல் நிலையங்களையும் முழுக் காவல் நிலையங்களாக மாற்றுவதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. கொள்கை அளவில் எடுக்கப்பட்டுள்ள இந்த முடிவு, நான் தொடக்கத்திலே குறிப்பிட்டதைப்போல, நிதிநிலைமைக்கேற்றவாறு அவ்வப்பொழுது செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இதற்கு ஆகின்ற செலவைப்



1999 ஏப்ரல் 13]

பற்றிக் குறிப்பிட்டார்கள். இது அந்தந்தப் பகுதியிலே உள்ள புறக் காவல் நிலையங்களை முழுக் காவல் நிலையங்களாக மாற்றுகின்ற நேரத்தில், அந்தந்தப் பகுதிக்கேற்ப செலவாகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதியில் தேனிரிவேலி என்ற கிராமத்தில், ஒரு புறக் காவல் நிலையம் நீண்ட நாட்களாக இருக்கிறது. அந்த மக்கள் எல்லாம் ஒவ்வொரு தடவையும் கோரிக்கை வைத்துக் கொண்டே இருக்கிறார்கள். ஆகவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புறக் காவல் நிலையத்தை முழுக் காவல் நிலையமாக மாற்றுகின்றபோது முதல் முன்னுரிமை கொடுத்து, இந்த ஆண்டே அதை எடுத்துக்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு புறக் காவல் நிலையங்கள் முழுக் காவல் நிலையங்களாக மாற்றப்படுகின்ற பட்டியல் ஒன்று தயாரிக்கப்படுமேயானால், அதில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட அந்த நிலையம் முதல் இடம் பெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.

**திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறக் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டதற்குப் பிறகுதான் புதிய முழுக் காவல் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமா? முதலிலேயே புதிய முழுக் காவல் நிலையம் அமைப்பதற்கு என்னென்ன விதிமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன? அதற்கு எவ்வளவு செலவினம் ஏற்படுகிறது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, முழுக் காவல் நிலையங்கள் ஏற்படுத்துவதற்காக, புறக்காவல் நிலையங்கள் ஏற்படுத்துவது என்கின்ற முன்னுரை எழுதப்படுவதில்லை. முழுக் காவல் நிலையங்களாகவே தொடக்கத்திலேயே ஆரம்பிப்பதற்கு அரசிடம் கொள்கை இருக்கிறது. ஒவ்வொரு முழுக் காவல் நிலையமும் அமைக்கப்படுவதற்கு ஆகும் செலவைப் பொறுத்த வரையில்--ஐந்து வகையான காவல்

நிலையங்கள் இருக்கின்றன. மாநகரக் காவல் நிலையம், மாவட்டத் தலைநகரக் காவல் நிலையம், நகராட்சித் தலைமையிடக் காவல் நிலையம், காவல் வட்டத் தலைமையிடக் காவல் நிலையம், கிராமப்புறக் காவல் நிலையம் என்று புறக் காவல் நிலையம் அல்லாத 5 வகை காவல் நிலையங்கள் இருக்கின்றன. இதில்--மாநகரக் காவல் நிலையத்திற்கு தொடர் செலவு (Recurring expenses) ரூ. 33.85 இலட்சம், தொடராச் செலவு (Non-recurring) ரூ. 6.76 இலட்சம்; மாவட்டத் தலைநகரக் காவல் நிலையத்திற்கு தொடர் செலவு (Recurring expenses) ரூ. 27.23 இலட்சம்; தொடராச் செலவு ரூ. 6.31 இலட்சம்; நகராட்சித் தலைமையிட காவல் நிலையம் அமைக்க தொடர் செலவு ரூ. 20.17 இலட்சம்; தொடராச் செலவு ரூ. 5.78 இலட்சம்; காவல் வட்டத் தலைமையிடம், அதாவது D.S.P. control-ல் இருக்கின்ற தலைமையிடக் காவல் நிலையங்களை அமைப்பதற்கு தொடர் செலவு ரூ. 14.08 இலட்சம்; தொடராச் செலவு ரூ. 5.7 இலட்சம்; கிராமப்புறக் காவல் நிலையங்களை அமைக்க தொடர் செலவு ரூ. 10.39 இலட்சம்; தொடராச் செலவு ரூ. 5.2 இலட்சம ஆகிறது.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறக் காவல் நிலையங்களிலே தலைமைக் காவலர் அந்தஸ்திலேதான் அதற்குப் பொறுப்பு அளிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அப்படி முழுக் காவல் நிலையங்களாக மாற்றுகிற காலம் வரையிலே புறக் காவல் நிலையங்களில் உதவி ஆய்வாளர்களைப் பொறுப்பாளர்களாக நியமிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, முழுக் காவல் நிலையம் என்ற அந்தத் தகுதியைப் பெற்ற பிறகுதான் மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கையை நாம் ஏற்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-க்குப் பிறகு இன்று வரையிலே 46 புறக் காவல் நிலையங்கள் முழுக் காவல் நிலையங்களாக உயர்த்தப்பட்டிருக்கின்றன (குறுக்கீடு)



மன்னிக்கவும், 36 காவல் நிலையங்கள். இது வரவேற்கக்கூடியது. இப்படி முழுக் காவல் நிலையங்களாக உயர்த்தப்பட்ட அந்தக் காவல் நிலையங்களுக்குப் பல்வேறு இடங்களிலே கட்டட வசதி இல்லாமல் மிகவும் அவதிப்படக்கூடிய நிலை இருக்கிறது. இதற்கு முன்பும் அவ்வாறு உயர்த்தப்பட்ட இடங்களுக்குக் கட்டட வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே இப்படி முழுக் காவல் நிலையங்களாக உயர்த்தப்பட்ட இடங்களுக்குப் புதிதாக நிரந்தரக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, முதலில் ஒரு புறக் காவல் நிலையமாவது கொடுங்கள் என்று கேட்பது, புறக் காவல் நிலையம் கொடுத்த பிறகு அதை முழுக் காவல் நிலையமாக மாற்றுங்கள் என்று கேட்பது, அந்தக் கோரிக்கையை நிறைவேற்றிய பிறகு அதற்குக் கட்டடம் கட்டித் தாருங்கள் என்று கேட்பது-- இவையெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள உரிமை; தர வேண்டியது அரசின் கடமை (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப. தங்கவேலன்.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூரில் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் ஒன்று செயல்பட்டு வந்தது. காலப்போக்கில், பரமக்குடியில் Camp office என்று தொடங்கப்பட்டு தற்போது பரமக்குடியில் நிரந்தரமாக்கப்பட்டுவிட்டது. அடிக்கடி சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எழும்புகின்ற முதுகுளத்தூரில் ஒரு துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் தேவை என்று கூறினோம். மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட நீதிபதி, மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் 3 பேரும் சேர்ந்த குழு கூடி முடிவு செய்து அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அந்தப் பரிந்துரையும் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது நடப்பு நிதியாண்டில் ஏற்றுக்கொள்ளப்படுமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதற்கான முழு விவரங்களும் என்னிடத்திலே பதில் அளிப்பதற்கு இப்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அதுபற்றித் தனியாக ஒரு முறையீடு அனுப்புவாரேயானால் உடனடியாகக் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறக் காவல் நிலையத்தைப் பொறுத்தவரையில் அது சரியாகச் செயல்படவில்லை என்கிற ஒரு பொதுவான கருத்து இருக்கின்றது (சிரிப்பு). நான், இதைக் குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. அங்கே பணியிலே அமர்த்தப்படக்கூடிய காவலர்கள் சரியாக வராத காரணத்தினால் அரசாங்கம் என்ன நோக்கத்திற்காக ஆரம்பிக்கிறதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை என்று தெரிகின்றது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், என்னுடைய ராசிபுரம் தொகுதியில், ராசிபுரம் புதிய பேருந்து நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 2, 3 ஆண்டுகள் ஆகின்றன. சென்ற ஆண்டு அந்தப் புதிய பேருந்து நிலையத்திற்கு புறக் காவல் நிலையம் வேண்டுமென்று நானே இங்கே கேட்டேன். இந்த அரசும் ஒரு புறக் காவல் நிலையத்தைக் கொடுத்தது. அந்தக் காவல் நிலையம் எப்போதும் 24 மணி நேரமும் பூட்டியே கிடக்கின்றது என்பதை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதைத் திறப்பதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஓர் உண்மையை ஒத்துக்கொண்டார். நான் கேட்டேன் ஒரு புறக் காவல் நிலையம், இந்த அரசும் கொடுத்தது (சிரிப்பு) என்ற உண்மையை ஒத்துக்கொண்டதற்காக நன்றி. அது பூட்டப்பட்டிருப்பது உண்மையானால் அது கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். மூக்கையா.

*முற்பகல் 9-40*

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளத்தில் செயல்பட்டு வந்த துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் தேனிக்கு மாற்றப்பட்டுவிட்டது. அடிக்கடி பெரியகுளம் பகுதியில் ஜாதிக் கலவரம், இனக் கலவரம், இப்படிப் பல்வேறு கலவரங்கள் ஏற்பட்டு அந்தப் பகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். எனவே புதியதாகவாவது பெரியகுளத்தில் ஒரு துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகின்றேன்.





**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுவரையில் அந்தக் கலவரங்கள் அங்கு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் கல்லூரிலேகாடு என்ற இடத்திலும், இனம்பள்ளி அருகிலே சித்திரைக் கோவில் என்ற இடத்திலும் புறக் காவல் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டதால், கள்ளச் சாராயம் ஓரளவிற்குக் குறைந்துள்ளது. எனவே அந்த இடத்திலே நிரந்தரமாக முழுக் காவல் நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா? அதேபோல் சேலம் மாவட்டத்தில் போதுமான அளவிற்குக் காவலர்கள் இல்லை என்று சொல்லப்படுவது உண்மையா? ஆம் எனில், தேவையான அளவிற்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? துணை வினா ஒன்றுதான் கேட்கலாம். உங்கள் தொகுதியைப் பற்றிக் கேட்டீர்கள். அடுத்தாற்போல மாவட்டத்திற்குப் போய்விட்டீர்களே? நீங்கள் உட்காருங்கள். தொகுதி பற்றிய கேள்விக்கு முதலமைச்சர் பதில் சொல்வார்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, முதலில் கேட்கப்பட்டது ஒரு பொதுவான கேள்வி. அந்தக் கேள்விக்குப் பதில் அளித்திருக்கின்றேன்; விளக்கமாகவே பதில் அளித்திருக்கின்றேன். ஒவ்வொரு தொகுதியைப் பற்றியும் கேட்டால், தனிக் கேள்வி போட்டால்தான் அதற்குப் பதில் அளிக்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 362, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**362--**

**விளையாட்டு அரங்கம்**

*16059--**திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) உசிலம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் விளையாட்டு அரங்கம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 363, திரு. லா. சந்தானம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**363--**

**மருத்துவமனைக்குக் கூடுதல் வசதிகள்**

*7847--**திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சோழவந்தான் அரசு துணைப் பொது மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடங்கள், படுக்கை வசதிகள் மற்றும் மின்சார வசதிகள் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சோழவந்தான் அரசு மருத்துவமனையில் தற்போது 20 படுக்கைகள் உள்ளன. சராசரி உள்நோயாளிகளின் எண்ணிக்கையும் அவ்வளவே. இங்குள்ள அறுவை அரங்கிற்கு generator உள்ளது. போதிய மின்சார வசதியும் தண்ணீர் வசதியும் உள்ளது. கூடுதல் கட்டடங்கள் கட்டப் போதுமான இட வசதியில்லை. இங்கு பெண் மருத்துவர் குடியிருப்பு ஒன்று மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்து வருகிறது. இதை இடித்துவிட்டு, தேவைப்பட்டால் மேலும் படுக்கை வசதிகளுடன் கூடுதல் கட்டடங்கள் கட்ட 1999-2000 ஆண்டில் பகுதி-2 திட்டத்தில் பரிசீலிக்கப்படும்.





**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் அரசு துணைப் பொது மருத்துவமனையிலே கடந்த காலத்திலே 30 படுக்கைகள் இருந்தன. சோழவந்தானைச் சுற்றி நிறைய கிராமப்புறங்கள் இருக்கின்ற காரணத்தாலே--இன்றைக்கு அது 20-ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது--அது மீண்டும் கட்டப்பட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் குடியிருப்பைக்கூட இடித்துவிட்டு மருத்துவமனைக்குக் கட்டடத்தைக் கட்டித் தந்து படுக்கை வசதியை அதிகப்படுத்தித் தருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விடையில் அதைத்தான் தெரிவித்திருக்கின்றேன். அங்கு இருக்கக்கூடிய குடியிருப்பை இடித்துத் தள்ளிவிட்டு கூடுதல் கட்டடம் கட்டப்படுவதற்கு பகுதி-2 திட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய இந்த வேண்டுகோளை அரசு நிச்சயம் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 364, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**364--**

**புறநோயாளிகள் பிரிவை விரிவுபடுத்துதல்**

*13156--**திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சீர்காழி தொகுதியிலுள்ள சீர்காழி அரசு பொது மருத்துவமனை புறநோயாளிகள் பிரிவை விரிவுபடுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1999 ஏப்ரல் 13

சீர்காழி அரசு பொது மருத்துவமனை புறநோயாளிகளின் பிரிவை விரிவுபடுத்தும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. புறநோயாளிகள் பிரிவை விரிவுபடுத்துவது அவசியமெனில் இது குறித்து 1999-2000 ஆண்டு, பகுதி 2 திட்டத்தின்போது பரிசீலிக்கப்படும்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி அரசு பொது மருத்துவமனை தாலுகா தலைநகரிலே இருக்கிறது. ஒரு நாளைக்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட புறநோயாளிகள் வந்து சிகிச்சை பெற்றுக்கொள்கிறார்கள். உள்நோயாளிகளுக்கான படுக்கை எண்ணிக்கை 74-ஆக இருக்கிறது. புறநோயாளிகள் சிகிச்சை எடுத்துக்கொள்வதற்காக ஒரேயொரு இடம்தான் அந்தப் பிரிவிலே இருக்கிறது. 5, 6 டாக்டர்கள் ஒரே இடத்திலே மத்தியிலே அமர்ந்துகொண்டு 4, 5 வழியாக நோயாளிகளை வரவழைத்து மிகவும் சிரமமாக, நெருக்கடியான இடத்திலே சிகிச்சை அளிக்கிறார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பின்னாலே சீர்காழி அரசு மருத்துவமனைக்கு, 10 இலட்சம் ரூபாய் செலவிலே ஒரு சுற்றுச்சுவர் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் 12 படுக்கை வசதி.......

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவைக் கேளுங்கள். சொற்பொழிவுக்கு அனுமதிக்கமாட்டேன்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** 12 படுக்கைகள் வசதி கொண்ட Paediatric Ward ஒன்றும் 15 இலட்சம் ரூபாயிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் கருத்திற்கொண்டு மக்களுக்கு மிக அவசியமாகத் தேவைப்படுகின்ற அந்தப் புறநோயாளிகள் பிரிவுக்கு ஒரு கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு மறுபரிசீலனை செய்ய இயலுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல, சீர்காழி அரசு பொது மருத்துவமனையில் ஏற்கெனவே 62 படுக்கைகள் வசதி இருக்கின்றது. சராசரியாக உள் நோயாளிகள் 102 பேர்



1999 ஏப்ரல் 13]

வருகிறார்கள்; சராசரியாக வெளி நோயாளிகள் 1,165 பேர் வந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே 10 மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏற்கெனவே D.M.S. அவர்களை நேரிலே சந்தித்து, பலமுறை இதுகுறித்தும் பேசியிருக்கிறார்கள். அதுவும் அரசுக்குத் தெரியும். அங்கே கட்டடத்தை விரிவுபடுத்துவதற்கான இடவசதி போதிய அளவில் இல்லை. அங்கேயே இருக்கக்கூடிய குடியிருப்பைத் தகர்த்துவிட்டுப் புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கு அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அங்கேயுள்ள இத்தகைய நிலைமைகளையெல்லாம் அறிந்துதான் கடந்த ஆண்டு 12 இலட்சம் ரூபாய் செலவில் 12 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவும் தொடங்கப்பட்டிருக்கிறது. ரூபாய் 10 இலட்சம் செலவில் சுற்றுச்சுவரும் கட்டித் தருவதற்கு அரசு ஆணை எண் 62, சுகாதாரம், நாள் 6-2-1998 இல் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. மோகனதாசன்.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் போதுமான இடவசதி இல்லையென்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தபொழுது 5 ஏக்கர் அதற்கு இட ஒதுக்கீடு செய்து கொடுத்தார்கள். எனவே போதுமான இடம் இருக்கிறது. ஆனால் கட்டடம்தான் போதுமானதாக இல்லை. எனவே மீண்டும் மறுபரிசீலனை செய்து அதற்குக் கட்டடம் கட்டிக் கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற விவரங்களில் போதுமான இடவசதி இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவிப்பதைப்போல நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தபொழுது 5 ஏக்கர் நிலத்தை ஒப்படைத்திருப்பாரேயானால் அதுகுறித்து விவரங்கள் கொடுத்தால் இந்த அரசு கட்டடங்கள் கட்டித் தருவதற்கு உடனடியாக நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 365, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 13

**365--**

**போளூர் வட்டத்தைப் பிரித்தல்**

*17558--அ--**திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) போளூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து சேத்துப்பட்டை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இதுவொரு தர்மசங்கடமான, sensitive-ஆன பிரச்சினை. எனது தொகுதியிலே 2 ஒன்றியத் தலைநகரங்கள் வருகின்றன. அவை சேத்துப்பட்டு மற்றும் பெரணமல்லூர். போளூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து சேத்துப்பட்டைத் தலைமையிடமாகக் கொண்டும் அதேபோல வந்தவாசி வட்டத்தை இரண்டாகப் பிரித்து பெரணமல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டும் இரண்டு புதிய வட்டங்களைக் கேட்டு நாளுக்குநாள் போராட்டம், உண்ணாவிரதம், கடையடைப்பு என்று பல்வேறு போராட்டங்களை நடத்திக்கொண்டு வருகின்றார்கள். எனவே இரண்டு பெண்டாட்டிகளிடம் வாழ்க்கைப்பட்டவன் எப்படி மன உளைச்சலில் கஷ்டப்படுவானோ அதைப்போல நான் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். எனவே அரசு என்னுடைய நிலையை உணர்ந்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக இதைக் கருதி போளூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒரு புதிய வட்டமும், அதைப்போல வந்தவாசி வட்டத்தை இரண்டாகப் பிரித்து பெரணமல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டமும் உருவாக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



1999 ஏப்ரல் 13]

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்களின் sensitiveness எனக்குப் புரிகிறது. அவ்வளவு சுலபமாக அவரைக் காப்பாற்ற முடியும் என்று நான் நம்பவில்லை. (சிரிப்பு) இவ்வரசு பொறுப்பேற்றபின் 4 புதிய மாவட்டங்களையும், 8 புதிய வருவாய்க் கோட்டங்களையும், 24 புதிய வட்டங்களையும் உருவாக்கியுள்ளது. அவையனைத்தும் செயல்பட்டு வருகின்றன. 1998-99 ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட வட்டங்களும், கோட்டமும் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. வட்டங்கள்: எட்டையபுரம், குந்தா, பந்தநல்லூர், திருக்குவளை, வாழப்பாடி, மணல்மேல்குடி, இலுப்பூர், ஆலங்குளம், காரியாப்பட்டி, தொட்டியம், காட்பாடி; கோட்டம்: ஆத்தூர். அரசின் நிதிநிலையைக் கருத்திற்கொண்டு புதிய வட்டங்கள் போன்ற நிர்வாக அமைப்புக்களை உருவாக்கும் கருத்துருக்களை ஆய்வு செய்ய தற்போது வாய்ப்பு இல்லை என அரசு முடிவு செய்துள்ளது. இருப்பினும் நிதிநிலைக்கேற்ப உறுப்பினரின் கோரிக்கை உரிய காலத்தில் பரிசீலிக்கப்பட்டு ஆணை வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 366, திரு. பெ. ஆசையன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**366--**

**கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணி**

*9453--**திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றியம், பாலக்கோம்பை கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணி தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், 'திட்டப் பணி எப்போது முடிவடைந்து குடிநீர் வழங்கப்படும்?

[1999 ஏப்ரல் 13

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பாலக்கோம்பை கூட்டுக் குடிநீர்த் திட்டம் மார்ச் 2000 ஆண்டில் முடிக்க உத்தேசிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. பெ. ஆசையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் வழியாகப் பயன்பெறக்கூடியதாகச் சொல்லக்கூடிய கிராமங்களுக்கு கடந்த கால ஆட்சியின்போது பகுதி குடி தண்ணீர் வழங்கப்பட்டதாகவும் மீதியுள்ள கிராமங்களுக்கு முழுமையான குடி தண்ணீர் வழங்கப்பட்டுவிட்டதாகவும் கணக்கிடு செய்யப்பட்டுவிட்ட காரணத்தினால், குடி தண்ணீரை வழங்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னாலே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அதன் பயனாகத்தான் இப்போது இத்திட்டம் வழங்கப்பட்டிருக்கிறது என்று நான் அறிகிறேன். அதற்காக நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தினால் பயன்பெறக்கூடிய கிராமங்களுக்குத் தண்ணீரைக் கொண்டுவரக்கூடிய வழியிலேயே பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிற ரோசனப்பட்டி என்ற கிராமமும் இருக்கிறது. அதையும் சேர்த்து இந்தத் திட்டத்தோடு இணைத்து குடி தண்ணீர் வழங்கப்படுமா? இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு அனுமதித்திருக்கிற தொகை 5 கோடியே 46 லட்சம் ரூபாயாகும். இதற்கு 8-1-1996-லே உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அந்தப் பணிகள் தொடங்குகிற நிலை ஏற்பட்டு நடைபெற்று வருகிறது. இதிலே மொத்தத்தில் பயன்பெறக்கூடிய உச்சபட்ச மக்கள் தொகை 25,817. இந்த நேரத்தில் இந்தத் திட்டத்தில் வேறு வகையான கிராமங்களை இணைப்பது என்பதற்கான சாத்தியக்கூறு இல்லை. காரணம்,



1999 ஏப்ரல் 13]

ஆழ்குழாய் அமைத்தாலோ அல்லது நீர் ஆதாரம் கண்டுபிடித்தாலோ எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கு மக்கள் தொகை கணக்கிடப்பட்டு அதற்குரிய தண்ணீர் 40 லிட்டராக வழங்கப்பட வேண்டுமென்று ஏற்கெனவே திட்டமிடப்பட்டு இருக்கிறது. அதன் அடிப்படையில் பணி தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் ஒரு வருடத்திற்குள் இத்திட்டம் முடிவடையும் நிலையில் இருக்கும்போது தற்சமயம் புதிதாக ஒரு கிராமத்தை இணைக்க வேண்டுமென்று சொல்லுவது சரிப்படாது. ஏறத்தாழ 16 ஊராட்சிகளும் அதிலே உள்ளடங்கிய உட்கிராமங்களும் பயன்பெறுகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இதை இணைக்க வேண்டுமென்ற நிலை இருந்தால் பரிசீலனை செய்து வேறு வகையில் அதற்கு நீர் ஆதாரம் இருந்தால் அது கவனிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி தொகுதி குன்னூரிலிருந்து எனது சேடப்பட்டி தொகுதிக்கும், உசிலம்பட்டி மற்றும் ஆண்டிப்பட்டி தொகுதிகள் பயன்பெறக்கூடிய ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் கடந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. நான்கு லட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இந்த ஆண்டு செய்து கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலக்கோம்பை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றியது மூலக் கேள்வி. அதற்கு அடுத்தாற்போல உள்ள திட்டங்கள் பற்றி தகவல் வேண்டுமானால் தனிக் கேள்வி போடவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 367, திரு. இ.ஏ.பி. சிவாஜி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 13

**367--**

### புதிய பேருந்து நிலையம்

*15857--**திரு. இ.ஏ.பி. சிவாஜி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருத்தணி நகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணியில் தற்போதுள்ள பேருந்து நிலையம் 30 ஆண்டுகளுக்கு முன்பு 75 சென்ட் நிலத்தில் வடிவமைக்கப்பட்ட ஒன்று ஆகும். இன்று நகருக்கு, ஒரு நாளைக்கு, சாதாரண நாட்களிலேயே 300 பேருந்துகளுக்கு மேலாக வந்து செல்கின்ற காரணத்தால் இட நெருக்கடி ஏற்பட்டு, பயணிகளுக்கும் பொதுமக்களுக்கும் பெருத்த சங்கடத்தைத் தோற்றுவிக்கிற ஒரு சூழல் இருக்கிறது. எனவே தற்போது திருத்தணி நகரில் உள்ள வருவாய்த் துறைக்குச் சொந்தமான நிலம் 5.30 ஏக்கரில புதிய பேருந்து நிலையம் அமைத்து இதற்கு நிரந்தரத் தீர்வு காண அரசு முயலுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது உண்மை. நெருக்கடி இருப்பதும் உண்மை. இதற்கு வேறு பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் என்று அரசு கருதுவதும் உண்மை. ஆனால் அதற்குத் தகுதியான இடம் கிடைக்காத காரணத்தால், அருள்மிகு சுப்பிரமண்ய சுவாமி கோயிலுக்குச் சொந்தமான புல எண்கள் 336/1336-2-ல் 6 ஏக்கர் நிலத்தைப் பேரூராட்சியிடமிருந்து



1999 ஏப்ரல் 13]

பரிவர்த்தனை முறையில் மாற்றிக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இந்து சமய அறநிலையத் துறை, கோயிலுக்குச் சொந்தமான இடத்தைக் கொடுக்க மறுத்துவிட்டதால், புதிய பேருந்து நிலையம் அமைக்க இயலவில்லை. மாண்புமிகு உறுப்பினர், வேறு இடம் எங்கேயாவது கிடைக்குமேயானால் அதுபற்றி அங்கே இருக்கிற பேரூராட்சி அலுவலர்கள், பேரூராட்சித் தலைவர் ஆகியோரைக் கலந்தாலோசித்து அதற்குத் தனித்த கருத்துருவை அனுப்பினால் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 368, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**368--**

### பணம் பட்டுவாடா செய்தல்

*16267--**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரசு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகள் விற்கும் விளைபொருட்களுக்கு அன்றே பணம் பட்டுவாடா செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும், விவசாயிகளின் விளைபொருட்களை விற்பனை செய்தவுடன் பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. விளைபொருட்களுக்குரிய தொகையைச் செலுத்திய பின்னர் வியாபாரிகளுக்கு விளைபொருட்களை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது. எனினும் வரத்து அதிகம் வரும் காலங்களில் வியாபாரிகளால் தாங்கள் கொள்முதல் செய்யும் விளைபொருட்களுக்குரிய தொகையை முழுமையாக பட்டுவாடா செய்ய இயலாமல் போவதால் தாமதம் ஏற்படுகின்றது. இருப்பினும் ஓரிரு நாட்களில் தொகை முழுவதும்

பட்டுவாடா செய்யப்படுகிறது. பணம் பட்டுவாடா செய்வதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்ப்பதற்கு கடந்த ஆண்டு வியாபாரிகளுக்கும் பொருளீட்டுக் கடன் வழங்க அரசாணை நிலை எண் 203, வேளாண்மை, நாள் 25-6-1998-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாணையின்படி உரிமம் பெற்ற வியாபாரிகள் தாங்கள் கொள்முதல் செய்த விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இருப்பு வைத்து, ரூ. 25,000 அல்லது மொத்தக் கொள்முதலில் 25% இதில் எது குறைவோ அதனை பொருளீட்டுக் கடனாகப் பெற இயலும். இத்திட்டம் மூலம் நன்கு இயங்கி வரும் 100 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஒன்றுக்கு ரூ. 5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 500 இலட்சம் பொருளீட்டுக் கடனாக 1998-99ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற இந்தப் பணப் பட்டுவாடா காலதாமதமாகிற காரணத்தாலே விவசாயிகள் பல்வேறு வகைகளிலே இடர்ப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களுக்குப் போதுமான விலை கிடைக்கவில்லை. பல நாட்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலே தங்க வேண்டியிருக்கிற காரணத்தாலே உணவுச் செலவுகள், மற்ற மற்ற செலவுகள் எல்லாம் ஆகின்றன; பொருள்கள் வேறு எடை குறைந்து விடுகிறது; அதனாலே தனியாரிடம் கொண்டுபோய் குறைந்த விலைக்கு விற்று விவசாயிகள் நஷ்டம் அடைகிறார்கள். அண்மையிலேகூட விழுப்புரம் போன்ற மாவட்டங்களிலே விவசாயிகள் உடனடியாக பணப் பட்டுவாடா வேண்டி சாலை மறியல் போராட்டங்கள் எல்லாம்கூட நடத்தியிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலே வருங்காலத்திலே உடனடியாக அன்றே பணப் பட்டுவாடா செய்வதற்கு எல்லா வகைகளிலும் அரசிடமிருந்து முன்பணமாக கடன் உதவி செய்ய ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வியாபாரிகள் வாங்குகின்ற



பொருள்களுக்கு அவர்களாலே முழுமையாக விவசாயிகளுக்குப் பணம் செலுத்த இயலாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் அந்தப் பொருளின்மீது பொருளீட்டுக் கடனாக வியாபாரிகள் பெற்று உடனடியாக விவசாயிகளுக்குப் பணம் பட்டுவாடா செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்த பொருளீட்டுக் கடன் வியாபாரிகளுக்கும் வழங்குவதற்கு இந்த அரசு அனுமதித்தது. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல இந்த ஆண்டு அதுபோன்ற புகார்கள் வரவில்லை. அதிகமாக வரத்தில் உள்ள விழுப்புரம், விக்கிரவாண்டி, செஞ்சி, ஈரோடு, திருப்பூர், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், அரியலூர், ஜெயங்கொண்டம் ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வியாபாரிகளால் தாங்கள் கொள்முதல் செய்யும் விளைபொருட்களுக்குரிய தொகையை முழுமையாக பட்டுவாடா செய்ய இயலாமல் போவதால் தாமதம் ஏற்படுகிறது என்ற தகவல் கிடைத்த காரணத்தாலேதான், நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, இந்த பொருளீட்டுக் கடன்கூட நடப்பு ஆண்டிலிருந்து ஒரு வியாபாரிக்கு ரூ. 25,000 என்பது ஒரு இலட்சம் ரூபாய் அல்லது வாங்குகின்ற அந்தப் பொருளில் 50 சதவிகிதம், இதில் எது குறைவோ அந்தத் தொகையைப் பெற்று உடனடியாக விவசாயிகளுக்குப் பணத்தைக் கொடுத்து விட வேண்டுமென்று இந்த ஆண்டு முதல் இத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று இந்த மன்றத்தில் வேளாண் மானியக் கோரிக்கையிலே அறிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பால. ஆனந்தன்.

**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் என்றாலும்கூட ஒழுங்கீனங்கள் நிறைய நடக்கின்றன. எனவே விவசாயிகள் அந்த நிலையிலேயே பணம் பெறுவதற்கான வாய்ப்பினை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் என்றாலும் ஒழுங்கீனம் என்ற வார்த்தையைச் சேர்த்து அவர் சொல்கிறார். எப்படிப்பட்ட ஒழுங்கீனம் என்று விவரமாகச் சொன்னால் உரிய நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் இந்த அரசு

பொறுப்பேற்றபிறகுதான், விவசாயிகள்கூட தங்களுடைய விளை பொருட்களைக் கொண்டு வருகிறபோது, விலை மிகவும் குறைந்திருந்தால் விவசாயிகள் அந்தப் பொருளை வைத்து, அந்தப் பொருளின்மீது பொருளீட்டுக் கடன் பெற்றுக்கொள்ளவும் ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதுபோல வியாபாரிகள் பொருட்களை வாங்குகிறார்கள். ஒரு இலட்ச ரூபாயோ, இரண்டு இலட்ச ரூபாயோ கொண்டு வருகிறார்கள். மூன்று இலட்சத்திற்கு வாங்குகிறார்கள். அப்போது அந்த ஒரு இலட்ச ரூபாயைக் கொடுக்க முடியாது. வியாபாரிகள், விவசாயிகளுக்கு அந்தப் பொருட்களுக்கான முழுப் பணம் கொடுத்த பின்னால்தான், அந்தப் பொருட்களை வெளியே எடுத்துக்கொண்டு போவதற்கு நாங்கள்--ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்--அனுமதிக்கிறோம். இருந்தாலும், நாளைக்கு வாங்க, பணம் கொடுக்கிறோம் என்று வியாபாரிகள் சொல்கிறார்கள்; அதை நம்பி விவசாயிகள் போவார்கள்; மறுநாள் வருவார்கள், அந்த வியாபாரிகளால் பணம் ஏற்பாடு செய்ய முடியாது; மறுநாள் என்று இழுத்தடிக்கிற நிலைமை இருந்தது. கடந்த ஆண்டெல்லாம் இத்தகைய புகார்கள் வந்தன. அதைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காகத்தான் வியாபாரிகளுக்கும் பொருளீட்டுக் கடன் கொடுத்தால், அந்தப் பணத்தைப் பெற்று உடனடியாக வியாபாரிகள் விவசாயிகளுக்கு வழங்குவார்கள் என்ற அடிப்படையில் இந்த ஏற்பாட்டை இந்த அரசு செய்து இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆனால் சமீபகாலத்தில் பார்க்கும்போது, கடந்த வாரம் ஒரு வாழைத்தார், இரண்டு ரூபாய்க்குக்கூட விற்க முடியாமல் இருந்திருக்கிறது. நேற்று சன் T.V.யிலே, ராஜ் T.V.யிலே பார்க்கும்போது தக்காளி கிலோ இரண்டு ரூபாய்க்குக்கூட விற்க முடியாமல் விவசாயிகள் சிரமப்படுகிறார்கள் என்பது தெரிந்தது. ஆகவே அரசாங்கம் இதுபோன்ற காலங்களில் முன்கூட்டியே கணித்து இந்த விளைபொருட்களை அண்டை மாநிலங்களுக்கு எளிதாக எடுத்துச் செல்லக்கூடிய வகையில் குளிர்சாதனம் உடைய லாரிகள், போக்குவரத்து வசதிகள் எல்லாம் ஏற்பாடு செய்து விவசாயிகளுக்கு





இந்தப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பொருட்கள் இதனால் நாசம் ஆகின்றன. விவசாயிகளுக்கு விலை கிடைக்கவில்லை. மூன்று மாத கால உழைப்பு வீணாகப் போகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லக்கூடாது. நடவடிக்கை எடுப்பீர்களா என்று கேட்கவும்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே இதிலே அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்காளி, வெங்காயம், வாழைப்பழம் போன்றவற்றிற்கு உரிய விலை விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டுமென்றும், அதற்கு ஏற்பாடு செய்வீர்களா என்றும் கேட்டிருக்கிறார் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். அதாவது உணவுப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வது மாநில அரசாங்கத்தினால் இயலாது. இதுபோன்ற உணவுப் பொருட்களுக்கு ஒரு குறைந்தபட்ச விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று மாநில அரசாங்கம் சார்பில் மத்திய அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்யலாம். அந்தப் பரிந்துரையின் பேரில் மத்திய அரசாங்கம் தான் குறைந்தபட்ச விலையை நிர்ணயம் செய்ய இயலும். சமீபத்தில் வாழையின் விலை மிகவும் குறைந்திருக்கிறது. 2 ரூபாய் அளவிற்கு விற்கிறது; இது குறித்து படம் பத்திரிகையில் வந்ததைப் பார்த்துச் சொல்கிறார் என்று கருதுகிறேன். அந்தத் தகவல் எனக்கும்கூட தினமணி ஏட்டின் மூலம் வந்தது. நான் பார்த்தவுடன் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர், சம்பந்தப்பட்ட வேளாண்மைத் துறை அதிகாரி ஆகியோருடன் தொடர்பு கொண்டு என்ன, பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தி உண்மைதானா என்ற விவரத்தைக் கேட்டுப் பெற்று தகவல் வைத்திருக்கிறேன். ஆனால் திடீரென்று ஒரு சுழல் காற்றால் மரம் எல்லாம் சாய்ந்துவிட்டது. அதன் காரணமாக காய் முத்தாத நிலையில், பழுக்க வைக்க முடியாத நிலையில்--அதை ஏதாவது குழம்பு வைக்க அல்லது பொறியலுக்குப் பயன்படுத்தலாம். பிஞ்சு, நடுத்தரமான முத்தாத

[1999 ஏப்ரல் 13

காய், மரங்கள் சாய்ந்துவிட்டன. அதைக் கொண்டுவந்து விற்கிறபோது, ஒரே நேரத்திலே ஓர் இடத்திற்கு ஒரு லாரி வந்து விற்பனை ஆகக்கூடிய இடத்தில் 10 லாரிகள் வந்திருக்கின்றன. அது உண்மை. அந்த நேரத்திலே முத்தாத பிஞ்சு, இளம் பிஞ்சு அப்புறம் காய, இவற்றை வாங்கி என்ன பண்ணுவது, சமையலுக்கு, குழம்புக்குத் தேவைபபடுகிறவர்கள் வாங்க முடியும் என்கிற நிலை வரும்போது குறைந்த விலைக்கு அது போய் இருக்கிறது. அதிலே சில பேர் இவற்றை வைத்துப் படம் எடுத்துக்கொண்டு போய் இருக்கிறார்கள், அரசாங்கம் இதில் தலையிட்டு ஏதாவது உதவி செய்யுமா என்ற அடிப்படையில். அதற்குப் பின்னாலே இப்போது ஒரு தார், ஒரு குலை 50 ரூபாய் வரைக்கும் விற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் இதையெல்லாம் யோசித்துத்தான் செய்கிறது. சமீபத்திலேகூட மரவள்ளிக் கிழங்கு விலை குறைந்திருக்கிறதென்று எல்லோராலும் பேசப்பட்டது. விவசாயிகள் சார்பிலே, தொழிலாளர்கள் சார்பிலே, பேரவை உறுப்பினர்கள் நீங்கள் எல்லாம் பேசினீர்கள். நம்முடைய முதலமைச்சர் இதையெல்லாம் கருத்தில்கொண்டு மரவள்ளிக் கிழங்குக்கு ஏதாவது குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கலாம் என்ற ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். 15 ஆண்டுக்காலம் நெல்லினுடைய உறபத்தி, விலை ஆகியவற்றைக் கணக்கில் எடுத்து 75 கிலோ நெல் மூட்டை விலை எவ்வளவு, அதற்கு அரிசி எவ்வளவு கிடைக்கும், என்ன விலைக்குப் போய் இருக்கிறது என்று ஒரு சாராசரி கணக்கு எடுத்து விலை நிர்ணயிப்பது போல, மாநில அரசாங்கத்தின் மூலம் மத்திய அரசாங்கம் ஒரு குறைந்தபட்ச விலையை, இந்தப் பொருளுக்கும் நிர்ணயிக்க வேண்டும் என்று சொல்லி, நாங்கள் பரிந்துரை செய்து இருக்கின்றோம். அதைப் போல, வெங்காயத்திற்கும், தக்காளிக்கும்கூட குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்க வேண்டுமென்ற பரிந்துரையை மத்திய அரசாங்கத்திற்குச் செய்யலாமா என்பது அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றது.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 369, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 13]

**369--**

**குளங்கள் அமைத்தல்**

***16962--திரு. உ. திசைவீரன்:**

**மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--**

(அ) வறட்சிப் பகுதியில் விவசாயிகளின் சொந்த நிலங்களில் குளங்கள் அமைத்துத் தரும் சிறப்புத் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியிலே கடந்த மூன்று ஆண்டுகளாக நல்ல மழை பெய்து விவசாயம் எல்லாம் சிறப்பாக இருக்கின்ற காரணத்தினாலே விவசாயிகள் மகிழ்ச்சியோடு இருக்கின்றனர். ஆனால் இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை மாவட்டங்களிலே போதுமான குளங்கள் இல்லாத காரணத்தினாலே மழை நீர் வீணாகக் கடலிலே கலக்கின்றது. எனவே முழு மானியத்துடன் தனியார் நிலங்களிலே அவர்களுடைய விருப்பத்திற்கேற்றவாறு அரசே முன்னின்று குளங்களை வெட்டிக் கொடுத்தால் தண்ணீர் தேங்குவதோடு, நிலத்தடி நீரும் உயருகின்ற வாய்ப்பு இருக்கிறது. எனவே அரசு பரிசீலனை செய்து, ஏரிகளைக் காத்த கலைஞர் அவர்கள் இந்தக் குளங்களை வெட்டித் தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர்

[1999 ஏப்ரல் 13

அவர்கள் எழுப்பியிருக்கின்ற துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லையென்றாலும், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்-- மத்திய அரசாங்கம் 50 சதவீதம், மாநில அரசாங்கம் 50 சதவீதம் செலவில் Water Shed என்று நாம் சொல்கின்றோம், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்--தமிழ்நாட்டிலே 16 மாவட்டங்களில் தற்போது செயல்பட்டு வருகிறது. தருமபுரி, தூத்துக்குடி, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, சேலம், நாமக்கல், கோவை, திருவண்ணாமலை, திண்டுக்கல், வேலூர், திருச்சி, பெரம்பலூர், கரூர். இதில் ஒரு நீர்வடிப் பகுதிக்கு Water Shed-க்கு 500 ஹெக்டேர் நிலப்பரப்பு கொண்டு அமைக்கப்பட இருக்கிறது. அதைப்போல 297 நீர்வடிப் பகுதிகளில் தற்போது செயல்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டு முதல் மேலும் 103 நீர்வடிப் பகுதிகளுக்கு இது விரிவுபடுத்தப்பட்டு தற்போது செயல்படுகிறது. இதுபோன்று கசிவுநீர்க் குட்டைகளை அமைப்பதென்றால், அரசு நிலமாக இருந்தால் அந்தக் கசிவுநீர்க் குட்டை அமைத்து அதிலே தண்ணீர் தேங்குகின்றபோது அல்லது அதிகமாக வருகின்ற நேரத்திலே, வடிந்து கால்வாய் மூலம் சென்று விவசாயத்திற்குப் பாசன வசதியை பொதுவாக நாம் அமைத்துக் கொடுக்க முடியும். ஆனால் தனியார் நிலங்களில் அப்படி நாம் அமைத்துக் கொடுத்தால் நிலம் கொடுத்தார் என்பதால் அது அவருக்கு மட்டும் சொந்தமாகிவிடும். அது மற்றவர்களுக்குப் பயன்படாது. தனியார் நிலமாக இருந்தாலும் அவர்கள் இந்த Water Shed திட்டத்திற்கு எழுதிக் கொடுத்து விட்டால்--பொதுவாக அவர்கள் நிலத்தை எழுதிக் கொடுத்தார்கள் என்றால்--அந்த நிலத்தில் கசிவுநீர்க் குட்டை போன்றவை அமைத்துத் தருவதற்கு எப்பொழுதும் அரசாங்கத்திலே விதிமுறை இடம் அளிக்கிறது. அந்த அடிப்படையிலே செய்யலாமே தவிர, தனியார் நிலத்திலே நாம் போய் செலவு செய்து அதுபோன்ற குட்டைகளை அமைத்துத் தருவதற்கு வாய்ப்பில்லை.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 370, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 13]

**370--**

**பேருந்து வசதி**

*15552--**திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாட்ராம்பள்ளி தொகுதி, கதிரிமங்கலம், மாமுடிமானப்பள்ளி, புலியூர் ஆகிய கிராமங்களுக்கு பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கதிரிமங்கலம் மற்றும் புலிக்குட்டை கிராமங்களிலிருந்து நடைப்பயண தூரத்தில் அரசுப் பேருந்து வசதிகள் இருப்பதால் பேருந்து வசதி செய்து தர இயலாது. மாமுடிமானப்பள்ளி cross Road-லிருந்து மாமுடிமானப்பள்ளி கிராமத்திற்குச் செல்லும் தடத்தில் ஒரு கிலோ மீட்டர் தூரம் மாட்டு வண்டித் தடமாக உள்ளதால் பேருந்து வசதி செய்து தர இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மகேந்திரன், இருக்கையில் இல்லை. திரு. ச.க. வெங்கடேசன்.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பு அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேல்மருவத்தூரிலிருந்து மதுராந்தகம், காஞ்சிபுரம், திருத்தணி வழியாக திருப்பதி செல்வதற்கு விசேஷ பேருந்து அல்லது சொகுசுப் பேருந்து அல்லது சாதாரணப் பேருந்து விட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணிகளுடைய கோரிக்கை குறித்து வருங்காலங்களில் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 371, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 13

**371--**

**போக்குவரத்து முன்பதிவு அலுவலகம்**

*22517--**திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் நகரில் அரசு விரைவுப் போக்குவரத்து முன்பதிவு அலுவலகம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து எதுவும் வள்ளியூரிலிருந்து இயக்கப்படவில்லை. இந்நிலையில் வள்ளியூரில் முன்பதிவு அலுவலகம் அமைக்க சாத்தியமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலிக்கும் நாகர்கோவிலுக்கும் இடையே அமைந்து இருக்கின்ற நகரங்கள் வள்ளியூர், நாங்குநேரி போன்ற நகரங்களாகும். அரசுப் பேருந்துகளுக்கு முன்பதிவு செய்வதற்காக இங்கிருந்து திருநெல்வேலி அல்லது நாகர்கோவிலுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகையால் பொதுமக்கள் நலனைக் கருதி, அரசுப் பேருந்துக்கு மட்டும் வள்ளியூரில் முன்பதிவகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா? அமைச்சர் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளியூரில் இப்போது முன்பதிவே கிடையாது. முன்பதிவு இருந்தால்தான் மற்ற பதிவு அலுவலகத்தைப் பற்றி கேள்வியே வரும். ஆகவே முதலில் மாண்புமிகு உறுப்பினருடைய



1999 ஏப்ரல் 13]

கோரிக்கையை ஏற்று அங்கே வருகிற பேருந்துகளில் முன்பதிவு தனியாக இடஒதுக்கீடு செய்ய முடியுமா என்பதைப் பரிசீலித்து, அதற்குப் பிறகு மற்றதைப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 372, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**372--**

**ஆலயத்திற்கு குடமுழுக்கு**

*16005--**திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருமழப்பாடியில் உள்ள அருள்மிகு வைத்தியநாத சுவாமி சமேதரர் சுந்தராம்பிகா ஆலயத்திற்கு குடமுழுக்கு நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருமழப்பாடியில் உள்ள அருள்மிகு வைத்தியநாத சுவாமி சமேதரர் சுந்தராம்பிகா ஆலயத்திற்கு குடமுழுக்கு நடத்துவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமழப்பாடி அருள்மிகு வைத்தியநாத சுவாமி ஆலயம் மிகத் தொன்மை வாய்ந்த புகழ் பெற்ற ஆலயமாகும்.

[1999 ஏப்ரல் 13

"பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே! மாமணியே! மழப்பாடியுள் மாணிக்கமே!
அண்ணே! உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே"

என்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் அங்கு வந்து தங்கி இருந்த மிகப் பெரிய பாடல் பெற்ற புண்ணிய ஸ்தலம். அதுமட்டுமல்லாமல் அந்தக் கோவிலுக்கு இன்னொரு சிறப்பு என்னவென்றால், "காசியைவிட வீசம் கூட" என்று அதைச் சொல்லுவார்கள். கொள்ளிடம் எல்லா இடங்களிலும் கிழக்கு மேற்காக ஓடும்; ஆனால் இந்த ஸ்தலத்தில் மட்டும் அது தெற்கு வடக்காக ஓடுகிறது. அப்படிப்பட்ட புண்ணிய ஸ்தலத்தில் உள்ள அந்தக் கோவிலுக்கு குடமுழுக்கு செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆய்வில் இல்லை என்று சொன்னாலும், அந்தக் கோவிலின் முக்கியத்துவத்தை இந்தத் துறை உணர்ந்து இருக்கிறது. அவர் குறிப்பிட்டதைப்போல, அப்பரும், சுந்தரரும், திருஞானசம்பந்தரும்--மூவரும்--ஒரே நேரத்தில் அங்கு வந்து அதனுடைய சிறப்பைப் பேசி இருக்கிறார்கள். அந்தக் கோவிலுக்கு நிலம் அதிகமாக இருக்கிறது; நிலைமைதான் மோசமாக இருக்கிறது. நிலம் நன்செய் என்பது 232.61 ஏக்கர் இருக்கிறது; புன்செய் 230.04 ஏக்கர் இருக்கிறது. இவ்வளவு இருந்தும் ஓராண்டுக்கு 4,53,704 ரூபாய்தான் வருமானம் வருகிறது. இதிலே திருப்பணி மேற்கொள்ளப்பட வேண்டுமென்று முடிவு எடுத்தால், 16 வகையான திருப்பணிகளை அங்கு செய்ய வேண்டும். இதற்காகும் மொத்தச் செலவு ரூ. 30 இலட்சம். ஆனால் பெரம்பலூர் வட்டத்தில், அரியலூர் பகுதியில் மழப்பாடிப் பகுதியில் இருக்கின்ற சூழ்நிலைகளைப் பார்த்தால், பொது மக்களிடமிருந்து நன்கொடை திரட்டுவது என்பது மிகவும் அரிது. அதையும் இந்தத் துறை உணர்ந்து இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய ஒத்துழைப்போடும், இத்துறையினுடைய கரிசனத்தோடும் கண்டிப்பாக இந்தப் பணி நிறைவேற்றப்படும் என்று உறுதி அளிக்கப்படுகிறது.



1999 ஏப்ரல் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 373, திரு. ச. இராஜ ரெட்டி, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**373--**

**விவசாயிகளுக்கு கூடுதல் கடனுதவி**

*14009--**திரு. ச. இராஜ ரெட்டி:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கி மூலமாக வழங்கும் கடன் தொகையை உயர்த்தவும், மேலும் அவர்களுக்கு வழங்கப்படும் ரூபாய் 40 ஆயிரம் கடனை ரூபாய் 50 ஆயிரமாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கூட்டுறவு வங்கிகள் என்பதை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் என்ற கருத்தின் அடிப்படையில் தற்போது நடைமுறையில் உள்ளவாறு மேற்படி வங்கிகள் மூலம் தனி நபருக்கு வழங்கப்பட்டு வரும் பயிர்க் கடன்கள் ரூ.40,000/-க்கு மேற்பட்டே உள்ளன. மேலும் நகையீட்டின் பேரில் அதிகபட்சமாக தனி நபர் ஒருவருக்கு ரூ.50,000/- வரை கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ரூ. 40,000/-க்கு மேல் உயர்த்தப்பட்ட பயிர்க் கடன்கள் உச்ச வரம்புகள் 2-4-1997 முதல் நடைமுறையில் உள்ளன. எனவே மேலும் உயர்த்தி அனுமதிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இப்போது இல்லை.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 374, திரு. கு. மனோகரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 13

**374--**

**தொழிலாளர் நல மையம்**

*19380--**திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தருமபுரி மாவட்டத்தில் தொழிலாளர் நல மையம் ஒன்றுகூட செயல்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தருமபுரியில் தொழிலாளர் நல மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஓசூரில் எண் 1, முதல் கிராஸ், காமராஜர் காலனியில் தமிழ்நாடு தொழிலாளர் நல மையம் 25-1-1988 முதல் இயங்கி வருகிறது. மேற்படி மையத்தில் தையற் பயிற்சி மற்றும் குழந்தைகள் காப்பகம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 375, திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**375--**

**அம்பத்தூர் சிட்கோ தொழிற்பேட்டை**

*8233--**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அம்பத்தூர் நகராட்சி, அம்பத்தூர் சிட்கோ தொழிற்பேட்டையில் அனைத்துப் பகுதிகளிலும் தெரு விளக்குகள் அமைக்கவும், பிரதான சாலைகளில் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்து இரவில் களவு, வழிப்பறிகளைத் தடுக்கவும் அரசு ஆவன செய்யுமா?



1999 ஏப்ரல் 13]

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தற்போது 341 சோடியம் ஆவி விளக்குகள் சிட்கோவினால் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் விரிவாக்கப் பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் சிட்கோ தொழிற்பேட்டை ஏறத்தாழ 5 கிலோ மீட்டர் சுற்றளவில் இருக்கிறது. அங்கே இருக்கின்ற தொழிற்சாலைகளினுடைய மூலைமுடுக்குகளிலெல்லாம் விளக்குகள் இல்லாத காரணத்தால், இரவிலே வேலைக்குச் செல்கிற பணியாளர்களிடத்திலேயிருந்து வழிப்பறி நடைபெறுகிறது. சென்ற மாதம் மட்டும் இதுபோன்ற வழக்குகள் 10 பதிவு செய்யப்பட்டுள்ளன. அனைத்துத் தொழிற்சாலைகளிலும் பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தொழிற்சாலைகளைப் பார்வையிட வருகின்ற வியாபாரிகளின் நலனைக் கருத்தில் கொண்டும், அங்கேயுள்ள பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், உடனடியாக விளக்குகள் பொருத்தப்பட வேண்டும். அதோடு காவல் துறையினுடைய கண்காணிப்பும் அதிகமாக இருக்க வேண்டும் என்பதையும் கேட்டு, அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் மின் விளக்குகள் போதவில்லை என்று கேட்டிருக்கிறார். இந்த அரசு பொறுப்பேற்றவுடன்தான், கடந்த ஆண்டுதான் ஏற்கெனவே இருந்த குழல் விளக்கு போக, 341 புதிய சோடியம் ஆவி விளக்குகளைப் பொருத்தியிருக்கிறோம். இந்த அரசு பொறுப்பேற்ற பின்னால்தான் 38 கிலோ மீட்டருக்கு உள்ளிருப்பில் இருக்கின்ற சாலைகளை நவீன சாலைகளாக மாற்றி--ஒரு கிலோமீட்டருக்கு கிட்டத்தட்ட 10 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்து--இதுவரை 3.83 கோடி ரூபாய் செலவில் நல்ல தரமான சாலைகள் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன; சோடியம் விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றன; எல்லா வசதிகளும்

[1999 ஏப்ரல் 13

செய்யப்பட்டு கடந்த 25 ஆண்டுகளாக மேம்படுத்தப்படாத அம்பத்தூர் தொழிற்பேட்டை தற்போது எவ்வாறு இருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல முறையிலே சாலைகள் அமைத்திருக்கிறீர்கள். விளக்குகள் இல்லாத காரணத்தால், சரியான காவல் கண்காணிப்பு இல்லாத காரணத்தால், நிறைய தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்ற காரணத்தால் இதுபோன்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. இதைக் களைய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல எந்தப் பகுதியிலே மின் விளக்குகள் குறைவாக இருக்கிறது என்பதை அறிந்து அதற்கேற்ற நடவடிக்கையை அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 376, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**376--**

### கால்நடைக் கிளை நிலையம் அமைத்தல்

*17956--**திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பாபநாசம் தொகுதி, அணைக்குடி ஊராட்சியில் ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதுகுறித்து தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம் தொகுதி, அணைக்குடி ஊராட்சியில்



1999 ஏப்ரல் 13]

கால்நடைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலும், அங்கிருந்து சோழபுரம் அல்லது கொடநாட்டுக்கருப்பூர் வரவேண்டிய நிலை இருப்பதாலும் மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புவதோடு சென்ற ஆண்டு அறிவித்த 5 கால்நடைக் கிளை நிலையங்களும் இன்னும் திறக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்து, அவை எப்போது திறக்கப்படும் என்பதையும் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதி, அணைக்குடி ஊராட்சி என்பது கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் வருகிறது. கும்பகோணத்தில் ஒரு கால்நடை பெருமருத்துவமனையும், பம்பப்படையூர், சுவாமிமலை, கொத்தங்குடி, மருதாநல்லூர் ஆகிய கிராமங்களில் கால்நடை மருந்தகங்களும், கொடநாட்டுக்கருப்பூர், சோழபுரம், சுந்தரப்பெருமாள்கோயில், திருப்புறம்பயம், ஆகிய கிராமங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும், அசராத்தூர், சேங்கனூர், தேனாம்படுகை, இன்னாம்பூர் ஆகிய கிராமங்களில் கால்நடை பார்வைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. சோழபுரம் கால்நடைக் கிளை நிலையம் 3 கி.மீ. தூரத்திலும், கொடநாட்டுக்கருப்பூர் 5 கி.மீ. தூரத்திலும் இருக்கின்றன. இங்குள்ள கால்நடைகளுக்கு பக்கத்தில் உள்ள சோழபுரம், கொடநாட்டுக்கருப்பூர் போன்ற கிளை நிலையங்களில் தற்போது சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பார்வைக் கிளை நிலையங்கள் திறக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். இங்கு திறக்கப்பட்டு இருப்பதாக விவரக் குறிப்புகள் வந்திருக்கின்றன. அதைப்பற்றி அவர் எழுதிக் கொடுப்பாரானால், சரியான விவரங்களை அறிந்து, உடனடியாகத் திறக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 377; திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 13

**377--**

**கால்நடைக் கிளை மருத்துவமனை**

***20026--திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், மேலப்பனையூரில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இதுகுறித்து தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டூர் ஒன்றியம், மேலப்பனையூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் ஏற்கெனவே வைத்திருக்கிறேன். குறிப்பாக அந்தப் பகுதியின் அருகில் இருக்கிற ரங்கநாதபுரம், சேரி, ஆதிச்சபுரம், மழவராயநல்லூர், குன்னியூர் போன்ற பகுதிகளினுடைய ஊராட்சிகளைச் சேர்ந்த சுமார் 20 கிராமங்கள் பயன்பெறத்தக்க வகையில் அந்தப் பகுதியில் கால்நடை மருத்துவமனையை அமைத்தால் உதவிகரமாக இருக்கும். ஆகவே கருத்துரு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி வந்தால், அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலித்து அங்கு அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியத்தில் உள்ள மேலப்பனையூர் கிராமம் தற்சமயம் திருநெல்விக்காவல் என்ற ஊரிலுள்ள கால்நடைக் கிளை நிலையத்திற்கு பார்வைக் கிளை நிலையமாக செயல்பட்டு, வாரத்தில் 3 நாட்கள் கால்நடைகளுக்கு சிகிச்சைப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும்



1999 ஏப்ரல் 13]

இவ்வொன்றியத்தில் கோட்டூர், பெருகவாழ்ந்தான், பள்ளிப்பற்றி ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்களும், திருமக்கோட்டை, கலப்பால், வாட்டார், மழவராயநல்லூர், விக்கிரபாண்டியம் ஆகிய இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும் இவற்றிற்கு முறையே பார்வைக் கிளை நிலையங்களாக வடக்கு தென்பரை, 116 குளமாணிக்கம், பனையூர், செருவாமணி, புழுதிக்குடி ஆகிய இடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. எனவே எதிர்காலத்தில் நிதிநிலையைக் கருத்தில் கொண்டும், கால்நடைகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனையூர் கிராமம், திருநெல்விக்காவல் கால்நடை மருந்தகத்தோடு இணைக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். அதற்கும் இதற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேற்பட்ட பகுதியாக இருக்கிற காரணத்தால், அதனுடைய தொடர்பு நிலையமாக அதன்கீழ் அந்தக் கிராமம் செயல்பட முடியாது. சுற்றுப்புறத்தில் கால்நடையின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறது, தேவையும் அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தால் மீண்டும் பரிசீலித்து அங்கே அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின் சார்பில் தரப்பட்ட விவரக் குறிப்பிலே திருநெல்விக்காவல் ஊருக்கு மேலப்பனையூர் பார்வைக் கிளை நிலையமாகச் செயல்பட்டு வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கூற்றுகள் உண்மையாக இருக்குமானால், அதைப்பற்றி பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 378, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 13

**378--**

**ஆதிதிராவிடர் நல விடுதி**

***9447--திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாட்ராம்பள்ளி ஒன்றியம், சங்கராபுரத்தில் ஆதிதிராவிடர் நல விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்ராம்பள்ளி ஒன்றியம், சங்கராபுரத்தில் ஆதிதிராவிடர் மாணவ மாணவியர் விடுதி எதுவும் தற்போது செயல்படவில்லை. தற்காலிக விடுதி தொடங்கப்பட்ட பின்புதான் விடுதி கட்டுவதுபற்றி எதிர்வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிக விடுதியையாவது வருகிற ஆண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிக விடுதியை எதிர்வரும் ஆண்டில் அந்த இடத்தில் அவசியம் தேவைதானா என்பது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆரூண் ரஷீத், நாட்ராம்பள்ளியைப்பற்றிக் கேட்கப் போகிறீர்களா?

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** என் தொகுதியைப்பற்றிக் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள்.

வினா எண் 379, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 13]

**379--**

**ஆதிதிராவிடர் மாணவர் விடுதி**

***9611--திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தாம்பரம் தொகுதி, கிழக்குத் தாம்பரத்தில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி வாடகைக் கட்டடத்தில் இயங்குவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிதிநிலைமைக்கேற்ப வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சென்னைக்கு புறநகர்ப் பகுதி என்பதால் தரமான கட்டடங்கள் வாடகைக்குக் கிடைப்பதில்லை. மிக மோசமான கட்டடத்தில் இயங்கி வருவதால், முன்னுரிமை கொடுத்து, இந்த ஆண்டே கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நகர்ப்புறம் என்ற காரணத்தால் இடம் தேர்வு செய்வது சற்று சிரமம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார். இருந்தாலும் அந்த விடுதிக்கு அவசியம் கட்டடம் தேவைப்படுகிறது என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. ஆகவே முன்மொழிவு வரப்பெற்றால் அதற்குரிய கட்டடம் கட்டுவதற்கு ஆய்வு செய்யப்படும். எதிர்வரும் ஆண்டில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 ஏப்ரல் 13

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஆதிதிராவிடர் நலத் துறை விடுதிகள் இருக்கின்றன. நெற்குன்றம் பகுதியிலும், அம்பத்தூர் பகுதியிலும் இருக்கின்றன. அவை வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. அந்தக் கட்டடங்களை வாடகைக்கு அளித்தவர்கள் அவற்றைக் காலி செய்வதற்கான முயற்சியைச் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே ஏழை, எளிய சிறுவர்களுடைய நலனைக் கருத்தில்கொண்டு ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பிலே அங்கே சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படுமா என்பதை நான் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள்மீது அதிக அக்கறை கொண்டுள்ள தமிழக அரசு கடந்த 3 ஆண்டுகளில் 81 விடுதிகளைக் கட்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர், குறிப்பாக, அவருடைய தொகுதியில் எந்த இடத்திலே கட்டடம் அவசியமாகத் தேவைப்படுகிறது என்று தெரிவித்தால் அதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே கட்டடம் கட்டுவதற்கு உரிய இடத்தைத் தருவதற்கு நகராட்சி தயாராக இருக்கிறது. அப்படித் தந்தால் இந்த ஆண்டே கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி அந்த இடத்தைத் தந்தால் அதுகுறித்து ஆய்வு செய்யப்படும். இந்த ஆண்டே கட்டடம் கட்டிக் கொடுக்கப்படுமா என்று கேட்பதற்கு நிதி ஆதாரம் இல்லை. எதிர்வரும் ஆண்டில்தான் அது பரிசீலிக்கப்படும்; நிதி நிலைக்கு ஏற்பதான் முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 ஏப்ரல் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மதுரையில், குறிப்பாக கிழக்குத் தொகுதியில் பாலரங்கபுரம் மருத்துவமனை அருகே புதிதாக ஒரு விடுதி கட்டப்படும் என்று ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள். அந்த விடுதி எப்போது கட்டப்படும்? இந்த ஆண்டு கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டே பாலரங்கபுரத்தில் மாணவர் விடுதி கட்டப்படும் என்று தெரிவித்திருந்தேன். மதுரை கிழக்குத் தொகுதியில் உள்ள பாலரங்கபுரத்தில் இடம் இல்லாத காரணத்தால் அந்த மாணவர் விடுதி மதுரை மேற்குத் தொகுதியில் உள்ள சொக்கிகுளத்தில் கட்டப்பட்டு வருகிறது. விரைவில் அந்தக் கட்டடம் திறக்கப்பட இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 380, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**380--**

**மீனவர்களுக்குப் பயிற்சிப் பள்ளி**

*20994--**திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னையில் மீனவர்களுக்கு ஒரு பயிற்சிப் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஏற்கெனவே சென்னையில் மீனவர் பயிற்சி நிலையம் 1961 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, ஆண்டுதோறும் 50 மாணவர்களுக்கு நவீன மீன்பிடிப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

[1999 ஏப்ரல் 13

(ஆ) ஏற்கெனவே சென்னையில் மீனவர் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருவதால் இக்கேள்வி எழாது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அங்கே பயிற்சிப் பள்ளி இருப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பயிற்சிப் பள்ளியிலே எவ்வளவு மாணவர்கள் ஆண்டுதோறும் தேர்வு செய்யப்படுகிறார்கள், எத்தகைய பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் இன்றைய நிலையிலே தமிழகத்தை கடல் சூழ்ந்து இருக்கின்ற காரணத்தால், மீன் வளம் இருக்கின்ற காரணத்தால் அதிகமான அளவில் மீன்பிடித் தொழிலைச் செய்து, ஏற்றுமதி செய்து, நாட்டினுடைய பொருளாதாரத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதேநேரத்தில், கடலில் மீன்பிடிக்கச் செல்லக்கூடியவர்கள், மழைக் காலங்களிலேயும், புயல் நேரங்களிலேயும் அல்லது இலங்கை கடற்படையால் கடத்திச் செல்லப்படக்கூடிய அபாயம் ஏற்படக்கூடிய காரணத்தினாலும் அவர்களைப் பாதுகாக்கக்கூடிய வகையிலே ஒரு பயிற்சியையும், கடலோர மீனவர்கள், உள்நாட்டு மீனவர்கள் எல்லாம் மீன்பிடித் தொழிலில் அதிகமாக ஈடுபடுவதற்கு, பெரியவர்கள் செய்த அந்தத் தொழிலை வரக்கூடிய காலங்களில் இளைஞர்கள் செய்ய முன்வராததால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற வகையில் இன்னும் சிறந்த முறையில் பயிற்சி அளித்து ஊக்குவிப்பதற்காக, மேலும் ஒரு பள்ளியைத் தொடங்குவதற்கோ அல்லது கூடுதலாகப் பயிற்சியாளர்களைத் தேர்வு செய்வதற்கோ, அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பயிற்சி நிலையங்கள் தமிழ்நாட்டில் கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, குளச்சல், மண்டபம் போன்ற பகுதிகளில் இருக்கின்றன. இந்த நவீன மீன்பிடிப் பயிற்சி பெற மீனவனுக்கு எழுதப்படிக்கத் தெரிந்தால் போதும். 18 வயது முதல் 35 வயது நிரம்பியிருக்க வேண்டும். சிறுதர கம்மியர் பயிற்சி பெறுவதற்கு 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இவர்களுக்கு அரசு 150 ரூபாய் உதவிப் பணம் வழங்கி வந்தது. 9-10-1998 முதல் அது 200 ரூபாயாக அதிகரித்துக் கொடுக்கப்படுகிறது. ஒரு முறை மீனவர் கடலுக்குப் பயிற்சி பெறச் செல்லும்போது 1¼ ரூபாய் வழங்கப்பட்டது. இப்போது அது இரண்டு ரூபாய் 50 பைசாவாக வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சியில்



1999 ஏப்ரல் 13]

சற்றேறக்குறைய 50 மாணவர்களைச் சேர்த்துக்கொள்கிறோம். அதற்குமேலும் விண்ணப்பித்தால் அதையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் வருகின்ற மாணவர்கள் குறைவாகவே இருக்கின்றார்கள். யார் வந்தாலும் நாங்கள் இந்தப் பயிற்சியை அளிப்பதற்கு முன் வருகிறோம். மேலும் மாண்புமிகு உறுப்பினர் இன்னொரு கேள்வியையும் கேட்டிருக்கிறார். நமது மீனவர்களை இலங்கைக்குப் பிடித்துச் செல்வதைத் தடுத்து, பாதுகாக்கக்கூடிய வகையிலே பயிற்சி அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். பாதுகாப்போடு மீனவர்கள் மீன்களை எப்படிப் பிடிக்க வேண்டுமென்றுதான் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் அவர்களைப் பாதுகாக்க பல வழிகளில், பல பாதுகாப்பு வசதிகளை இந்த அரசு ஏற்படுத்தித் தந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு

### மேலூர் கூட்டுறவு நூற்பாலை இயங்காததால் தொழிலாளர்கள் வேலையிழப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. நா. பெரியசாமி.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அடுத்த நிகழ்ச்சிக்கு வந்துவிட்டேன், நீங்கள் உட்காருங்கள். தினமும் இப்படி நடந்து கொள்வதை நான் அனுமதிக்க முடியாது. நீங்கள் சட்டமன்ற உறுப்பினராக, முறையாக நடந்து கொள்ளுங்கள். நான் இன்னொரு உறுப்பினரைப் பேசுவதற்கு அழைத்துவிட்டேன். நீங்கள்

[பேரவைத் தலைவர்] [1999 ஏப்ரல் 13

உட்காருங்கள். இப்போது உறுப்பினர் பெரியசாமி அவர்கள் பேசியதற்குப் பிறகுதான் நான் யாரையும் பேசுவதற்கு அனுமதிக்க முடியும், நீங்கள் உட்காருங்கள். திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், மேலூர் கூட்டுறவு நூற்பாலை இயங்காததால், 650 தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

***மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளை இலாபகரமாக இயக்குவதற்கும், மூடியுள்ள கூட்டுறவு நூற்பாலைகளைத் திறப்பதற்கும் அரசு ஒரு சிறப்பான புனரமைப்புத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. அத்திட்டத்தின்படி, "NABARD" வங்கியின் மூலம் நடைமுறை மூலதனம் பெறப்படும் எனவும், தொழிலாளர்கள் விஞ்ஞான அடிப்படையில் வேலைப்பளுவும், மூன்றாண்டுகளுக்கு ஊதிய உயர்வு முடக்கம் மற்றும் 5 ஆண்டுகளுக்குப் புதிய பணி நியமனங்கள் நிறுத்தி வைத்தல் ஆகிய நிபந்தனைகளுக்கு ஒப்பந்தம் அளித்தல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, நடைமுறை மூலதனம் குறித்துத் தயார் செய்து அனுப்பிய பிரேரணையை மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி NABARD-க்குப் பரிந்துரை செய்யாததால், அந்தப் பிரேரணையை NABARD-க்குப் அனுப்ப முடியவில்லை. மேலும் தொழிலாளர்கள் தங்களின் பங்களிப்பிற்கு நிர்வாகத்துடன் ஒப்பந்தம் செய்ய மறுத்தமையினால் 4-1-1999 முதல் ஆலை இயங்காமல் உள்ளது. ஆனால் தற்போது தொழிற்சங்கங்கள் அனைத்து நிபந்தனைகட்கும் உட்பட்டு ஒப்பந்தம் செய்ய முன்வந்துள்ளன. இந்தக் காரணத்தால் ஆலையினை மீண்டும் திறப்பதுகுறித்து தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரகத்திலிருந்து தொழிலுறவு ஆலோசகர் மற்றும் தொழில்நுட்ப ஆலோசகர் ஆகியோர்



1999 ஏப்ரல் 13] [திரு. என்.கே.கே. பெரியசாமி]

அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களின் அறிக்கையின் அடிப்படையில் மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையைத் திறந்து நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகள் இலாபகரமாக இயங்காமல் போனதற்கு கடந்த கால ஆட்சியிலே ஏற்பட்ட ஊழல்தான் முழுமுதற் காரணமாகும்.

## 3. தகவல் கோரல்

### (அ) கவன ஈர்ப்புக்கான அமைச்சரின் அறிக்கை அவையில் வைக்கப்படாதது

**திரு. ஆர். சொக்கர்:** I am on a Point of Order. Hon'ble Speaker Sir, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறுகின்றார்கள். நாங்கள் தேடியவரையில், இங்கே விவர அறிக்கை இல்லை என்பதைத் தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றைக்கு உங்களுக்கு வழங்கப்பட்ட Papers-- உடன் இருக்கிறது. அதை நீங்கள் வீட்டிலே விட்டுவிட்டு வந்துவிட்டீர்கள். நேற்றைக்கு Agenda-விலே இருந்தது; இன்றைக்கு அது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு வேளை இருக்குமானால், அருள்கூர்ந்து, இதுபோன்ற நேர்வுகளில், விவாதத்திற்கு வரும்போது அது இருப்பதற்கான ஏற்பாடுகளை நீங்கள் செய்தால், நாங்கள் நன்றியுடையவர்களாக இருப்போம்.

## 2. கவன ஈர்ப்பு--தொடர்ச்சி

### மேலூர் கூட்டுறவு நூற்பாலை இயங்காததால் தொழிலாளர்கள் வேலையிழப்பு--தொடர்ச்சி

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

[1999 ஏப்ரல் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், உறுப்பினர் முதலில் பேசட்டும்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் இலாபகரமாக இயங்காமல் போனதற்கு கடந்த ஆட்சியின் ஊழல்தான் மிக முக்கியமான காரணம். அதுமட்டுமல்லாமல், அந்தக் காலத்திலே முறையற்ற நிர்வாகம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வினாவாகக் கேளுங்கள்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில காரணங்களைத் தெரிவித்த பின்னர்தான், வினாவை எழுப்ப வேண்டிய அவசியம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காரணங்கள்தான் அமைச்சருக்குத் தெரியுமே; நீங்கள் என்ன புதிதாகச் சொல்லப் போகிறீர்கள்?

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் காரணங்களைச் சொன்னால்தான் அரசு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வினாவைக் கேளுங்கள்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகளில் ஏற்பட்டிருக்கிற நஷ்டத்திலிருந்து அவற்றை மீட்டு, இலாபகரமாக இயக்குவதற்கு நம்முடைய அரசு வந்ததற்குப் பிறகு, பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அது சாதாரண முயற்சி அல்ல; அசுர முயற்சி. அந்த அசுர முயற்சியால், அரசு NABARD-லேயிருந்து கடன் வாங்கி, அதன்மூலமாக இலாபகரமாக இயக்குவதற்கு ஒரு முயற்சி எடுக்கிறது. மற்றொரு முயற்சி, தொழிலாளர் தரப்பிலேயிருந்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்கிறது. தொழிலாளர் தரப்பிலேயிருந்து ஒத்துழைப்பு என்பது, ஆண்டுதோறும் 10 சதவிகித ஊதியத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும். மூன்று ஆண்டுகளுக்கு அப்படிக் குறைத்துக் கொண்டால், பிறகு அடுத்துவரும் மூன்று ஆண்டுகளில் அது திருப்பித் தரப்படும் என்றும் ஒரு முன்மொழிவு முதலிலே தெரிவிக்கப்பட்டது. ஆனால் அந்த முன்மொழிவு என்ன காரணத்தினாலோ கைவிடப்பட்டு, இப்போது ஊதிய முடக்கம் என்கிற ஒரு முன்மொழிவு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட,



1999 ஏப்ரல் 13] [திரு. நா. பெரியசாமி]

பஞ்சாலைத் தொழில் நெருக்கடி குறித்து, பஞ்சாலைச் சங்கங்களோடு பேசுகின்றபோது, பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டு இருக்கிற நெருக்கடி முழுமையையும் தொழிலாளர்கள் தலையில் சுமத்த இந்த அரசு அனுமதிக்காது என்பதைத் தெரிவித்து இருக்கிறார்கள்; கொள்கை நிலையைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். எனவே அந்த அடிப்படையிலே, தொழிலாளர் தரப்பிலே மட்டும் சுமையைச் சுமத்தக் கூடாது. குறிப்பிட்ட இந்த ஆலை 4-1-1999 முதல் இயங்காமல் இருக்கிறது. அதற்கு முன்பாகவும் சொற்ப அளவிலேதான் இயங்கியது. இதிலே இரண்டு, மூன்று பிரச்சினைகள் இருக்கின்றன. கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள், தங்களுக்கு நூல் வேண்டுமென்று D.D. அனுப்பி, அந்த D.D. அந்த ஆலையிலே சிக்கிக் கொண்டது. பஞ்சு வியாபாரிகள், பஞ்சு கொடுத்ததற்குப் பணம் வராமல் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் முறைப்படுத்தி, விரைவிலே இந்த ஆலையைத் திறந்து, 650 தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதோடு, ஆலைத் தொழிலாளர்களுடைய வேலையைப் பாதுகாப்பதோடு, பருத்தி வியாபாரிகளின் குறையைத் தீர்க்கவும், கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றவும் அமைச்சர் அவர்கள் என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மேலூர் நூற்பாலை கடந்த 4-1-1999 முதல் உற்பத்தி செய்யாமல், இயக்கத்தில் இல்லாமல் இருக்கிறது. இதையொட்டி, மேலூர் சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு இராசமாணிக்கம் அவர்கள், தொழிற்சங்கங்கள் சில முறைகளை ஒத்துக் கொண்டிருக்கின்றன என்று தெரிவித்ததன்பேரில், 20-2-1999 அன்று தொழிற்சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை சட்டமன்ற உறுப்பினருடைய தலைமையிலேயே அங்கே நடைபெற்றது. அப்படி நடைபெற்றபோது, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, இந்த ஊதிய உயர்வு, ஊதிய முடக்கம் அல்லது அதற்கு வெவ்வேறு அர்த்தங்கள் இதிலே சொல்லப்பட்டாலும், அரசின் தரப்பிலே சொல்லப்பட்ட ஒரே கருத்து 3 ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வு கேட்கக் கூடாது. 5 ஆண்டுகளுக்குப் புதிய நியமனம் உருவாக்கப்படக் கூடாது.

ஏனென்றால், 'SITRA' பரிந்துரை அடிப்படையிலே, ஒரு நூற்பாலையினுடைய தொழிலாளருடைய சம்பளம் 8 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதம்தான் இருக்க வேண்டும். இந்த ஆலையைப் பொறுத்தவரையில், அது 33 சதவிகிதமாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், 632 பேர்களில் 302 பேர்கள் தேவைக்கு மேல் அங்கே பணியிலே ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். இதிலே, நம்முடைய தொழிலாளர் சங்கங்களோடு பேச்சுவார்த்தையில் ஒரு சங்கம் சில நிபந்தனைகளைப் போட்ட காரணத்தால் தொழிலாளர்களோடு அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றமுடியாமல் போய்விட்டது. அந்தச் சங்கம், எந்தச் சங்கம் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும். அவர் அதை முழுமையாக எடுத்து அதிலே ஈடுபட்டு அதைச் செய்து தர வேண்டும் என்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. கடந்த காலத்திலே பஞ்சு பாக்கி, P.F. பாக்கி, Sales Tax பாக்கி என்று இப்படி பல பிரச்சினைகள் ஒரு பக்கம் இருந்தாலும்கூட, மதுரை மத்திய கூட்டுறவு வங்கி பரிந்துரை செய்யாத காரணத்தால் NABARD-க்கு நமது அரசு, நமது முதல்வர் அவர்கள் அறிவித்த 185 கோடி ரூபாய் புனரமைப்புத் திட்டத்திற்கு இந்த ஆலையினுடைய பரிந்துரையை அனுப்ப இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. விரைவில் தொழிற்சங்கத்தினுடைய பிரச்சினைகளைத் தீர்க்க--அதாவது 3 ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வு இல்லை என்ற நிபந்தனையையும், புதிய நியமனம் 5 ஆண்டுகளுக்கு இல்லை என்ற நிபந்தனையையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில்--நீங்கள் நடவடிக்கை எடுத்தால் நிச்சயமாக அரசு அதைத் திறப்பதற்குரிய அனைத்து வழிமுறைகளையும் பின்பற்றத் தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் தெரிவிக்க வேண்டும். இந்தியாவிலே இருக்கின்ற 1,239 நூற்பாலைகளில் 801 நூற்பாலைகள் தமிழகத்திலே இருக்கின்றன. ஆகையினால், 50 சதவிகிதத்திற்கு மேல் நூற்பாலைகள் தமிழகத்திலேயே இருப்பதை நாம் அறிவோம். ஆனால், அதேநேரத்திலே இன்று, தமிழகத்தில் தொடர்ந்து தினம் தினம் ஆலைகள் மூடப்பட்டு வருகின்ற காரணத்தால் எங்களுக்கே புள்ளிவிவரங்கள் தெரியவில்லை. ஏறத்தாழ 40 பெரிய நூற்பாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. சிறிய நூற்பாலைகள் 75-க்கும் மேற்பட்டவை மூடப்பட்டிருக்கின்றன. ஆகவே 'SITRA' பரிந்துரை அடிப்படையிலே,





சம்பளம் 8 முதல் 12 சதவிகிதம் என்ற அந்த அடிப்படையிலே இல்லாமல் போனாலும் பரவாயில்லை, இருக்கிறவர்களை ஒழுங்குபடுத்தி பொருளாதார ரீதியாக அதிலே ஒரு வலுவை உண்டாக்கினால்தான் அந்த ஆலையை நிச்சயமாகத் திறப்பதற்குரிய வாய்ப்பும் வழியும் உண்டு. அதற்கு உங்களுடைய முழு ஒத்துழைப்பை எங்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய வங்கியிடம் பேச்சுவார்த்தை நடத்தி அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதையொட்டி தொழிற்சங்கத்துடன் ஒப்பந்தம் ஏற்பட்டால்தான் NABARD மூலம் அதற்கு வேண்டிய உதவியைப் பெற்று இந்த ஆலையைத் திறந்து சிறப்பாக இடையிலே தடைபடாமல் ஓட்டமுடியும் என்பதை நான் விவரமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல்--தொடர்ச்சி

### (ஆ) பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பான வழக்கில் உயர்நீதிமன்றத்தின் நடவடிக்கை

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமரைக்கனி விஷயத்தைப் பொறுத்தவரையில்.... *(மணியடிக்கப்பெற்றது).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், நான் அனுமதிப்பது போல் பேச வேண்டும். இல்லையென்றால், உங்கள் பேச்சு அவைக் குறிப்பிலே ஏறாது. அதை முதலில் சொல்லிவிடுகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்தக் வழக்கானது உயர்நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கிறது. அதுசம்பந்தமாக, சட்டமன்றச் செயலாளரும், சட்டமன்ற சபாநாயகர் அவர்களும் 12 ஆம் தேதிக்கு முன்பாக 'Courtக்கு நீங்கள் எடுத்த நடவடிக்கையின் விளக்கத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று ஒரு Notice கொடுத்திருக்கிறது. ஆகவே சபாநாயகர் அவர்கள் Court-ஐ மதித்து, அவர்களுக்குச் சட்டமன்ற நிகழ்ச்சிகளைக் கொடுத்திருக்கிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 13

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தினமும் உங்கள் பெயர் செய்தித்தாளிலே வர வேண்டும் என்று இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டீர்கள் என்றால், நிச்சயமாக உங்கள்பேரில் நான் நடவடிக்கை எடுப்பேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் என்ன காரணத்திற்காக இதைச் சொல்கிறேன் என்பதைப் பிறகு சொல்கிறேன், உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்கள் இப்படிப் பேசக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படித்தான் நான் சொல்வேன்; நீங்கள் உட்காருங்கள். நான் உட்காரச் சொன்னால் நீங்கள் உட்கார வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் கேட்டதில் என்ன தப்பு என்பதைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன தப்பு என்பதை இப்போது நான் உங்களுக்குச் சொல்லப்போகிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அவையிலே வந்து இந்த உறுப்பினர் என்னிடம் கேட்டார், உயர்நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது; உங்களுக்கு summon வந்திருக்கிறதா; செயலாளருக்கு வந்திருக்கிறதா என்று. நான், கால் மணி நேரம் விளக்கமாகச் சொல்லியாகிவிட்டது. இந்தப் பேரவையின் இறையாண்மையைக் காப்பாற்றுவதற்காக நான் நிச்சயமாக இந்த summon-ஐ ஏற்றுக்கொள்ள மாட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப்பிறகு, செயலாளரைப் பற்றியும் விளக்கமாகச் சொன்னேன். என்னுடைய துறையிலே ஏராளமான ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பதவி வகிப்பு காரணமாக வழக்குப் போட்டால், செயலாளர் மீதுதான் வழக்குப் போடுகிறார்கள். அந்த வழக்கை நீதிமன்றத்திலே விசாரிக்கிறார்கள். செயலாளரும் நீதிமன்றத்திற்குப் போகிறார். அங்கே, பேரவைத் தலைவர் என்கிற முறையில் நான் போட்ட சில உத்தரவுகளைக்கூட நீதிமன்றத்திலே மாற்றுகிறார்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இது பேரவை உரிமைப் பிரச்சினை. ஆகையினால், செயலாளரும் நீதிமன்றத்திற்குச் சென்று பதில் சொல்லமாட்டார் என்று ஏற்கெனவே அறிவித்துவிட்டேன். நீங்கள் சம்பவம் நடந்த அன்று அவையிலே இல்லை என்றும்



1999 ஏப்ரல் 13] [பேரவைத் தலைவர்]

சொல்லிவிட்டேன். இவ்வளவு விளக்கமாக நான் அவையிலே சொன்னபிறகும், நிச்சயமாக செய்தித்தாளிலே பெயர் வர வேண்டும் என்பதற்காக இப்படி வந்து அவையிலே எழுந்து நின்று கேட்பதை நான் கடுமையாகக் கண்டிக்கிறேன். இனிமேலும் பேசினால், நடவடிக்கை எடுப்பேன்; உட்காருங்கள். டாக்டர் கிருஷ்ணசாமி. (குறுக்கீடு) திரு. சுந்தரம், நான் உங்களைப் பேச விடமாட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு). உங்களுக்கு அனுமதி கிடையாது, உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள்; இல்லையென்றால் வெளியேற்றுவேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்; உங்களைப் பேச விடமாட்டேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒரே ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த clarification-ஐயும் பேச விடமாட்டேன். உட்காருங்கள்.

### (இ) புதிய தமிழகம் கட்சி சார்பாகவும், ஆர். எஸ். எஸ். இயக்கத்தின் சார்பாகவும் நடைபெறும் பேரணிகளுக்கு அனுமதி மறுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏப்ரல் 14, அண்ணல் அம்பேத்கர் பிறந்த தினத்தன்று அந்த நாளை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக, அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் பேரணியாக நடத்த, கடந்த மார்ச் 14-15 ஆகிய தேதிகளில், புதிய தமிழகம் கட்சியினுடைய உயர்மட்டக் குழுக் கூட்டம் எடுத்த முடிவின்படி, 20 நாட்களுக்கு முன்பாகவே, Police Commissioner-ன் அனுமதியைக் கேட்டிருந்தோம். பேரணிக்கான ஏற்பாடுகளைக் கடந்த 30 நாட்களாக எங்களுடைய தொண்டர்கள், தமிழ்நாடு முழுவதற்கும் செய்து விட்டார்கள். இந்த நிலையில், நாளை காலை 11 மணிக்குப் பேரணி நடத்தக்கூடிய வேளையில் இன்று காலை பத்திரிகையிலே பேரணிக்கு அனுமதி இல்லை என்று செய்தி வந்திருக்கிறது. கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், ஆளுநர் மாளிகையை நோக்கியும், கோட்டையை நோக்கியும் ஏறத்தாழ 10 முறைக்கு மேலாகப் பேரணி நடத்தியிருக்கிறோம். எந்தப் பேரணியிலும் சிறு அசம்பாவிதம்கூட நடக்கவில்லை. எனவே இந்தப் பேரணியிலேயும் எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்காது. ஏற்கெனவே, கடந்த 1997ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஓர் அனுமதி கேட்டீர்கள். Police Commissioner அதற்கு உத்தரவு தர மறுத்துவிட்டார். அதைத்தானே சொல்கிறீர்கள்? இதற்கு மேலே பேரவைத் தலைவர், Commissioner-க்கு அனுமதி கொடுங்கள் என்று உத்தரவு போட முடியாது. நீங்கள் Commissioner போட்ட உத்தரவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வெளிநடப்புச் செய்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போகலாமே தவிர, நீங்கள் இங்கே இருந்துகொண்டு அதைப் பேசிக் கொண்டிருப்பதிலே அர்த்தம் இல்லை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் வெளிநடப்புச் செய்யவில்லை. முதலமைச்சரிடத்திலே விளக்கம் கேட்கிறேன். இதைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லிவிட்டீர்கள். இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள்தான் சொல்லிவிட்டீர்களே? Commissioner-இடம் கேட்டோம்; Commissioner அனுமதி கொடுக்கவில்லை என்று சொல்லிவிட்டீர்கள். பிறகு என்ன கேள்வி இருக்கிறது. எனக்கு இதிலே என்ன பிரச்சினை என்றால், (குறுக்கீடு) இருங்கள். இதிலே என்ன பிரச்சினை என்றால், திரு. சுந்தரம் அவர்களுக்குச் சொன்னதுதான் உங்களுக்கும். பலபேர் பல பிரச்சினைகளைப் பற்றி, மாண்புமிகு முதலமைச்சரை, என்னுடைய அறையிலே பார்த்துக் கேட்கிறார்கள். பல நேரங்களிலே, முதலமைச்சரிடம் நான் தனியாகப் பேசுவதற்குக்கூட வாய்ப்புக் கிடைக்காமல் போகிறது. அதனால் பரவாயில்லை; உறுப்பினர்களுடைய உரிமையை நாம் கெடுக்கக் கூடாது என்று இருந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் என் அறையில், முதலமைச்சரிடம் கேட்டீர்கள்; அவர் பதில் சொல்லிவிட்டார். இப்போது திரும்பவும் இங்கே அதைக் கேட்டு, அதை record செய்வதற்குப் பேசுவது மாதிரிதான் எனக்குத் தோன்றுகிறது.

*முற்பகல் 10-45*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** கோரிக்கையைச் சொல்லி முடித்துவிடுகிறேன். 1997ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6ஆம் தேதிய பேரணிக்குக்கூடத் தடையை விதித்தார்கள். நாங்கள் Court-க்குப் போய் உத்தரவு வாங்கி வந்து, அந்தப் பேரணியைக்கூட மிக



அமைதியாக நடத்தினோம். எனவே இதில் எங்களுக்கு கௌரவப் பிரச்சினை எதுவுமில்லை. நாங்கள் ஆளுநர் மாளிகையை நோக்கிப் போவதில் வேறு எந்தவித நோக்கமுமில்லை. சில பேரணிகளைக் கோட்டையை நோக்கி நடத்துகிறோம். சில பேரணிகளை ஆளுநர் மாளிகையை நோக்கி நடத்துகிறோம். இது அம்பேத்கர் பிறந்த நாள் அன்று நடத்துகிற பேரணி. எனவே அந்தப் பேரணி அமைதியாக நடக்க வேண்டும். எப்படி நீங்கள் அண்ணாவைத் தலைவராக கொண்டு அண்ணா பிறந்தநாள் என்று விழா எடுக்கிறீர்களோ, அதேமாதிரி அம்பேத்கரைத் தலைவராகக் கொண்டவர்கள், அம்பேத்கர் பிறந்த நாளன்று பேரணி நடத்துவதற்கு, நீங்கள் அனுமதி அளிக்க வேண்டும். அதற்கு முதலமைச்சர் அவர்கள் ஆணையர் போட்ட உத்தரவை இரத்து செய்து, ஊர்வலத்திற்கு அனுமதி அளித்து ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அனைத்துக் கட்சி கூட்டத்திலே இதுகுறித்து முடிவு எடுத்த மாதிரி ஒவ்வொரு முறையும் காவல் துறை பதில் சொல்கிறார்கள். அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே புதிய தமிழகம் கட்சிக்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்று எந்த முடிவும் எடுக்கவில்லை. அதுபோல நீங்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுக்கக்கூடிய எந்த இயக்கத்திற்கும் பேரணியை மறுக்கக் கூடாது. ஒடுக்கக் கூடியவர்களையும், ஒடுக்கப்படக்கூடியவர்களையும் வித்தியாசம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்களுடைய கட்சியின் பெருமையைப் பற்றிப் பேசுவதற்கு நான் இங்கே அனுமதி கொடுக்க முடியாது. யார் கட்சியை நடத்தினாலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு என்று சொல்வார்கள். உங்களுக்கு மாத்திரம் அதைச் சொல்ல உரிமை கிடையாது. நீங்கள் கருத்தினைச் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு).

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை தமிழ்ப் புத்தாண்டு 52-ஆவது நூற்றாண்டு என்று சொல்கிறார்கள். அந்த விழாவையொட்டி ராஷ்ட்ரிய சுய சேவை சங்கமானது அணிவகுப்பு ஊர்வலம்....

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பேத்கர் பிறந்த நாள் விழா பேரணிக்குத் தடை விதிக்க இந்த அரசு நிச்சயமாக விரும்பாது. ஆனால்

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 ஏப்ரல் 13

செய்யப்பட்டுள்ள விளம்பரங்கள்--நேற்று மாலையிலேகூட பத்திரிகையில்--2001-ல் தமிழக முதல்வர் கிருஷ்ணசாமி அவர்களுடைய தலைமையில் பேரணி நடப்பதாக வந்திருக்கிறது. அதிலேகூட எங்களுக்கு ஆட்சேபணையில்லை. 2001-லே வந்தாலும் சரி, 2000-ல் வந்தாலும் சரி முதலமைச்சராக, வரவேற்கிறோம். ஆனால் ஆளுநர் மாளிகைக்குச் சென்று அங்கே கோரிக்கை வைத்து, அவர்மீது போடப்பட்டிருக்கின்ற வழக்குகள் எல்லாம் பொய்யானவை, தவறானவை என்கின்ற கோரிக்கை வைத்து ஊர்வலம் நடத்தப் போவதற்கும், அம்பேத்கர் விழாவிற்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குத் தெரியவில்லை. அம்பேத்கர் விழா என்றால் ஓரிடத்திலேயிருந்து புறப்பட்டு அம்பேத்கர் சிலைக்குச் சென்று அங்கே மாலை அணிவிப்பது அல்லது அம்பேத்கர் சிலையிலிருந்து புறப்பட்டு, ஓரிடத்திலே போய், பொதுக்கூட்டம் நடத்துகிற இடத்திலே போய் கலைவது அல்லது அங்கே போய்க் கூட்டம் நடத்துவது என்றிருந்தால் சரியாக இருக்கும். அதைவிடுத்து, அம்பேத்கர் சிலையிலிருந்து புறப்பட்டு, ஆளுநர் மாளிகைக்குச் செல்வோம் என்று கூறுவது எப்படி அம்பேத்கர் விழாவிற்கான பேரணியாக அமைய முடியும் என்பது எனக்குத் தெரியவில்லை.

அதேபோலத்தான் இங்கே வேலாயுதன் குறிப்பிட்டார். R.S.S. ஊர்வலம் 14ஆம் தேதி நடக்கும் என்று நேற்றைக்குக்கூட தங்களுடைய அறையிலேதான் என்னிடத்திலே அந்தக் கோரிக்கையைக் கொடுத்தார். நான் உடனே அதையும் காவல் துறைக்கு அனுப்பி வைத்துவிட்டேன். காவல் துறை சென்னையில் ஒரே நாளில் நடைபெறுகிற நிகழ்ச்சிகளான-ஆளுநர் மாளிகைக்குச் செல்கின்ற ஊர்வலம்-- கிருஷ்ணசாமி அவர்களுடைய ஊர்வலம்; R.S.S. ஊர்வலம்; வேதங்களை எரிக்கின்ற ஒரு நிகழ்ச்சி பெரியார் திராவிடர் கழகத்தால் நடத்தப்படுவது அது, இவை அனைத்திற்கும் சேர்த்து ஒரே நாளிலே இவை நடத்தப்படக் கூடாது என்பதற்காக காவல் துறை தடை விதித்திருக்கின்றது. காவல் துறையும் சுயேச்சையாக இயங்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். சுயேச்சையாக இயங்கினால் உடனே முதலமைச்சர் அவர்கள் அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் சொல்கிறீர்கள். இதுதான் என்னுடைய நிலை, விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.



1999 ஏப்ரல் 13]

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் நாளை, அம்பேத்கர் பிறந்த நாளன்று ஊர்வலம் வைப்பதாகச் சொல்லி இருக்கின்றார்கள். அம்பேத்கர் இந்த நாட்டின் அரசியல் சட்டத்தை வகுத்துத் தந்து, நமக்கெல்லாம் அரசியல் வாழ்வு கொடுத்தவர் என்ற முறையில் நாம் அத்தனை பேரும் அதை ஆதரிக்க வேண்டுமென்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனால் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். அது என்னவென்று சொன்னால், நாளை அம்பேத்கர் அவர்களுடைய பெயரால் நடக்கின்ற ஊர்வலத்தை ஒரு நல்ல ஊர்வலமாக நடத்தி அதில் எந்தவிதமான கோரிக்கையினையும் விடுக்காமல் விழாவாக நடத்துவதற்கு நீங்கள் முதலமைச்சர் அவர்களிடம் அனுமதி கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல அந்த ஊர்வலத்திற்கு முதலமைச்சர் அவர்களும் அனுமதி கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எத்தனையோ முறை கோட்டைக்குப் பேரணி நடத்தி முதலமைச்சர் அவர்களைப் பார்த்திருக்கிறேன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இதிலே நான் விவாதம் நடத்த முடியாது. முதலமைச்சர், அவர்களுடைய நிலையைத் தெரிவித்துவிட்டார்கள். அதை ஏற்றுக்கொள்வதாக இருந்தால் ஏற்றுக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால், உங்களுடைய எதிர்ப்பைத் தெரிவியுங்கள்.

முற்பகல் 10–50

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே முடிவு எடுத்த மாதிரி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதைக் கேட்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். முதலமைச்சர் அவர்கள், காவல் துறையினர் சுதந்திரமாகச் செயல்படுகிறார்கள் என்று சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) நீங்கள் தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்? இது சட்டமன்றமா அல்லது வேறு ஏதாவது நிகழ்ச்சியா? நீங்கள் தகவல் கேட்டீர்கள். முதலமைச்சர் பதில் சொல்லியாகிவிட்டது. இனிமேல் அனுமதி கிடையாது. நான் இனிமேல் உங்களுக்கு அனுமதி கொடுக்க முடியாது.

[1999 ஏப்ரல் 13

# 4. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

**கோரிக்கை எண் 31-பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999-2000 ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 31-பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 106,76,96,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி சொல்வது இனிமேல் அவைக் குறிப்பிலே ஏறாது. நீங்கள் பேசுவதை இனிமேல் அவைக்குறிப்பிலே ஏற்றமாட்டேன்.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி தொடர்ந்து நின்று கொண்டிருந்தார்.)

வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4691, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக் கல்லூரிக்கு கூடுதல் கட்டடம் கட்டி மாணவர் எண்ணிக்கையை இரட்டிப்பு ஆக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 106,76,96,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



1999 ஏப்ரல் 13]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு அனுமதி கொடுக்க முடியாது, உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எனக்குத் தெரியாது. நீங்கள் பேசுவது அவைக் குறிப்பிலே ஏறாது என்று சொல்லியாகிவிட்டது. பேரவைத் தலைவரின் உத்தரவைக் கேட்டு நீங்கள் உட்கார வேண்டும்.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

வெட்டுத் தீர்மானம் எண் 2023, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அதிகப்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 106,76,96,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4312, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 106,76,96,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3367, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அதிகப்படுத்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 106,76,96,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4631, திரு. ப. ரங்கநாதன்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள உப்பரா, உப்பிலியா, சகரா ஆகிய இன மக்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 106,76,96,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4487, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகையில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 106,76,96,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4446, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 106,76,96,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2982, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் தொகுதியில், அய்யம்பேட்டை, சோழபுரம் பேரூராட்சிகளில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் புதிதாகத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 106,76,96,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2226, திரு. கே சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், திருப்பூர் பகுதியில் பிற்படுத்தப்பட்டோருக்கு வீட்டுமனை வழங்க நிலம் கையகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 106,76,96,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3889, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள முஸ்லிம்களுக்கு அண்டை மாநிலமான கேரளாவில் உள்ளதுபோல, கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் தனி இட ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 106,76,96,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2541, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அதிகப்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 106,76,96,000/-ல் ரூ. 100/- குறைக்க வேணடும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4532, திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3698, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**DR. E.S.S. RAMAN:** Hon. Speaker, Sir, "To discuss the need to start two Backward Class Students' Hostels, one at Nochili in Pallipattu taluk and another at K.G. Kandigai in Thiruttani taluk" I move--

"That the sum of Rs. 106,76,96,000/- allocated under Demand No. 31—Welfare of the Backward Classes, Most Backward Classes and Denotified Communities", be reduced by Rs. 100/-."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3548, திரு. கே. தங்கமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் 3916, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3943, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி நகரில் இயங்கி வரும் அரசினர் மாணவியர் விடுதிக்குச் சொந்தமாக ஒரு புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 106,76,96,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4274, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3721, திரு. கே. ரவி அருணன்.

***திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்காசி நகராட்சி ரயில் நிலையத்துக்கு அருகே வசித்து வரும் நரிக்குறவர் சமுதாயத்தினருக்கு, தொழில் தொடங்க TABCEDCO மூலம் கடன் உதவி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 106,76,96,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 12 பேர் பேசவிருக்கின்றார்கள். அவர்கள் காலத்தின் அருமை கருதி, தங்கள் பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைப்பார்கள்.

*முற்பகல் 10-55*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் பற்றிய மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலே பேசுகின்ற ஒரு நல்ல வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாகச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும் இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்த--தமிழகத்தினுடைய அரியாசனத்திலே முதல்வராக இருந்து--முன்னாள் பாரதப் பிரதமராக இருந்த மாண்புமிகு ஜவஹர்லால் நேரு அவர்களை வற்புறுத்தி, இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்த, அரசியல் சாசனத்திலே முதல் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கக்கூடிய--கர்ம வீரர் காமராஜர் அவர்களை நான் இந்தக் கட்டத்திலே நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கர்ம வீரர் காமராஜர்

@ 149 முதல் 181 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் அடிப்படையின் காரணமாக, இன்று தமிழகத்தில் 69 சதவீத இட ஒதுக்கீடு அளவிற்கு நம்முடைய தமிழகம் வளர்ந்திருக்கிறது என்று சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தம் வந்ததே தந்தை பெரியார் அவர்களுடைய பெருமுயற்சியால்தான். அவர் நடத்திய போராட்டத்தால்தான்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியார் அவர்கள் போராட்டத்தை நடத்தினார்கள். ஆனால், அந்தப் போராட்டம் அப்போது வெற்றி காணவில்லை. தமிழகத்தின் முதல்வராக இருந்த கர்ம வீரர் காமராஜர் அவர்கள் அப்போதைய பிரதமர் நேரு அவர்களை வற்புறுத்தியதன் விளைவாக வந்ததுதான் இந்த இட ஒதுக்கீடு என்பதை நான் உங்களுக்கு மீண்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். பல போராட்டங்களை நடத்தினார்கள். இப்போது கிருஷ்ணசாமி ஒரு போராட்டம் என்று அறிவித்தார். அவர் ஏதேதோ சொல்கிறார். அது வெற்றியடைவது என்பது வேறு. சில காலகட்டங்களில், சில நேரங்களில், சில பேர் அந்த அரியணையில் இருக்கிறபோதுதான் வெற்றிவாகை சூட முடிகிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஞானசேகரன் அவர்கள் ஒரு தவறான செய்தியைக்கூட இங்கே சொல்லிவிட்டதாக நான் கருதுகிறேன். பெரியார் அவர்கள் இங்கே போராடினார்கள். அப்போது காமராஜர் அவர்கள் இந்த மாநிலத்தின் முதலமைச்சராக இல்லை. டெல்லிக்குச் சென்று, பெரியாருடைய கோரிக்கையை நேருவிடம் வலியுறுத்தி, அரசமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தத்தை ஏற்படுத்துவதற்கு, காமராஜர் அவர்கள் காரணமாக இருந்தார்கள் என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** தந்தை பெரியார் அவர்களும் தமிழ்நாடு காங்கிரசினுடைய.....

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது தொடர்பாக நேரு அவர்கள் திருத்தம் கொண்டுவந்தபோது, ஒரு வாக்கியத்தைச் சொன்னார்கள். "We have made an amendment in the Constitution of India for the first time, only because of some happenings in Madras State" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இந்த happenings-ற்கு கர்ம வீரர் காமராஜரும் காரணமாக இருந்திருக்கிறார் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒத்துக்கொண்டார்கள் என்பதை நிச்சயமாக நான் இங்கே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இந்த சமூக நீதி புரட்சிக்கு வித்திட்டவர் தந்தை பெரியார்தான் என்பதை பெருந்தலைவர் காமராஜரே ஒத்துக்கொண்டிருக்கிறார். பெருந்தலைவர் காமராஜருக்கு உள்ள பெருந்தன்மையை நாமும் பெற வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே....

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதைச் சொல்கின்றபோது தமிழகத்திலே, அதிலும் குறிப்பாக, இந்தியத் துணைக் கண்டத்திலே, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற ஒரு பிரிவைக் கொண்டு வந்தது தமிழ்நாட்டிலேதான் முதன் முதலாக என்பதைச் சுட்டிக்காட்டி, இதை வழங்கியவரே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அவ்வாறு வழங்கியதற்குக் காரணமாக, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் டாக்டர் ராமதாஸ் ஐயா அவர்கள் தொடர்ந்து போராடி வந்தார்கள் என்பதையும் இந்தநேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்காகவும், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும், அந்தந்தப் பிரிவிலே உள்ள தலைவர்கள் அத்தனை பேரும் போராடியிருக்கின்றார்கள். இதே சட்டமன்றத்தில் தந்தை



பெரியார் அவர்கள் அப்பொழுது போர்க்களத்திலே நின்றபோது, அன்றைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களாக இருந்த கோசல்ராம், ஆர்.வி. சுவாமிநாதன் போன்றவர்கள் எல்லாம், அன்றையதினம் உச்ச நீதிமன்றத்திலே தடுக்கப்பட்ட நம்முடைய உரிமைகளுக்காகப் போராட வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். எதிர்க்கட்சித் தலைவர் சற்று முன்பு சொன்னதைப்போல, அன்றைக்கு இருந்த காங்கிரஸ் அரசும் அதை டெல்லிக்கு வலியுறுத்திச் சொல்லி, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு எடுத்துச்சொன்னது. அவையும் வரலாறுதான். இங்கே நடைபெற்ற போராட்டமும் பெரிய வரலாறுதான். இன்னும் சொல்லப்போனால், இதற்கு வித்திட்டது நீதிக் கட்சிக் காலத்திலே முத்தையா முதலியார் அவர்கள்தான், இந்த சமூக நீதிக்காக, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதற்காக அவர்தான். இதற்கு முதன்முதலாக வழிகோலினார். இன்னும் சொல்ல வேண்டுமேயானால், 1925 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி மாநாட்டில் திரு. வி. கல்யாணசுந்தரனார் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில், இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்காக பெரியார் கொண்டு சென்ற தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அது மறுக்கப் பட்டுவிட்டது. அதற்கு முன்பு, திருச்சியில், சேலத்தில், தஞ்சையில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி மாநாடுகளில் அந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 1925 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்திலே இந்தத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றதும், தந்தை பெரியார் அவர்கள் காங்கிரசிலேயிருந்து விலகி, அதற்குப் பிறகுதான் சுய மரியாதை இயக்கம் கண்டார் என்பதையும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கையாண்டு வந்த நீதிக் கட்சியோடு தொடர்பு கொண்டார் என்பதையும் வரலாறு அறியும். வரலாறுகளை நாம் மாற்றிவிடக் கூடாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எல்லோரும் பேசுகிறார்கள். எல்லோரையும் பேச allow பண்ணுகிறீர்கள். நான் பேசுவதை மட்டும் ஏன் allow பண்ணவில்லை?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்கள் எழுந்தபோது அவர் அதற்கு ஒத்துக்கொண்டார். அவர் ஒத்துக்கொண்டால் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. Thiru Gnanasekaran, are you yielding?

**THIRU C. GNANASEKARAN:** I am not yielding.

**HON. DEPUTY SPEAKER**: He is not yielding.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மற்றவர்களை அனுமதிக்கிறீர்கள். எல்லோரும் பேசுகிறார்கள். எல்லோரையும் பேச allow செய்கிறீர்கள். ஜி.கே. மணி பேசினார். எல்லோரையும் பேச அனுமதிக்கிறீர்கள்.

முற்பகல் 11-00

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எல்லோரையும் பேச.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கின்றபோது, அடுத்தவர் எழுந்து ஒரு விளக்கத்தைக் கேட்டால், பேசுகிற உறுப்பினர் அதற்குச் சம்மதிக்க வேண்டும். அவர் உங்களுக்குச் சம்மதிக்கவில்லை, உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஜி.கே. மணி பேசினார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள்.....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எல்லோரையும் பேச allow செய்கிறீர்கள். நான் பேசினால் மட்டும் நீங்கள் allow செய்யமாட்டேன் என்று சொல்கிறீர்கள்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அதைத்தான் மறுபடியும் மறுபடியும் தெளிவாகச் சொல்கிறேன். ஒருவர் பேசும்போது, மற்றொருவர் எழுந்து விளக்கத்தை கேட்க வேண்டும் என்று சொன்னால், பேசிக்கொண்டு இருக்கிற உறுப்பினர் அதற்கு yield-ஆக வேண்டும். அவர்கள் 'I am not yielding' என்று சொல்லிவிட்டார்கள். அதனால் நீங்கள் உட்காருவதுதான் உங்களுக்கு நல்லது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, நான் பேசினால் மட்டும் நீங்கள் அனுமதிக்கமாட்டேன் என்று சொல்கிறீர்கள்...



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 45/1994 என்கிற சட்டத்தை இந்த அவையிலே இயற்றி, இந்திய அரசமைப்பிலே 9ஆவது விவர அட்டவணையிலே 69 சதவீத இட ஒதுக்கீட்டை இணைக்க வேண்டுமென்று நாம் ஏற்கெனவே நடவடிக்கை எடுத்தும், அந்தச் சட்டம் செல்லாது என்று உச்சநீதிமன்றத்திலே வழக்குத் தொடுக்கப்பட்டது.

(திரு. பி.ஆர். சுந்தரம் தொடர்ந்து நின்றுகொண்டே ஏதோ பேச முயன்றார்.)

**திரு. சி. ஞானசேகரன்:** அந்த வழக்குத் தொடுக்கப்பட்டபோது, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள், 69 சதவீத இட ஒதுக்கீடு என்று சொன்னவர்கள், மருத்துவம் மற்றும் தொழில் நுட்பப் பயிற்சிகளிலே இருக்கக்கூடிய மாணவர்களுக்கு 50 சதவீதம் மட்டுமே அளித்தால் போதும் என்று ஒரு affidavit-ஐப் போட்டுவிட்டதால், அந்த வழக்கின் திசையேமாறிப் போனது. அந்த வழக்கினுடைய நிலை என்ன என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 69 சதவீத இட ஒதுக்கீடு என்பது இன்று எந்த நிலையில் இருக்கிறது? உச்சநீதிமன்றத்திலே முன்னாள் முதல்வர் ஜெயலலிதா போட்ட அந்த affidavit என்ன ஆனது? இந்த அரசு வந்ததற்குப் பிறகு ஏதாவது affidavit போட்டிருக்கிறீர்களா? அது சரி செய்யப்பட்டிருக்கிறதா? மீண்டும் வழக்கு எப்போது விசாரணைக்கு வரும்? எப்போது வழக்கு முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதை நான் பணிவோடு கேட்டுக்கொண்டு, 69 சதவீத இட ஒதுக்கீட்டைப் பேணிக் காப்பதற்கு எல்லா முயற்சிகளையும் இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் மீண்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, எனக்கு Mike கொடுங்கள். இல்லையென்றால் நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Mike கொடுங்கள் என்று எனக்கு நீங்கள் உத்தரவு போட முடியாது. நீங்கள் வெளிநடப்புச் செய்வதாக இருந்தால், ஆட்சேபணையில்லை. போய் விடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்: Mike-ஐ** மாண்புமிகு **உறுப்பினரே** எடுத்துக்கொள்ளலாமே? (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: Mike-ஐ** எடுத்தாலும் வராது. அந்த அளவுக்குப் பொருத்தப்பட்டுள்ளது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, **நீங்கள்.....**

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(அ.இ.அ.தி.மு.க. கட்சி உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் வெளிநடப்புச் செய்தார்)

**திரு. சி. ஞானசேகரன்:** தமிழகத்தில் இருக்கக்கூடிய ஜனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமாக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் இருக்கிறபோது, இந்தத் துறைக்கு இந்த அரசு ஒதுக்கியிருப்பது வெறும் 150 கோடி ரூபாய்தான்.

அதேபோல ஆதிதிராவிடர் நலத் துறைக்கு நாம் ஒதுக்கியிருப்பது வெறும் ரூ. 509 கோடி. இந்த இரண்டையும் கூட்டினால், 509 கோடி plus 150 கோடி என்று சொன்னால், கிட்டத்தட்ட 650 கோடி ரூபாயை மட்டுமே, மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் இருக்கக்கூடிய மக்களுக்கு இந்த அரசு ஒதுக்குகிறது. ஆனால் நாம் போடுகின்ற பட்ஜெட்டோ 15,867 கோடி. இந்த 15,867 கோடி ரூபாய்க்குப் பட்ஜெட்டைப் போடுகிறபோது, வெறும் 650 கோடி ரூபாயை மட்டுமே பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிட மக்களுக்காக நாம் ஒதுக்கீடு செய்கிறோம் என்று சொன்னால் நிச்சயமாக இது போதாது. இதற்கு மேலும் நிதியை அதிகமாக ஒதுக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தலைமையின் கீழே, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதாரக் கழகம் என்ற ஒன்று இருக்கிறது. ஆனால் அது செயல்படுகிறதா என்பதே சந்தேகமாக இருக்கிறது. சில நேரங்களிலே தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம், புது டெல்லி என்கிற இடத்திலேயிருந்தும், அதேபோல, தேசிய சிறுபான்மையினர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்தும் நிதியை இந்தத் துறை பெறுகிறது. இதுவரை தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் 2340 இலட்சம் ரூபாயை ஏற்கெனவே இந்தத் துறைக்கு வழங்கியிருக்கிறது. அதேபோல தேசிய சிறுபான்மையினர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் இந்தப் பொருளாதாரக் கழகத்திற்காக 464 இலட்சம் ரூபாயை வழங்கியிருக்கிறது. ஆனால் இவ்வளவு ரூபாய் வழங்கப் பட்டிருந்தாலும்கூட, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கு இதுவரை வழங்கப்பட்டிருக்கக்கூடிய கடன் 1968 இலட்சம் மட்டும்தான். அதேபோல சிறுபான்மையினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடியது--ஏற்கெனவே இவர்கள் நிதி பெற்றது 464 இலட்சம். ஆனால், கடனோ 139 இலட்சம், மட்டுமே வழங்கியிருக்கிறார்கள். பல ஆண்டுகளாக பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பொருளாதாரக் கழகத்திற்கு, டெல்லியிலிருந்து வரக்கூடிய பணங்களில் எல்லாம் பல கோடி ரூபாய் செலவழிக்கப்படாமலே திரும்பிப் போய் விடுகிறது என்ற வரலாறு ஏற்கெனவே இருக்கிறது. இப்போது இந்த நிதி செலவழிக்கப்படாமல் இருக்கிறது. இதற்கான காரணத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும். ஏன் இந்தப் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை? எத்தனையோ பேர் loan கேட்டு, உள்ளார்கள். 1998-லே loan கேட்டவர்களுக்கே loan பணம் கிடைக்கவில்லை. பிறகு 1999 ஆம் ஆண்டு loan கேட்டவர்களில் கொஞ்சம் பேருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மூலமாக நேர்காணல் நடத்தி, இப்போது கொஞ்சம் பேருக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி loan மனுக்கள் ஏராளமாக வந்திருந்தும்கூட, அதைச் சரியாகப் பட்டுவாடா செய்யாமல் பணத்தைத் திருப்பியனுப்பக்கூடிய நிலைமையை மாற்றியமைத்து, எல்லோருக்கும் loan கிடைக்க நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

அதேபோல் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்கிற பட்டியலிலே, முடி திருத்துவோர் இருக்கிறார்கள்; சலவைத் தொழிலாளர்கள், நரிக்குறவர்கள் இருக்கிறார்கள்; சிறுபான்மையினர் இருக்கிறார்கள். இப்படி எத்தனையோ பேர்கள் இருக்கிறபோது, வீட்டுவசதிக்காக அதிகமான பணத்தை இந்த அரசு ஒதுக்கலாம். இந்த அரசு வீட்டுமனைக்காக ஒதுக்கக்கூடிய பணமோ குறைவு. ஆகவே அதற்கான பணத்தை அதிகமாக ஒதுக்கீடு செய்து, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு எல்லா மாவட்டங்களிலேயும் வீட்டுமனைகளைக் கொடுப்பதற்கு, நரிக் குறவர்களுக்கு அவை கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இந்தத் துறையின்கீழ் வருவதுதான் வக்ஃபு வாரியம்கூட. வக்ஃபு வாரியம் சிறுபான்மையினருக்காக உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய ஒன்று. சிறுபான்மையினர் நலன் இன்றைக்கு பிற்படுத்தப்பட்டோருக்கான துறையில்தான் வருகிறது. ஆனால் அமைச்சர் வேறு; இந்தத் துறைக்கு இருக்கக்கூடிய அமைச்சர் வேறு. எங்களுடைய மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும் சரி அல்லது பல்வேறு மாவட்டங்களை எடுத்துக்கொண்டாலும் சரி வக்ஃபு வாரியச் சொத்துக்களை எல்லாம், பல பேர், சில பினாமி பெயர்களை வைத்துக்கொண்டு விற்பனை செய்து--நிறைய, அந்த நிலத்தை விற்று-- கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்தில்கூட, ஆற்காடு நவாப் என்பவருடைய சொந்தக்காரர் என்று சொல்லிக்கொண்டு முகமதியர் பெயர்களை வைத்துக்கொண்டு, பத்திரப் பதிவு செய்துவிட்டார்கள். எங்களுடைய வேலூர் தொகுதியிலே அல்லாபுரம் பேரூராட்சியிலே இருக்கக்கூடிய வக்ஃபு வாரிய property-யை சில பேர், "நான் அந்தச் சொத்தை ஆற்காடு நவாப் சொந்தக்காரர்களிடமிருந்து வாங்கியிருக்கிறேன்" என்று சொல்லி, சுற்றுச்சுவர் கட்டுவதைத் தடுத்து நிறுத்திவிட்டார்கள். அதேபோல் மக்கான் குரு எங்களுடைய வேலூரிலே இருக்கிறார். அவருடைய சொத்திலே கிட்டத்தட்ட 50 ஏக்கராவை, இரண்டு முகமதியர்கள் பெயர்களை வைத்துக்கொண்டு, சில பேர் பதிவு செய்துகொண்டு, யாரோ சிலர் பட்டா மாற்றத்திற்கே வந்துவிட்டார்கள். இப்படிச், சில பேர் முகமதியர் பெயர்களை வைத்துக்கொண்டு, பத்திரப்



பதிவு செய்துவிட்டு, அந்தச் சொத்துக்களை எப்படியாவது கொள்ளையடிக்க வேண்டும் என்று முழு முயற்சி எடுத்து, அதற்கென பெரிய பட்டாளமே புறப்பட்டிருப்பதாக நாங்கள் அறிகிறோம். ஆகவே இந்த அரசு உடனடியாக.....

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு முறையாக எழுதப்பெற்று, குறிப்பிடுகிற அந்த வக்ஃபு சொத்தை, அதிலே பட்டா வழங்கப்பட்டதை, அனைத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அண்மையில் இரத்து செய்துவிட்டார்கள். வேறு சில இடங்களிலே இப்படி நடந்த முயற்சிகளை எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக நாம் தடுத்திருக்கிறோம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, நம் கோவில் நிலங்களும், வக்ஃபு சொத்துக்களும் ஆக்கிரமிக்கப்பட்டு, அனுமதியில்லாமல் அவர்கள் கட்டடங்களைக் கட்டுகிறார்கள். அஃதன்னியில், Sub-Registrar Office-லே இதையெல்லாம் பற்றிக் கவனம் செலுத்தாமல் பதிவு செய்துவிடுகிறார்கள். அதனாலதான் புதிய சட்டம் கொண்டு வந்து, திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என்ற முயற்சியில் நாங்கள் ஈடுபட்டு இருக்கிறோம். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்கூட அதற்கு ஒத்துழைப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே அவர் குறிப்பிடுகிற பட்டா ரத்து செய்யப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மூத்த உறுப்பினர் மாண்புமிகு திரு. அப்துல் லத்தீப் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. பட்டா ரத்து செய்யப்பட்டது. ஆனால் ஏற்கெனவே இப்படிச் சில பேர் புறப்பட்டு, முகமதியர்களின் சொத்துக்களையெல்லாம் கொள்ளை அடிப்பதற்காக முயன்றிருக்கிற, குற்ற நடவடிக்கைகளிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய அந்தக் குற்றவாளிகள்மீது இந்த அரசு என்ன நடவடிக்கையை எடுத்தது என்பதை அறிய விரும்புகிறேன். இப்படியிருக்கிறபோது நான் பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம், முறைகேடுகள் செய்பவர்கள் மீது, சட்டத்திற்குப் புறம்பாக நடக்கக்கூடியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்பதுதான். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல் ஹஜ் பயணத்திற்கு நம்முடைய தமிழகத்தில் இருக்கக்கூடிய சில முகமதிய நண்பர்கள் எல்லாம் போகிறார்கள். ஆனால் அதற்கு மிகக் குறைந்த பணத்தையே இந்த அரசு ஒதுக்கிக் கொண்டிருக்கின்றது. 30 இலட்சம் ரூபாய் வக்ஃபு வாரியத்திற்குக் கொடுத்தது போதாது. அந்த யாத்திரைக் குழுவிற்குக் கொஞ்சம் அதிகமாகப் பணத்தை ஒதுக்கி, பீடித் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற ஏழை முகமதியர்களை, ஹஜ் பயணத்திற்குச் செல்லக்கூடியவர்களை, அதிகமான நண்பர்களை அனுப்புவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-10*

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களைப் பற்றி அதிகமாக நாம் இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், நம்முடைய அரசுத் துறைகளை எடுத்துக்கொண்டால், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அல்லது பிற்படுத்தப்பட்டோர் அல்லது ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்கள், அந்தந்தத் துறையினுடைய தலைவர்களாக வருவது என்பது மிகவும் அரிதாக இருந்து கொண்டிருக்கிறது. இதிலே நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்களும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களும், நம்முடைய தமிழகத்திலேயே இருந்து படித்துவிட்டு, மிகத் திறமையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களைக்கூட துறைத் தலைவர்களாகப் போடுவதிலே ஏன் தயக்கம் காட்டுகிறார்கள்? பல்வேறு துறைகளிலே இப்படிப்பட்ட சுணக்கம் இருந்து கொண்டிருக்கிறது. நாம் பிற மாநிலங்களிலிருந்து வரக்கூடியவர்களுக்கும், மற்றவர்களுக்கும் கொடுக்கக்கூடிய வாய்ப்பை நம்முடைய தமிழகத்திலே உள்ள தமிழர்களுக்கு ஏன் கொடுக்கக் கூடாது? ஏன் அவர்கள் துறையின் தலைவர்களாக இருக்க லாயக்கு இல்லையா என்பதையும் நான் வலியுறுத்திக் கேட்கிறேன். பொதுவாக, காட்டு வளம் மற்றும் பல்வேறு துறைகளில் இருக்கக்கூடிய இடங்களில் பணிபுரிய நம்முடைய தமிழர்களுக்கும் நாம் வாய்ப்பை அளிக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோரது நலத்திற்காகவும், மேம்பாட்டிற்காகவும்.. . . .

## 5. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி ஏற்பாடு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மானியக் கோரிக்கையை முன்னிட்டு, உறுப்பினர்களுக்கு இனிப்பு வழங்குவதற்கு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள். இனிப்பு இன்று முற்பகல் 11 மணியிலிருந்து பேரவையை ஒட்டியுள்ள பிளாசாவில் வழங்கப்படும் என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

### கோரிக்கை எண் 31-பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன்--தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999-2000 ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

**திரு. வ. வேலுசாமி:** அவர்களது நலத்திற்காகவும், ஆதிதிராவிடர் நலத் துறையிலிருந்து தனியாகப் பிரித்து, ஒரு தனித் துறையையே ஏற்படுத்தி, அந்த மக்களுடைய நலத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையின்கீழ் இயங்கக்கூடிய இந்தத் துறையின் மீதான மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. வ. வேலுசாமி] [1999 ஏப்ரல் 13

பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நலனுக்காக, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, அந்தக் காலத்திலேயிருந்து--அவர்களுக்குக் கல்வி, பொருளாதாரம் மற்றும் பல்வேறு சலுகைகள் மறுக்கப்பட்ட காலத்திலேயிருந்து--நீதிக் கட்சி, என்று தொடங்கப்பட்டதோ, அன்றிலிருந்து அதற்குப் பின்பாக தந்தை பெரியார், அதற்குப் பின்பாக பேரறிஞர் அண்ணா அவர்கள், அவர்களுடைய வழியிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அல்லும் பகலும் பாடுபட்டு வந்துள்ளார்கள். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கைத் தரம், கல்வித் தரம் மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமென்று தனது பேச்சிலும், மூச்சிலும் செயல்பட்டு வரக்கூடிய நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள், நம்முடைய தமிழகத்திலே சில காலத்திற்கு முன்பாக நடந்த சாதி சமயச் சண்டைகளையும், சச்சரவுகளையும் பார்த்துவிட்டு, யாருக்காக நாம் உழைக்கின்றோமோ, அந்த இனத்து மக்களெல்லாம் இப்படி ஒருவருக்கொருவர் வெட்டிக் கொண்டிருக்கின்றார்களே என்பதை நினைத்து, 'எல்லோரும் ஒன்றாகி இன்புற்று இருக்கக்கூடிய நாள் எந்நாளோ அந்நாள்தான் நன்னாள்' என்ற அளவிலே பல்வேறு இடங்களிலே பேசி வந்திருக்கிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, மூன்றில் இரண்டு பங்கு அல்லது அதற்கு மேலாகவே வசிக்கக்கூடிய மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையினரது மேம்பாட்டிற்காகப் பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி, அதைச் செயல்படுத்துவதிலே தமிழகம் முன்னணியிலே இருந்து வருகிறது. அதிலே நானும் ஒருவன் என்ற முறையிலே நம்முடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை வாழ்த்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது இருந்து வரக்கூடிய 69 விழுக்காட்டிலே, ஆதிதிராவிடர்களுக்கு என்று 18 விழுக்காடும், அதைப்போலவே பழங்குடியினருக்கு 1 விழுக்காடும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 30 விழுக்காடும், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 20 விழுக்காடும் என்று நிர்ணயம் செய்யப்பட்டு, ஒதுக்கப்பட்டுள்ளது.

*முற்பகல் 11-15*

மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே வன்னியர் சமுதாய மக்கள் தங்களை மிகவும்



1999 ஏப்ரல் 13] [திரு. வ. வேலுசாமி]

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்க வேண்டும் என்பதற்காகப் பல போராட்டங்களை நடத்திய காரணத்தினால், அதற்குப் பின்னால் சீர் மரபினர் இனத்தைச் சேர்ந்த மக்களும் பல்வேறு கோரிக்கைகளை வைத்த காரணத்தினால், நம்முடைய ஒப்பற்ற தலைவர் அவர்கள் அந்த நேரத்திலே, இந்த சீர் மரபினர்களுக்கும் சேர்த்து மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்காக 20 விழுக்காட்டினை 1989-லே அறிவித்தார்கள். அவ்வாறு 20 விழுக்காடு ஒதுக்கப்பட்ட பின்பு நம்முடைய ஆட்சி ஓராண்டு இருந்தது என்று கருதுகிறேன். அதற்குப் பின்னால் வந்த அம்மையார் அவர்கள் தன்னை வளமாக்கிக் கொள்ளக்கூடிய வழிவகைகளைத் தேடினார்களேயொழிய, சாதாரணமாக வாழ்க்கையிலே பின்னுக்குத் தள்ளப்பட்ட மக்கள் முன்னுக்கு வரவேண்டுமென்ற அளவிலே அந்த விகிதாச்சார அடிப்படையில் அவர்களுக்கு வேலைவாய்ப்பிலே பங்கு அளித்தார்களா என்றால் இல்லை. ஆகவே அப்படிப்பட்ட முறைகேடுகளைப் போக்குவதற்காக, தாழ்த்தப்பட்ட, பழங்குடி இன மக்களுக்காக ஓர் உயர்மட்டக் குழுவினை அமைத்து, அதன் வாயிலாக அவர்களுக்கு எப்படி வேலைவாய்ப்பில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்பதை அறிவதற்கு வாய்ப்பு ஏற்பட்டதைப் போல, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு வேலைவாய்ப்பிலே என்ன பங்கு உள்ளது என்பதை அறிவதற்காக மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்து, அதன் வாயிலாக நாங்கள் சற்றேறக்குறைய 145 துறைகளைப் பரிசீலனை செய்தோம். இந்த 145 துறைகளிலும், தமிழகத்திலே அதிகமாக, பெரும்பான்மையாக இருக்கக்கூடிய வன்னியர் இன மக்கள், முக்குலத்தோர் இன மக்கள், சீர் மரபினர்கள் ஆகிய மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 2 சதவீதம், 5 சதவீதம், 10 சதவீதம் என்ற அளவிலேதான் வேலைவாய்ப்பிலே கடந்த பத்தாண்டுகளிலே வாய்ப்பு அளிக்கப்பட்டு, நிரப்பப்பட்டிருக்கிறதே தவிர, அதற்கு மேல் எந்தத் துறையிலும், எந்த அளவிலும் ஒதுக்கப்படவில்லை என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிகமான மக்களாக விளங்கக்கூடியவர்கள், வாழ்க்கையின் விளிம்பிலே நின்று கொண்டிருக்கக்கூடியவர்கள், எல்லா வகையிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காகத்தான், நம்முடைய தலைவர் அவர்கள், அவர்களுக்காக 20 சதவீதத்தினை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால்

அவர்களுக்கு இன்னும் வேலைவாய்ப்பிலே முன்னுரிமை கொடுக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

அதைப்போலவே அந்தக் குழுவிலே எடுத்த முடிவுகள் எல்லாம் அந்தத் துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்களால், அறிக்கையாக சட்டமன்றத்திலே விரைவில் தாக்கல் செய்யப்பட இருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகாவது கட்டாயமாக அந்த மக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களுக்கும் வேலைவாய்ப்பிலே உரிய பங்கினைப் பெற்றுத் தந்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக 69 சதவீதம் வேண்டுமென்று கேட்டிருக்கக்கூடிய வழக்கில், உச்சநீதிமன்றத்திலே முன்னாள் ஆட்சியாளர்களால், Affidavit ஒரு மாதிரியாகத் தாக்கல் செய்யப்பட்டு, அது நிலுவையில் இருக்கிறது. அந்த வழக்குக்கு மேல் முறையீடு செய்யப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஆகவே அந்த மேல்முறையீட்டை நல்ல முறையில் நடத்தி, தமிழகமே இந்த மக்களுக்காக எத்தனை விழுக்காடு வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் ஒதுக்கப்பட வேண்டும் என்பதை முடிவு செய்யக்கூடிய அளவுக்கு அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சியினைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே இப்போது சமத்துவபுரங்களை உருவாக்கி, எல்லா மக்களும் நன்றாக வாழ வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைத்துக்கொண்டு இருக்கும்போது, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, ஒரு சில கட்சியைச் சார்ந்தவர்கள், தாங்கள் எந்த வகையிலாவது தலைவர்களாக ஆகிவிட வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக, அவர்கள் சாதிய ரீதியிலே பல சாதி உணர்வுகளைத் தூண்டிவிட்டு, சாதாரணமாகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் மக்களையெல்லாம் வீணுக்கு வம்புக்கு இழுத்து, அவர்கள் ஒருவருக்கொருவர் வெட்டிக்கொள்ளும் சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த சாதியத் தலைவர்களைக் கட்டாயமான முறையிலே எந்த வழியிலாவது உள்ளே அடைக்க வேண்டுமானால், குண்டர்கள் சட்டம்கூட அவர்கள்மீது போடப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்



பட்டதைப்போல, தென்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்புகளை அளித்தால் இப்படிப்பட்ட சாதிச் சச்சரவுகளைக் குறைக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஒரு சில கோரிக்கைகள். தென் மாவட்டங்களில், குறிப்பாக வறட்சியான மாவட்டங்களான, இராமநாதபுரம், பழைய முகவை, திருநெல்வேலி மாவட்டங்களில் வசிக்கக்கூடிய மறவர் இனத்து மக்கள், சீர் மரபினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பிழைப்புக்கு வழி தேடி, மதுரை மாநகரத்திலும், புறநகர்ப் பகுதிகளிலும் வந்து, குடியேறியிருக்கிறார்கள். அவர்கள் சாதிச் சான்றிதழ் பெற வேண்டுமானால், மீண்டும் அவர்கள் சொந்த மாவட்டத்திற்குச் சென்று வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அவர்கள் மதுரையிலேயே சீர் மரபினர் சாதிச் சான்றிதழைப் பெறுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்குமாறு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே சௌராஷ்டிரா சமுதாய மக்கள் மிகச் சிறுபான்மையினராக உள்ளனர். அவர்கள் பொருளாதாரத்திலும், கல்வியிலும் மிகப் பிற்படுத்தப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறார்கள். எனவே அவர்களை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வ. வேலுசாமி:** பொருளாதாரத்திலே, கல்வியிலே, மிக மிகப் பிற்படுத்தப்பட்ட நிலையிலே உள்ள பிரமலைக் கள்ளர்களுக்காக Kallar Reclamation என்ற புனர்வாழ்வுத் திட்டம் எப்படி அமைக்கப்பட்டிருக்கிறதோ, அதைப்போலவே, சாதாரண, ஏழையெளிய மக்களாக இருக்கக்கூடிய மறவர் பெருங்குடி மக்களுக்கும் Maravar Reclamation என்ற ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டினுடைய பிற்படுத்தப்பட்டோர், மிகவும்

பிற்படுத்தப்பட்டோர் குறித்த மானியக் கோரிக்கையில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களை இங்கே சொல்ல விழைகிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் இந்த நாடு சுதந்திரம் பெற்றுவிட்டால் மட்டும் போதாது, இந்த இந்தியத் திருநாட்டிலே எப்போது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அமலாக்கப்படுகிறதோ அன்றுதான் முழுமையான சுதந்திரம் பெற்ற நாடாகும் என்று பல்வேறு கோணங்களிலே வலியுறுத்திச் சொன்னதோடு மட்டுமல்லாமல், பல்வேறு போராட்டங்களையெல்லாம் நடத்திய வரலாற்றை தமிழ்நாடு கண்டிருக்கிறது; இந்தியத் திருநாடு கண்டிருக்கிறது. ஆகவே தந்தை பெரியாருடைய கூற்று நிறைவேறாத நிலையிலே, பாட்டாளி மக்கள் கட்சியை நிறுவி, அதனை நடத்தி வரக்கூடிய, சமூக நீதிக்குப் போராடும் மரியாதைக்குரிய டாக்டர் இராமதாஸ் ஐயா அவர்கள் கடந்த காலங்களிலே தொடர்ந்து போராடி, 7 நாட்கள் தொடர் சாலை மறியல் போராட்டம் என்ற மிகப் பெரிய போராட்டத்தை அறிவித்தார்கள். அந்தப் போராட்ட வரலாற்றை தமிழ்நாடு, இந்தியா கண்டிருக்கிறது. இந்த சமூக நீதிப் போராட்டத்தை ஏற்றுக்கொண்டு, 1989-லே இப்போது முதல்வராக இருக்கின்ற மாண்புமிகு கலைஞர் அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று சொல்லி 20 சதவிகித இடஒதுக்கீட்டை வழங்கியது என்பது இந்தியத் திருநாட்டிலேயே முதன்முறை என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே தந்தை பெரியார் அவர்களுக்குப் பிறகு சமூக நீதி காக்கப் போராடியவர்கள், இரண்டு பெரியவர்கள். அந்தப் பெரியவர்கள் என்று சொல்லக்கூடிய வகையிலே இடம்பெறக் கூடியவர்கள் மாண்புமிகு கலைஞர் அவர்கள் என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் இராமதாஸ் ஐயா அவர்கள் என்பதையும் நான் இந்தநேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே இந்த 20 சதவிகித இடஒதுக்கீட்டை நான் பெருமையாக வரவேற்கக்கூடிய அதேநேரத்திலே, இந்த 20 சதவிகிதத்திலே எவ்வளவு குறைகள் இருக்கின்றன என்பதையும் இந்தநேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தமிழகத்திலே இருக்கக்கூடிய எல்லாத் துறைகளிலும் வேலைவாய்ப்புகள் அளிப்பதிலே பல்வேறு குறைகள் இருக்கின்றன என்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு குழுவை அமைத்தார்கள். அந்தக் குழுவிலே இங்கே இருக்கக்கூடிய



சட்டமன்ற உறுப்பினர் பெருமக்களும், அரசுத் துறையினுடைய அதிகாரிப் பெருமக்களும் ஆய்வு செய்த பிறகு, பல்வேறு குறைகளைக் கண்டறிந்து, முதல்வர் அவர்களுக்குப் பரிந்துரைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே அதை நான் விரிவாகப் பேச வேண்டும் என்று சொன்னாலும்கூட, காலத்தினுடைய அருமை கருதி, இந்தக் குழு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய பரிந்துரைகளை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும், அதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் இப்போது சென்னைப் பல்கலைக்கழகம் இருக்கிறது; இந்த சென்னைப் பல்கலைக் கழகத்திலே இருக்கக்கூடிய வேலைவாய்ப்புகளில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இருக்கக்கூடிய பங்கு என்பது 1.2%. அதே போல தாழ்த்தப்பட்ட, பழங்குடியினருக்கு இருக்கக்கூடியது 3%. எவ்வளவு பற்றாக்குறை இருக்கிறது, பங்களிப்பு குறைவாக இருக்கிறது. மோசடியாக இருக்கிறது என்பதை இந்தநேரத்திலே சுட்டிக்காட்டுவதோடு, இதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் தமிழக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக்கூடிய வகையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நேற்றுகூட நாங்கள் ஒரு போராட்டத் திட்டத்தை அறிவித்திருந்தோம். அந்தப் போராட்டத் திட்டத்திலே சென்னைப் பல்கலைக்கழகத்திலே மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இப்படி பற்றாக்குறை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக்கூடிய வகையிலே பட்டை நாமம் அணிந்து, அதேநேரத்திலே எவ்வளவு பாதிப்பு இருக்கிறது என்பதையெல்லாம் போராட்ட வடிவத்திலே சென்னைப் பல்கலைக் கழகத்தினுள்ளே புகுந்து செய்வதாக இருந்தோம். அரசியல் நெருக்கடியின் காரணமாக அந்தப் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட் குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதற்காக, மீண்டும் அந்தப் போராட்டத்தைக்கூட நாங்கள் நடத்தவிருக்கிறோம். மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் வேலைவாய்ப்பிலே இருக்கக்கூடிய அந்தக் குறைகளை, பங்களிப்பை, backlog vacancy-களை நிச்சயமாக நிறைவு செய்ய வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த இடஒதுக்கீட்டிலேயுள்ள குறைகளைக் களைகின்ற நேரத்திலேகூட, சாதி வாரியாகக் கணக்கிட்டுச் செய்ய வேண்டும். இதைத் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய எல்லாச் சமுதாயச் சங்கங்களும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கின்றன. மாநாட்டின் வாயிலாக, பேரணியின் வாயிலாக முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கையாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எல்லா சமுதாயச் சங்கங்களும் வைத்திருக்கக்கூடிய கோரிக்கைகளை ஏற்று நடப்பாண்டிலே நிறைவு செய்ய வேண்டும். சாதிவாரியாக கணக்கெடுப்பு செய்ய வேண்டும். முன்னாள் ஆளுநர் மேதகு அலெக்சாண்டர் அவர்கள் காலத்திலே வெங்கடகிருஷ்ணன் கமிஷனின் பரிந்துரைப்படி சாதிவாரியாகக் கணக்கெடுப்பு செய்வதாக அறிவிக்கப்பட்டு, அது கடந்த ஆட்சியிலே, அதுவும் நம்முடைய கலைஞர் அவர்கள்தான் நிறுத்திவைத்தார்கள் என்ற பெரிய குறை இருக்கிறது. ஆகவே மாண்புமிகு கலைஞர் அவர்கள் அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று இந்தநேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-25*

இன்னொன்று. 69% இட ஒதுக்கீடு என்பது கேள்விக்குறியாக இருந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தில் தந்தை பெரியார் பிறந்த மண்ணில் இருந்து கொண்டு உச்சநீதி மன்றத்தைக் குறை சொல்லிக் கொண்டு, சட்டத் திருத்தம் வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தாலும்கூட, அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு தமிழக அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இந்த 69% இட ஒதுக்கீடு சம்பந்தமாக தமிழக அரசு என்ன செய்திருக்கிறது என்று கேட்டுக்கொள்ளக்கூடிய அதேநேரத்தில், அதைப் பொறுத்தளவில் ஒரு வெள்ளை அறிக்கையை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சமூக நீதி கேட்டு, பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் பல்வேறு இயக்கங்கள், திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட போராடின. அப்படிப் போராடிய நேரத்திலே அந்தப் போராட்டத்திலே ஈடுபட்டவர்கள்மீதெல்லாம் காவல் துறை அவதூறு வழக்குகள் போட்டு பதிவு செய்தது. அந்த வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்படுகின்றன என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே அறிவித்தாலும்கூட, இதுவரையில் வழக்குகள் வாபஸ் பெறப்படாத நிலையில் பாட்டாளி மக்கள் கட்சியினர் ஆயிரக்கணக்கானோர் இன்னும் நீதி மன்றங்களுக்குச் சென்று



கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதையெல்லாம் உணர்ந்து, அவர்கள்மீது இருக்கக்கூடிய வழக்குகளை மீண்டும் வாபஸ் பெறவேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மொழிப் போருக்காகப் போராடியவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு மொழிப் போர்த் தியாகி என்று பட்டயம் எல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோல சமூக நீதி என்பது எல்லோருடைய உயிர்நாடிப் பிரச்சினையாக இருக்கிற காரணத்தாலே, இந்தச் சமூக நீதிப் போராட்டத்திலே கலந்து கொண்டவர்களை கௌரவிக்கக் கூடிய வகையிலே நம்முடைய தமிழக அரசு சமுதாய நீதிப் போர்த் தியாகி என்ற பட்டயத்தை வழங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே யாதவ சமூகம் என்று இருக்கிறது. யாதவ சமூகம் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிற காரணத்தால், அவர்களை M.B.C. பட்டியலில் இணைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதேநேரத்தில் தேவர் சமுதாயத்திலே பல்வேறு பிரிவுகளில் உள்ளவர்கள் கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். அவற்றையும் சேர்த்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முத்தரையர்கள் இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே முத்தரையர்கள் ஒரு சில மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள். வேறு சில மாவட்டங்களில் அந்த வாய்ப்பு இல்லாமல் இருக்கிற காரணத்தாலே அவர்களுக்கும் அதை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல நம்முடைய இசுலாமியப் பெருமக்கள் மிகக் குறையாகத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். கல்வி ரீதியாக, வேலைவாய்ப்பிலே எல்லா இடங்களிலும் பின்தங்கியிருக்கக்கூடிய இசுலாமியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

யாதவ மகா சங்கத்தின் சார்பாகத் தொடர்ந்து கோரிக்கை வைக்கிறார்கள். இப்போது சென்னை மாநகரில் கறவை மாடுகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று சென்னை மாநகராட்சியும், தமிழக அரசும் அறிவிப்பு செய்திருப்பதைக் குறித்து அவர்கள் மிகப் பெரிய கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். கறவை மாடுகளை அப்புறப்படுத்தினால் பால் பற்றாக்குறை ஏற்படும். அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுக்குத் தொழிலில் பெரிய இழப்பு

ஏற்படுமென்ற காரணத்தினால் அவர்களைப் பாதுகாக்கின்ற வகையில் வாய்ப்பு அளிக்க வேண்டும் அல்லது மாற்று ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டுகூட 150 கோடி ரூபாய் தான் இந்தத் துறைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் பற்றாக்குறையாக இருக்கிறது. சம்பளத்திற்கு மட்டும்தான் போதும். எந்தக் காரியங்களையும் செய்ய முடியாது. ஆகவே இதற்கு இன்னும் கூடுதல் நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே ஏறக்குறைய 70%-க்கும் மேற்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோராக உள்ளனர். எனவே அவர்களுக்கு இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல இந்த ஆண்டு விடுதிகள் தொடங்குவது குறித்து ஏதும் அறிவிக்கப்படவில்லை. ஆகவே பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளை இன்னும் கூடுதலாகப் பல இடங்களில் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே உணவுக் கட்டணம், பள்ளிகளில் மாணவர்களுக்கு 225 ரூபாய் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய சூழ்நிலையில் அது பற்றாக்குறையாக இருக்கிறது. எனவே பற்றாக்குறையாக இருக்கிற காரணத்தால், இன்றைய விலைவாசிக்கேற்ப அதை 300 ரூபாய் என்று உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்லூரி மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் 400 ரூபாய் என்றிருப்பதை 500 ரூபாயாக உயர்த்த வேண்டும்.

அதேநேரத்தில் விடுதிக் காப்பாளர்களாக இருக்கக்கூடியவர்கள் ஓய்வு பெறுகிறபோது அதே நிலையில்தான் ஓய்வு பெறுகிறார்கள். ஆகவே அவர்களுக்கும் பதவி உயர்வு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சமையலர்கள் தொகுப்பு ஊதியத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்தி, ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தருமபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டம். தருமபுரி மாவட்டத்தில், அதிலும் குறிப்பாக பெண்ணாகரம் தொகுதியில் வீட்டு மனைப் பட்டாக்கள் அதிக அளவில் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பால. ஆனந்தன்.

முற்பகல் 11-30

**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியை உரித்தாக்கி, இந்த நிலைக்கு என்னைத் தெரிவு செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், எங்களின் மாவட்டக் கழகச் செயலாளர் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுக்கும், தேர்வு செய்த என்னுடைய தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில், திருவண்ணாமலை மாவட்டம் உண்மையிலேயே பிற்படுத்தப்பட்ட மாவட்டம். எங்கள் மாவட்டத்தில் கிருத்துவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே வருகின்ற காரணத்தினாலே, அவர்கள் தொகுப்பு வீடுகள் இல்லாமல் மிகவும் கஷ்டமான நிலையிலே இருக்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுத்து. இந்த ஆண்டு அதிகப்படியான தொகுப்பு வீடுகளை பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற ஆரியாத்தூர்-விளங்காடு, கூழமந்தல்-உக்கல், மருதாடு-ஓசூர், கொட்டை-பாதூர், மேல்மா-வெங்கோடு, செம்பூர்-தெய்யார், நெடுங்கல்-அனப்பத்தூர், மாவலவாடி- வேப்பங்காரணை, நல்லூர்-வேப்பங்காரணை, துறையூர்-பையூர்- அலத்துறை-ஆலத்தூர், ஆரியாத்தூர்-மையூர், நல்லூர்-அருங்குணம்- சத்தியவாடி, ஆராசூர்-தென்சேந்தமங்கலம் போன்ற பகுதிகளிலே உள்ள சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்ற காரணத்தினாலேயும், அங்கே போக்குவரத்து சரிவர இயக்கப்படாத காரணத்தினாலும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே இதைக் கருத்தில் கொண்டு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வந்தவாசி-திண்டிவனம், வந்தவாசி-காஞ்சிபுரம், வந்தவாசி-மேல்மருவத்தூர், வந்தவாசி-சேத்துப்பட்டு-திருவண்ணாமலை, வந்தவாசி-ஆரணி ஆகிய சாலைகள் மிகவும் குறுகலாக இருக்கின்ற காரணத்தினால்-இந்தப் பகுதிகளிலே

போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. எனவே இந்தச் சாலைகளை அகலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வந்தவாசி தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரமாகக் கட்டடம் கட்டித்தர வேண்டும். அதிலே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கும் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டும். அந்தத் தீயணைப்பு நிலையத்திற்கு எதிரே இருக்கின்ற காமராஜர் நகர் பகுதிகளிலே கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் வீடுகளைக் கட்டிக் கொண்டு வசிக்கிறார்கள். ஏதோ சில சூழ்நிலையிலே அவர்களுக்கு பட்டா வழங்க அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தளர்த்தி அவர்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏரிகள், கால்வாய்கள் இருக்கின்றன. இவற்றில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்ற வேண்டும். தென் மாவட்டங்களில் எல்லாம் கால்வாய்களில் தூர் வாரும் பணியை பெரிய அளவில் செய்கிறீர்கள். ஆனால் எங்கள் மாவட்டம் ஆறுகள் இல்லாத மாவட்டமாக இருக்கின்ற காரணத்தால், கால்வாய்களை மட்டும் ஆழப்படுத்தி, அகலப்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேத்துரை கால்வாயில் வேலை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் கால்வாய் மத்தியில் மட்டும்தான் வேலை செய்யப்பட்டிருக்கிறது. மேல்புறமும், கீழ்ப்புறமும் அதைச் செய்துதர வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்தைப் பொறுத்தவரையிலே வந்தவாசியிலே இரண்டு கிளைகள் இருக்கின்றன. தந்தை பெரியார், பட்டுக்கோட்டை என்று இரண்டு போக்குவரத்துக் கழகக் கிளைகள் இருக்கின்றன. இருந்தும்கூட பேருந்துகள் சரிவர இயக்கப்படவில்லை. இதைக் கருத்தில்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே வந்தவாசி சட்டமன்ற உறுப்பினருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு தடம் எண் டி. 57. அது சரியாக இயங்குவதில்லை. இதைக் கருத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



வந்தவாசி என்பது ஒரு sensitive area. எப்போது என்ன நடக்கும் என்று தெரியாது. இந்தியாவில் இருக்கின்ற எல்லாக் கட்சிகளினுடைய நிலையும் வந்தவாசி நகரத்தில் இருக்கின்றன. ஏனென்று கேட்டால் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை. தற்போது அங்கே இருக்கிற காவல் நிலையத்தை நகரக் காவல் நிலையமாக மாற்றிவிட்டு, தனியாக இன்னொரு காவல் நிலையத்தை ஏற்படுத்தி கிராமத்தினுடைய குறைகளைக் கவனிப்பதற்கு, தனிக் காவல் நிலையத்தை கிராமக் காவல் நிலையம் என்றும், ஏற்கெனவே இருப்பதை நகரக் காவல் நிலையம் என்றும் மாற்றி ஆவன செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல அங்கே பணியாற்றக்கூடிய காவலர்களுக்கும், D.S.P. அவர்களுக்கும் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரும்பாளை மற்றும் அனுக்காவூர் ஏரிகளின் உபரி நீர் செல்கின்ற--என்னுடைய தொகுதியில் இரண்டு ஊர்கள்தான் உபரி நீர் செல்லக்கூடியவை. உபரி நீர் செல்லும்--வழியில் தடுப்புச் சுவர் கட்டி, இருக்கின்ற விவசாய நிலங்களில் மேலும் பயிரிடுகின்ற ஏற்பாட்டையும் செய்ய வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல எங்களுடைய தொகுதியிலே அதிகமான போக்குவரத்து இடநெரிசல் இருக்கின்றது. ஆங்கிலேயர் காலத்திலே கட்டப்பட்ட ஐந்துகல் பாலம் என்ற அந்தப் பாலம் ஒன்றுதான் வந்தவாசியிலே இருக்கிறது. திண்டிவனத்திலிருந்து யார் வந்தாலும், விழுப்புரத்திலிருந்து யார் வந்தாலும், காஞ்சிபுரம் செல்வதாக இருந்தாலும், திருத்தணி செல்வதாக இருந்தாலும், திருப்பதி செல்வதாக இருந்தாலும், சித்தூர் செல்வதாக இருந்தாலும், அந்தச் சிறிய பாலம் வழியாகத்தான் வர வேண்டும். அந்த ஒரு வழியிலே எல்லாப் பேருந்துகளும் வரக்கூடிய காரணத்தினாலேயும், அது சிறிய பாலமாக இருப்பதினாலும் அதை அகலமான பாலமாக மாற்றியமைக்க வேண்டும்.

அதேபோல புறவழிச் சாலை. வந்தவாசி-திண்டிவனம் வழித்தடத்தில் தனியாகப் புறவழிச் சாலை ஏற்படுத்தித் தர வேண்டும்.

அதைப்போல சேத்துப்பட்டிலிருந்து மேல்மருவத்தூருக்குச் செல்வதற்கு புறவழிச்சாலை அமைத்துத் தர வேண்டும்.

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசிக் கொண்டிருப்பது பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கை என்பதை நினைவுக்குக் கொண்டுவருகிறேன்.

**திரு. பால. ஆனந்தன்:** இதிலே நான் சொல்வதற்குக் காரணம், இதையெல்லாம் செய்து கொடுத்தால் பிற்படுத்தப்பட்ட மக்கள் பயனடைவார்கள் என்ற காரணத்தினால் சொல்லிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வசிஷ்டர் வாயாலே வாழ்த்துப் பெறுவது மிகவும் கடினம். ஆனால் தாங்களோ தமிழால், டாக்டர் கலைஞர் அவர்களிடத்திலே வாழ்த்துப் பெற்று இருக்கிறீர்கள், இராமாயண இந்திரஜித், மகாபாரத அபிமன்யு என்று உங்களை நான் எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. எனவே இந்தத் துறை மானியக் கோரிக்கை வாயிலாகச் சொல்லிக்கொள்கிறேன்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே இங்கே A.C.-யினால் அதிகக் குளிர்ச்சியாக இருக்கிறது.

**திரு. பால. ஆனந்தன்:** வெளியே சென்றால் வெயில் அதிகமாக இருக்கின்றது. அதனால் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. பால. ஆனந்தன்:** முடித்துவிடுகிறேன். இது 12-வது நிதிநிலை அறிக்கை. இந்த நிலையிலே, குறிஞ்சி மலர் போன்ற நிலையிலே, எங்களுக்குப் பேசுவதற்கு வருடத்திற்கு ஒரு முறை, அதாவது 12 மாதங்களுக்கு ஒரு முறைதான் வாய்ப்பு கொடுக்கிறீர்கள். எனவே எங்களுக்கு 12 நிமிடங்களாவது கொடுக்க வேண்டாமா? எப்போதுமே நீங்கள் கிழக்குப் பக்கமே பார்க்கமாட்டேன் என்கிறீர்கள். பேரவைத் தலைவராக இருக்கட்டும், துணைத் தலைவராக இருக்கட்டும், ஆளும் கட்சி உறுப்பினர் என்றால், அவர்களுக்குக் கொஞ்சம் கூடுதலாக நேரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருநெல்வேலி மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாவை ஏற்கெனவே அளித்து இருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியை உரித்தாக்குகின்றேன். இருப்பினும் இந்த ஆண்டு ஒதுக்கீட்டில் எங்களுக்கு இன்னும் அதிகப்படியாக



வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்குப் பக்கத்தில் இருக்கிற உறுப்பினர் என்ற முறையிலேகூட நீங்கள் எங்களைப் பாதுகாத்து, கொஞ்சம் அதிகப்படியாக நேரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு நிலப் பட்டா வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சவரத் தொழிலாளிகள், சலவைத் தொழிலாளிகள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கிடையாது. தொகுப்பு வீடும் கிடையாது. அவர்கள் வாழ்க்கையில் மிகவும் கீழ்நிலையிலே இருக்கிறார்கள். எனவே இந்தச் சூழ்நிலையிலே அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது).*

ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். என்னைப் பொறுத்தமட்டில், எங்களுடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பலமுறை எங்களுக்கு அறிவுரைகள் கொடுத்து இருக்கின்றார்கள். அநாவசியமாகக் கையை நீட்டாதீர்கள்; அதுபோல கையையும் கட்டி பதில் சொல்லாத நிலைக்கு நடந்து கொள்ளுங்கள் என்று; இந்தக் குறிப்புகளை அவர் சொல்லவில்லை; அவருடைய நடவடிக்கைகளில் இருந்தே நாங்கள் கற்றுக்கொண்டு இருக்கின்றோம். எனவே இந்த நிலையிலே,

> "ஆழி சூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீ போய்,
>
> தாழ் இருஞ் சடைகள் தாங்கி, தாங்க அருந்தவம் மேற்கொண்டு
>
> பூழி வெங் கானம் நண்ணி, புண்ணியப்புனல்கள் ஆடி,
>
> ஏழ்-இரண்டு ஆண்டின் வா"
>
> என்று, இயம்பினன் அரசன் என்றாள்.

இதைச் சொன்னது கைகேயி, யாரை? இராமனைப் பார்த்து. இராமன் யார்? அவதார புருஷன், ஆண்டவன். ஆண்டவனே மனிதனாக வந்த அந்த இராமனைப் பார்த்துச் சொன்னது. அந்த இராமனுக்கே 14 ஆண்டுகள்தான். ஆனால் எங்கள் ஆண்டவன்--13 மற்றும் 5 ஆண்டுகள் சேர்த்து 18 வருடங்கள் பொறுத்து மீண்டும் நான்காவது முறையாக இந்தத் தமிழகத்தினை ஆளுகின்ற ஒரு வாய்ப்பினைப் பெற்று இருக்கின்றார்கள். அவருக்குக் கீழே

பணியாற்றக்கூடிய நாங்கள் எந்த ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையிலும், எந்தவொரு நிலையிலும் தவறுதலுக்கு உள்ளாகமாட்டோம்; அவர் சொல்படி நடப்போம் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர் நலத் துறையின் மானியக் கோரிக்கைகளிலே என்னுடைய கருத்துக்களை இங்கே முன் வைக்க விரும்புகிறேன். மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்தியாவிலேயே முதன் முதலாக இட ஒதுக்கீடு வழங்கியவர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதால் நாங்கள் எல்லாம் அவர்களைப் பாராட்டுவது ஒரு பக்கம் இருந்தாலும்கூட, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி போன்றவர்கள் எல்லாம்கூட பாராட்டி இருப்பதை நான் உண்மையிலேயே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்தகைய மனமாற்றங்கள் வர வேண்டும் என்றுதான் (சிரிப்பு) எங்களைப் போன்றவர்கள் இன்றைக்கும் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால் காரியம் ஆகிற வரையிலே பேசி, நன்றி சொல்லிவிட்டு, காரியம் முடிந்ததற்குப் பின்னாலே, அதாவது தேர்தல் அலை அடிக்கிறபொழுது, கடற்கரையில் நின்று காணாமல் போய்விடுவதைப்போல காணாமல் போய்விடக்கூடாது; தொடர்ந்து அவர்கள் தங்களுடைய நன்றி நிலைப்பாட்டில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்லவற்றை எந்தநேரத்தில் யார் செய்தாலும், நாங்கள் நிச்சயமாகப் பாராட்டத் தவறமாட்டோம்; அல்லாதவற்றைச் செய்கின்ற நேரத்திலே சுட்டிக்காட்டுவோம்; ஆனால் நிச்சயமாக சோரம் போகமாட்டோம் என்பதை இந்தநேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 11-40

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நல்லவற்றைப்



பாராட்டுவதாகச் சொல்கிறார்கள். இந்த இட ஒதுக்கீட்டுக்காக இன்னுயிர் நீத்த தியாகிகளுக்கு 3 இலட்ச ரூபாய் நிதியுதவியும், 1,500 ரூபாய் ஓய்வூதியமும் சுமார் 25 குடும்பங்களுக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் வழங்கியபோது 'இது காலம் கடந்த உதவி' என்று சொன்னது பாராட்டுகிற தன்மையா, நன்றி மறந்த தன்மையா என்பதை ஒரு கணம்--நாட்டோர்கள் சிந்திக்கிறார்கள்--இவர்கள் சிந்திக்க வேண்டும்.

சோரம் போவதைக் கொள்கை அளவிலே, சோரம் போவதை இயக்க அளவிலே, சோரம் போவதை வாடிக்கையாகக் கொண்டிருப்பவர்கள், கொள்கை உறுதிப்பாட்டிலே உறுதியாக இருப்பவர்களைப் பார்த்து, 'ஈயத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை' என்பதைப் போல் இன்றைக்குச் சில பேர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாட்டு மக்கள் இதையெல்லாம் புறந்தள்ளி விடுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கண்ணதாசன் ஒரு பாடலில்,

"உடலுக்கு உயிர் காவல்;

உலகுக்கு ஒளி காவல்;

கடலுக்கு கரை காவல்;

கண்ணுக்கு இமை காவல்."

என்று சொன்னதைப்போல, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட, சிறுபான்மையின மக்களுக்கு ஒரே காவல் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதை நாடு ஏற்றுக்கொண்டிருக்கிறது; நல்லோர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அந்த வகையிலே ஏற்காதவர்களும் ஏற்பார்கள் என்பதை இந்தநேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மறைந்த இசுலாமியப் பெரியவர், மதிப்பிற்குரிய அப்துல் சமது அவர்கள் அண்மையிலே ஒரு மாநாடு நடத்தியபோது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 'சிறுபான்மையின மக்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வழங்கப்படும்' என்று அறிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்களும் அந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டு வருகிறார்கள். எனவே

சிறுபான்மையின மக்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென்பதை வரவேற்கிற அதே நேரத்திலே வன்னியர்கள் 20 சதவீதம் தனி இட ஒதுக்கீடு கேட்டும், அந்தக் கோரிக்கை இன்னும் கிடப்பிலே கிடக்கிறது. அதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு சாதிவாரியான கணக்கெடுப்பு வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்தக் கணக்கெடுப்பில் ஏற்கெனவே ஒவ்வொரு சாதியினரும் சொல்கிற மக்கள் தொகையைக் கணக்கெடுத்தால், இந்திய மக்கள் தொகையைவிட அதிகமாகப் போய்விடும். ஆகவே உண்மையான பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய கணக்கினை அறிய, சாதிவாரியான மக்கள் தொகைக் கணக்கெடுப்பினை அரசு நடத்திட வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறபோது, அரசு ஏற்றக்கோல் அளவிற்கு மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கியிருக்கிறது. ஆனால் பல துறைகளிலே பார்த்தீர்களேயானால் அறுவாள்பிடி அளவிற்குக்கூட நிறைவேற்றபபடாமல் இருக்கிறது என்பதைத்தான் அதற்கென்று போடப்பட்டிருக்கின்ற ஆய்வுக் குழுவானது, உயர்மட்டக் குழுவானது அதனுடைய கண்டுபிடிப்புகளை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறது.

உதாரணத்திற்கு ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்த உயர்மட்டக் குழு அண்மையிலேகூட, மின் வாரியத்திலே நிர்வாகப் பிரிவிலே 1995-லே நியமனம் செய்யப்பட்ட 119 பேர்களை, இடஒதுக்கீடு அடிப்படையில் ஏன் நியமனம் செய்யவில்லை என்று அழைத்து, ஆய்வு செய்தபோது, அவர்கள் மிகச் சர்வசாதாரணமாக 'அது ஏற்கெனவே இருந்த ஆட்சியிலே நேர்ந்த தவறு' என்று சொல்லி, தப்பித்து விடுகிறார்கள். நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என்னவென்று சொன்னால், இந்த மாதிரியுள்ள இடங்களில் எப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 'back log' வைத்து வழங்குகிறீர்களோ, அதைப்போல மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களான இவர்களுக்கும், மின் வாரியத் துறையிலே இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். குறிப்பாக இந்த 119 பேர்கள் மிகப் பிற்படுத்தப்பட்ட,



தாழ்த்தப்பட்ட சிறுபான்மையின மக்கள். அதிலும் குறிப்பாக பெண்களாகவும், ஊனமுற்றவர்களாகவும் இருக்கிறார்கள். இன்றைக்கு 11,000 பேர்களுடைய வாழ்விலே ஒளியேற்றி வைத்திருக்கிற நம்முடைய மின் வாரியத் துறை அமைச்சர் அவர்கள், இந்த 119 பேர்களின் வாழ்விலும் ஒளியேற்றி--பிற்படுத்தப்பட்ட நலக் குழுவின் மூலமாக பரிந்துரை செய்யப்பட்டிருக்கிற காரணத்தாலும்--அவர்களுக்கும் பணியை வழங்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கர்நாடகத்திலே 1978 முதல் S.C./S.T. மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பதவி உயர்விலே இட ஒதுக்கீடு வழங்க ஆவன செய்யப்படும் என்று அறிவிப்பு வந்திருக்கிறது. 'Hindu' பத்திரிகையிலேகூட இன்றைக்கு அதுபற்றிய செய்தி வந்திருக்கிறது. நான் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்வதெல்லாம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 1997 ஆம் ஆண்டோடு பதவி உயர்விலே இட ஒதுக்கீடு என்பதானது முடிவுற்றது. மண்டல் குழுவினுடைய அறிக்கை தொடர்பாக உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பினுடைய அடிபபடையிலே அந்த இடர்ப்பாடு ஏற்பட்டது. இன்றைய வரையிலும் மத்தியக் கூட்டணி ஆட்சியிலே இருக்கின்ற, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்காகப் பாடுபடுவதாகச் சொல்லிக்கொள்பவர்கள் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவர ஏன் வலியுறுத்தவில்லை என்பதை இந்தநேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே நாடாளுமன்றத்திலே மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பதவி உயர்விலே இட ஒதுக்கீடு செய்கின்ற வகையில் திருத்தம் கொண்டுவரப்பட்டால் ஒழிய, பதவி உயர்விலே இட ஒதுக்கீடு வழங்கப்பட முடியாது என்கிற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே தமிழக அரசு, மத்திய அரசுக்கு எழுதி, வற்புறுத்தி, அத்தகைய திருத்தத்தினைக் கொண்டுவந்து, அனைத்துத் துறைகளிலும் மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பதவி உயர்விலும் இட ஒதுக்கீடு வழங்க ஆவன செய்துதர வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-45*

ஒவ்வொரு துறையிலும் பணி நியமனம் செய்யப்படுகிறபொழுது, அதனுடைய குறிப்புகள், பிற்படுத்தப்பட்ட நலத் துறைக்கு வந்தாக வேண்டும். அதைக் கண்காணிக்கிற அதிகாரம் பிற்படுத்தப்பட்ட

நலக் குழுவிற்கு இருக்க வேண்டும் என்று நான் இந்தநேரத்தில் வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகத்தைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டது. நான் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே வருகிற செய்தி அது. 275 இடங்களுக்கு மேலே காலியாக உள்ள அந்த இடங்களை நிரப்புவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். இதிலே பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு தரப்படவேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

TABCEDCO-வில் வழங்கப்படுகிற கடனுதவி சரிவர வழங்கப்படுவதில்லை. எனவே, TAHDCO மூலமாக வழங்கப்படுகிற கடனுதவியைப் போல--வட்டி குறைவாகவும், மானியத்தோடும் அவர்களுக்குக் கடனுதவி கிடைப்பதைப் போல--TABCEDCO-வில் கடனுதவி வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 15 ஆயிரம் பேர்களுக்கு இந்தக் கடன் வருகிற ஆண்டில் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்யக்கூடியவர்களுக்கு இந்த TABCEDCO மூலமாக வழங்கப்படுகின்ற கடன்--குறைந்தது ஒரு சட்டமன்ற உறுப்பினர் 50 பேருக்குப் பரிந்துரை செய்தால்--அவர்களுக்கு வழங்குவதற்கு இந்தத் துறை ஆவன செய்ய வேண்டுமென்று நான்இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

வேலைவாய்ப்புத் துறையிலே, கனரக ஓட்டுநர் பயிற்சி, கணினி பாடத் திட்டம் ஆகியவை வரவேற்கத்தக்கது. இருந்தாலும் ஒன்றை நான் இந்தநேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். எப்படி திருப்பூரிலே பனியன் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அங்கே சிறப்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதோ--அதேபோன்று ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் பகுதியிலே முந்திரி அதிகமாக விளைகிறது. ஜெயங்கொண்டத்தில் முந்திரி ஏற்றுமதி அபிவிருத்தி Council கிளை ஒன்றை, கொச்சியிலே உள்ளதைப் போல ஏற்படுத்தி, அந்தப் பகுதிவாழ் மக்கள் முந்திரி உடைத்து, அதைப் பதப்படுத்துகின்ற தொழிலில் பயிற்சி பெறுவதற்கும், இதிலே நல்ல விலையைப் பெறுவதற்கும் அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளைக் கண்காணிக்க குழு அமைக்கப்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உள்ளாட்சித் துறைகளில் பொறுப்பிலுள்ளவர்களை இந்தக் குழுவிலே இடம் பெறச் செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், அத்தகைய மாணவர் விடுதிகளில் நூலக வசதி சரியாக இல்லை. அங்கே பாடநூல்களுக்கான reference புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும். எனவே இதை அரசு கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையிலே நாம் பல்வேறு உதவிகளைச் செய்கிற நேரத்தில், அங்கே மாணவர்களுடைய பட்டியலைக் கேட்டுப் பெறுவது மட்டுமல்லாமல் இந்த உதவிகளைப் பெறுகின்ற மாணவர்களின் தேர்ச்சி விவரம், சிறப்புத் தகுதி, அதாவது Distinction பற்றிய விவரம், இவற்றையெல்லாம் ஆண்டுதோறும் கேட்டுப் பெற, பிற்படுத்தப்பட்ட நலத் துறை ஆவன செய்ய வேண்டும். ஆண்டுதோறும் அதுபற்றிய ஒரு முன்னேற்ற அறிக்கையை, வெள்ளை அறிக்கையாகக்கூட அரசு அளிக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். குறைந்தபட்சம் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் கல்லூரி மாணவர் விடுதி கட்டித்தர இந்தத் துறை முன்வரவேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல இன்றைக்கு I.A.S. போன்ற படிப்புக்குப் பயிற்சி நிலையம் இருப்பதைப் போல, Auditor பயிற்சி தருகின்ற A.C.A. படிப்பு, Company Secretary படிப்பு, A.C.S. படிப்பு தொழில் நிறுவனங்களில், அதாவது அடக்கவிலை கணக்குத் தணிக்கையாளர், I.C.W.A. என்ற படிப்பு, போன்றவற்றுக்கெல்லாம் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையில் தனிப் பயிற்சி வழங்க வேண்டுமென்று நான் இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மிகப் பிற்படுத்தப்பட்டோர் வீட்டுவசதிக் கழகம் என்று தனியாகத் தொடங்க வேண்டுமென்றும் வணிகவளாகம் கட்டித் தர வேண்டுமென்றும் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மிகப் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் மண்டல் குழு வற்புறுத்தியதைப் போல, அதிகாலை, இரவு நேரங்களில் தனிப் பயிற்சியை அந்த மாணவர்களுக்குத்தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்கள் நுழைவுத் தேர்வு எழுதுவதற்கு ஒன்றியத் தலைமையிடங்களில் தனிப் பயிற்சி தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்துகின்ற Group 1 மற்றும் 2 தேர்வுகளிலே வழங்கப்படுகின்ற நேர்காணல் மதிப்பெண்ணை 50 ஆகக் குறைக்க வேண்டும். அப்பொழுதுதான் பிற்படுத்தப்பட்ட மக்கள் நிறைய வாய்ப்புகளைப் பெற முடியும் என்று நான் இந்தநேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாணவர்களுக்கு உணவுத் தொகையாகத் தரப்படுகின்ற ரூ. 240 என்பது போதுமானது அல்ல. அதைப் பள்ளி மாணவர்களுக்கு 400 ரூபாயாகவும், கல்லூரி மாணவர்களுக்கு 500 ரூபாயாகவும் வழங்க வேண்டுமென்று நான் இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன். (குறுக்கீடு) திரு. தீரன், சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையில் சமையலர், காவலர் போன்றவர்களுக்குப் பணியேற்ற நாளிலிருந்து பணி நிரந்தரம் செய்யப்படுவதைப் போல, பிற்படுத்தப்பட்ட மாணவர் நல விடுதிகளில் உள்ள சமையலர், காவலர்களும் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கையோடு, படித்த பட்டதாரிகள் பலபேர் இருக்கிறார்கள். நில அளவைத் துறையிலே பணிபுரிவோருக்குப் பதிவு எழுத்தர், இளநிலை உதவியாளர் போன்று பதவி உயர்வு தரப்படுவதைப் போல, இந்தத் துறையிலே, விடுதியிலே பணியாற்றக்கூடிய, பட்டதாரிகளாக உள்ள சமையலருக்கும், காவலருக்கும் பதவி உயர்வு வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

முற்பகல் 11-50

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும்



பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பான மானியக் கோரிக்கையிலே, அன்புத் தலைவர், மக்கள் தலைவர், ஐயா ஜி.கே. மூப்பனார் அவர்கள் தோற்றுவித்த தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேசுவதிலே மகிழ்ச்சி அடைகிறேன்; வாய்ப்பிற்கு நன்றி கூறுகிறேன். இன்றைக்கு இந்த அவை ஆரம்பிக்கப்படும்போது, "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்...." என்ற குறட்பாவைக் கொண்டு தொடங்கப்பட்டது. "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்"; "எல்லோரும் ஓர் நிறை" என்ற கோட்பாட்டின் அடிப்படையிலே மிக முக்கியமான ஒரு துறையாக இருக்கின்ற இந்த பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை செய்ய வேண்டிய காரியங்கள் குறித்து என்னுடைய கருத்துக்களை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய பொதுச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசுகின்றபோது, அரசமைப்புச் சட்டத்திலே திருத்தத்தைக் கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்தவர், பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு, தந்தை பெரியார் அவர்கள் அதற்கு வித்திட்டவர் என்று கோடிட்டுக் காட்டி, இதுகுறித்து இருவரையுமே பெருமைப்படுத்தினார்கள். அந்த வகையிலே--இந்த சித்தாந்தத்திற்குத் தந்தையாகப் பெரியார் அவர்கள் இருந்தாலும், அதைச் செயல்படுத்திக் காட்டியவர் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

தன்னுடைய ஆட்சிக் காலத்திலே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருடைய நலனைப் பேணிக் காத்த பெருமை பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கு உண்டு. அந்த வகையிலேதான் கிராமங்கள் தோறும் பள்ளிகள் வேண்டும்; படிக்காத மாணவர்கள் இருக்கக்கூடாது என்ற ஒரு நல்ல நிலைமையை அவர்கள் உருவாக்கினார்கள். இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட, பிற்படுத்தப்பட்டோர் நலனைக் காக்கின்ற கேடயமாகக் கல்வி விளங்குகிறது என்ற ஒரு வாக்கியம் இருக்கிறது. ஆகவே கல்விக்கு உரிய முக்கியத்துவத்தை அளித்து, உணர்ந்து, செயல்படுத்தி, இன்றைக்கு என்னைப்போன்றவர்கள் மருத்துவர்களாக இருப்பதற்குக் காரணமாக இருந்தவர் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

அதேபோல இடஒதுக்கீட்டுக் கொள்கையிலேகூட முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்பதையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள், தன்னுடைய ஆட்சிக்காலத்திலே, 14 விழுக்காடு இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்து, அந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையினைத் தொடங்கியவர்கள் அவர்கள்தான் என்பதனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்கூட, ஓமந்தூராருடைய நூற்றாண்டு விழாவிலே மிகப் பெருமையோடு அவருடைய வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிட்டுச் சிறப்புச் செய்தார்கள். ஆகவே இந்த சமூக நீதி என்ற concept-லே, அந்தக் கொள்கையிலே, யாருக்கும் எந்தவொரு கருத்து வேறுபாடும் இல்லை. எல்லோரும் ஒரு சமநிலையிலே இருக்க வேண்டும்; சமதர்ம சமுதாயம் பேணப்பட வேண்டும் என்பதிலே எல்லோருக்கும் இருக்கிற அக்கறை இங்கே போற்றப்பட வேண்டும். பொதுவாக, வாழ்க்கை நெறிமுறைகளில் இருக்கின்ற, வாழ்க்கை நெறிகளில் இருக்கின்ற முரண்பாடுகள் எல்லாம் களையப்பட இந்த சமூக நீதி நிச்சயம் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

நேற்றைக்குக்கூட ஒரு சில அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்; 1989-லே ஆளுநராக இருந்த பி.சி. அலெக்ஸாண்டர் அவர்கள் நியமித்த வெங்கடகிருஷ்ணன் அவர்களுடைய குழு செயல்பட முடியாமல் போனது என்று குறிப்பிட்டு, அந்தக் குழுவைப் போன்று ஓர் அமைப்பை நிறுவி, சாதிவாரியான கணக்கெடுப்பு எடுத்து, அதிலே சரியான ஒரு நீதியை நிலைநாட்ட வேண்டுமென்று சொல்லி, பிற்படுத்தப்பட்டோர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நேற்றையதினம் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். அதை அரசு கவனத்தில் கொண்டு, நிச்சயமாக அப்படி ஒரு கணக்கெடுப்பு நடத்தினால், வழங்கப்பட வேண்டிய நீதி சரியாக வழங்கப்படும் என்பதால், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்று சொன்னால் பல சாதிகளை எடுத்துக்கொண்டால், அவர்கள் கூறுகின்ற எண்ணிக்கை--எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல-- கூட்டுத்தொகை என்பது, இந்தியாவில் உள்ள கூட்டுத் தொகை அளவிற்கு வந்துவிடுகிறது. ஆகவே உண்மையான நிலவரம்; கணக்கெடுப்பு மட்டும் அல்ல, புள்ளிவிவரம் மட்டுமல்ல; அவர்கள் வாழ்கின்ற வாழ்க்கை நிலை, அவர்கள் வாழ்கின்ற சமூக நிலை இவற்றையும்



கணக்கெடுப்பில் வைத்துக் கொண்டு, அந்த நீதியைச் சரிவரப் பரிபாலனம் செய்ய வேண்டியது அரசினுடைய கடமையாகும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம், பல ஆண்டுகளாகச் சரியாக நிர்வகிக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. ஆகவே இந்த நிலைமையைச் சரி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 69 விழுக்காடு இட ஒதுக்கீடு வழக்கிலே உச்சநீதிமன்றம் தலையிட்டிருந்தாலும்கூட, பல senior வழக்கறிஞர்களைக் கொண்டு அதனை நிலைநாட்ட வேண்டும். Immunity என்று சொல்வார்கள் ஆங்கிலத்திலே. ஒரு மிகப் பெரிய பாதுகாப்பை இந்த அரசாங்கம் அளிக்க வேண்டும். அதற்காக பெருந்தொகையைக்கூட செலவு செய்யலாம். senior வழக்கறிஞர்களை வைத்துக் கொண்டு உச்ச நீதிமன்றத்திலே அத்தகைய ஒரு பாதுகாப்பைப்பெற இந்த சமூக நீதி வழக்கிற்காகச் செலவிடலாம் என்ற ஒரு யோசனையை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

முற்பகல் 11-55

தனியார் துறையிலே இந்த விழுக்காட்டை நிச்சயமாக நீங்கள் செயல்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் நிச்சயமாக பல்வேறு நிலைகளிலே சமநிலை தோன்றும் என்பதை நான் இங்கே கூற விரும்புகின்றேன்.

I.A.S.-ஐப் பொறுத்தவரையிலே இந்த ஆண்டு தமிழ்நாட்டிலேயிருந்து 37 பேர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். அதிலே 12 பேர் நம்முடைய துறையின் சார்பாகப் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். எண்ணிக்கையைப் பார்க்கும்போது இது மிகவும் குறைவு. ஆகவே இந்தத் துறையின் சார்பாக அளிக்கப்படுகிற பயிற்சி செம்மையாக்கப்பட வேண்டும். இந்த 37 பேரிலே குறைந்தது 75 சதவிகிதமாவது இந்தத் துறையின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். எனவே இந்தத் துறையின் சார்பாக நல்ல முறையில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக ஒதுக்கப்படும் நிதி மிகவும் குறைவாக இருப்பதனால் இந்த நிதி ஆதாரத்தை நீங்கள் அதிகமாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பள்ளிப்பட்டு தொகுதியைப் பொறுத்தவரையிலே கே.ஜி. கண்டிகை, நொச்சிலி போன்ற கிராமங்களுக்கு இரண்டு மாணவ விடுதிகளை இரண்டு ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த முறையாவது அதைச் செய்து தருவார் என்று நினைக்கின்றேன்; செய்து தர வேண்டும் என்று நான் இந்த மன்றத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நரிக்குறவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு புது வெளிச்சத்தை இந்த அரசு ஊட்ட வேண்டும். அவர்களின் நாடோடி வாழ்க்கை என்பது கடந்த கால வாழ்க்கையாக இருக்க வேண்டும். நிகழ்காலத்திலே அப்படி ஒரு நாடோடி வாழ்க்கை வாழ்பவர்கள் யாரும் இருக்கக் கூடாது. நரிக்குறவர்கள் வாழ்க்கையிலே சென்ற ஆட்சிக் காலத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறந்த அக்கறை எடுத்துச் செய்தார்கள். அந்த அளவுக்கு இந்த ஆட்சிக் காலத்திலும் செய்து நரிக்குறவர் இனத்தைச் சிறந்த ஒரு இனமாக, நல்ல வாழ்க்கை முறையைக் கொண்ட ஒரு சிறந்த இனமாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு)

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். கல் உடைக்கும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலே quarry கல் உடைக்கின்ற உரிமை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதிலே அரசு கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் மிகப் பெரிய இலாபகரமாக நடக்கின்ற தொழிலாக இருக்கின்ற quarry என்ற கற்பாறைகளை உடைக்கின்ற தொழிலை, இங்கே உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற வகையிலே எப்படி விவசாயிகளுக்குப் பாதுகாப்பைத் தர அரசு நினைக்கின்றதோ அதைப்போல கல் உடைக்கின்ற ஏழைத் தொழிலாளர்களுக்கு அந்த உரிமையை ஒரு சங்கத்தின் மூலமாகவோ அல்லது கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகவோ அரசு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் பற்றிய மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கான வாய்ப்பை அளித்த உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் தமிழகத்தின் இடஒதுக்கீட்டுக் கொள்கையைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து இந்த அரசு உறுதியான வகையிலே எடுக்க நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு கல்விக்காக, பொருளாதார மேம்பாட்டிற்காக, வீட்டு வசதிக்காக, இன்னபிற சலுகைகளுக்காக பல்வேறு திட்டங்களை இந்த அரசு அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது. இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையிலே அதைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்கிற அதேநேரத்தில் இடஒதுக்கீட்டுக் கொள்கை என்பது அரசுத் துறைகளுக்கு மட்டுமல்லாமல் தனியார் தொழில் துறைகளுக்கும் அமல்படுத்தப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்குக் காரணம் பல்வேறு அரசுத் துறைகள் தனியார் மயமாக்கப்படுகிற சூழ்நிலை வந்து கொண்டிருக்கிறது. அதிலே எங்களுக்குக் கருத்து மாறுபாடுகள் இருந்தாலும்கூட தனியார் மயமாக்கல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறபோது அந்தத் தொழில் நிறுவனங்களிலே, தொழிற்சாலைகளிலே வேலைவாய்ப்பு என்பது கிடைக்க முடியாத ஒரு சூழ்நிலைக்கு ஆளாக்கப்படுகிற நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே இடஒதுக்கீட்டுக் கொள்கை தனியார் துறையிலும் ஏற்படுத்த வேண்டும் என்பதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் சாதிய மோதல்கள், அப்படிப்பட்ட சூழ்நிலைகள் எல்லாம் ஏற்பட்டு வருத்தமான சம்பவங்கள் நடந்த வரலாறு உண்டு. இவற்றையெல்லாம் போக்குவதற்கான வகையிலே எல்லாவிதமான சாதிய மோதல்களும் தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்கான முயற்சிகளைப் பல்வேறு வழிகளிலே மேற்கொண்டு தமிழகத்திலே அதனை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பினை நமது தமிழக முதல்வர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

[திரு. வை. சிவபுண்ணியம்] [1999 ஏப்ரல் 13

நண்பகல் 12-00

மேலும் தமிழகத்திலே இருக்கிற அரசியல் கட்சிகள், சாதிய அமைப்புகள் எல்லாமே இணைந்த முறையிலே இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு கண்டு, சமத்துவமாக, சகோதரத்துவத்தோடு சிறப்பாகச் செயல்படுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக சமத்துவபுரம் போன்ற பல்வேறு திட்டங்கள் பயனுள்ள வகையிலே இருக்கும். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே, பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, கல்விக்காக 73 சதவிகித நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது பாராட்டுக்குரிய ஒன்றுதான். அதேநேரத்திலே பள்ளிகளிலே படிக்கிற மாணவர்களுடைய தங்கும் விடுதிகளைப் பற்றியும் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் செயல்படுகிற மாணவர் விடுதிகள், தனியாருக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் இயங்குகிற அந்த விடுதிகளை இப்படிக் கொடுப்பதனுடைய விளைவாக--கல்லூரி விடுதிகள், பள்ளி விடுதிகள் என்பது சரியாக நிர்வகிக்கக்கூடிய , சூழ்நிலை ஏற்படாத காரணத்தினால்--அசுத்தம், சுகாதாரக் கேடுகள் ஏற்பட்டு, பழைய நிலையில் இல்லாமல், தரம் கெட்டுவிட்ட சூழ்நிலையில் அவை இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே இப்போது பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் இயங்குகிற அந்த விடுதிகளையும் தனியாருக்குக் கொடுத்து விடுகிற சூழ்நிலை இருக்குமோ என்ற அச்சத்தின் காரணமாகச் சொல்கிறேன். அப்படிப்பட்ட விடுதிகளைத் தனியாருக்குக் கொடுக்கக் கூடாது என்பதை நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் மாணவர்களுக்கு வழங்கப்படுகிற உணவுக் கட்டணம் என்பது மிகக் குறைவாக இருக்கிறது. இப்போதுள்ள விலைவாசிகளுக்கேற்ப அந்தக் கட்டண விகிதங்களை அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒருவேளை உணவிற்கு 2 ரூபாய் 40 காசு இப்போது வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. மாதம் ஒன்றுக்கு 225 ரூபாய் மட்டுமே வழங்கப்படுகிறது. அது ஒரு மாணவனுக்குப் போதுமானதாக இருக்காது. காரணம் 11 வயது முதல் 20 வயதுவரை படிக்கக்கூடிய மாணவர்கள்--அங்கேயே தங்கிப் படிக்கக்கூடிய மாணவர்கள்--



1999 ஏப்ரல் 13] [திரு. வை. சிவபுண்ணியம்]

இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்காக வழங்கும் உணவுக் கட்டணத்தை பரிசீலிக்க வேண்டும். நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டிருக்கக்கூடிய விலைவாசி நிலைமைக்கேற்ப இந்தக் கட்டண விகிதத்தை அதிகப்படுத்த வேண்டும். ஒருவேளை உணவுக்குக் குறைந்தபட்சம் 5 ரூபாயாவது வழங்க வேண்டும். எனவே அரசு மறுபரிசீலனை செய்து, இந்தக் கட்டணத்தை உயர்த்தி மாதம் 450 ரூபாய் வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாணவர் விடுதிகள், மாணவியர் விடுதிகளைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே, புதிய மாணவ மாணவியர் விடுதிகள் கட்டுவதற்கு அல்லது ஆரம்பிப்பதற்கு உண்டான அறிவிப்புகளே இல்லை. இது வருத்தத்திற்குரிய ஒன்று.

அதேபோல் தொடங்கப்பட்டிருக்கிற விடுதிகளுக்குரிய புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான அனுமதி குறித்த எந்தத் கொள்கை நிலையும் இதிலே குறிப்பிடப்படவில்லை. நேற்றைக்கு முன்தினம் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியிலே சுற்றுப்பயணம் மேற்கொண்டார்கள். நானும் இதுகுறித்துக் கேட்டேன். அந்த அறிவிப்புகள் இப்போது இருக்கிற நிதிநிலைமையிலே இயலாது என்று சொன்னார்கள். ஆனால் இப்போது இருக்கிற நிலையைப் பார்க்கிறபோது, இதற்குப் போதுமான நிதி ஒதுக்குவதுடன், கூடுதலான நிதி ஒதுக்க வேண்டிய சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே தொடங்கப்பட வேண்டிய அந்த விடுதிகளும் தொடங்கப்பட வேண்டும். அதேபோல் தொடங்கப்பட்டு வாடகைக் கட்டடங்களிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிற அந்த விடுதிகளுக்கு உரிய புதிய கட்டடம் கட்டுவதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பிலே தனிக் குழு அமைக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, அவர்களுக்கு நல்ல திட்டங்களை அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அதன்படி அவர்களுக்கு நல்ல சலுகைகளையெல்லாம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக மாநில அரசுக்கு இட-ஒதுக்கீட்டுக் கொள்கையை நிர்ணயித்துக்கொள்வதற்கான அனுமதியை மத்திய அரசாங்கம் வழங்க

[திரு. வை. சிவபுண்ணியம்] [1999 ஏப்ரல் 13

வேண்டும் என்றும், அதற்கான சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால், தேசிய அளவில் எடுக்கப்படுகிற முடிவுகள் என்பது, நம்முடைய மாநிலத்தினுடைய இடஒதுக்கீட்டுக் கொள்கையை பாதிக்கும் என்கிற காரணத்தினால், மாநிலங்களுக்கு இதில் அதிகாரங்கள் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்கிறேன்.

குறிப்பாக இட ஒதுக்கீட்டைக் கண்காணிப்பதற்காக மாநில அளவிலே கண்காணிப்புக் குழு நியமிக்கப்பட வேண்டும். பணியாளர்கள் தேர்வுக் குழுக்களிலே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையினுடைய பிரதிநிதிகள் இருப்பதோடு, சட்டமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கிய குழு அமைக்கப்பட வேண்டும். அப்போதுதான் அந்தப் பணியாளர் தேர்வு என்பது, முறையாக சரியாக நடைபெறுகின்றதா என்பதைக் கண்காணிப்பதற்கான வாய்ப்பு இருக்கும். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

எங்கள் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே சில கோரிக்கைகளை ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டம், நெடுவாசல் கிழக்கு என்ற ஊரிலே அதிகமான மாணவர்கள் படிக்கிற காரணத்தினால், அங்கே மாணவர்கள் தங்கிப் பயில்வதற்கான வாய்ப்பு இல்லாத நிலையைக் கருதி, அங்கே மாணவ மாணவியர் விடுதி ஒன்று அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பரிசீலித்து ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் மன்னார்குடி தொகுதியிலே, சோழபாண்டி கிராமத்திலே அவர் கோரிய, மாணவர் விடுதியைத் தொடங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். மன்னார்குடியிலே சென்ற ஆண்டு புதிய மாணவியர் விடுதி தொடங்கப்பட்டிருக்கிறது. அதற்குக் கட்டட வசதி இல்லை. அதற்குக் கட்டடம் கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக காட்டு நாயக்கர்கள் சாதிச் சான்றிதழைப் பெறுவதிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அதிலே இருக்கிற முரண்பாடுகளைப் போக்கி, அவர்களுக்கு சாதிச் சான்றிதழ்



1999 ஏப்ரல் 13] [திரு. வை. சிவபுண்ணியம்]

கிடைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். மேலும் பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. காலத்தின் அருமையைக் கருதி இத்துடன் முடித்துக்கொள்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் பல்வேறு சலுகைகளை அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். கொஞ்சும் தமிழிலே பேசுகின்ற நமது அமைச்சர் அவர்களே, எங்களுடைய கோரிக்கைகளை எல்லாம் ஏற்று, அவற்றை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. முத்துராமலிங்கம்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் குறித்த மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பினை அளித்த தங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர், தலைவர் கலைஞர் அவர்களின் சிந்தனையில் உதித்த சமத்துவபுரம் திட்டத்தை, மாநிலத்திலேயே முதல் சமத்துவபுரமாக, என்னுடைய திருமங்கலம் தொகுதியில், மேலக்கோட்டையிலே அமைத்துத் தந்ததற்கும், நாடகத் துறையில் தேசிய விடுதலைக்காகப் போராடி தன்னுயிர் நீத்த தியாகி விசுவநாததாஸ் அவர்கள் வாழ்ந்த வீட்டினைப் புதுப்பித்து, அரசு நினைவு மண்டபம் கட்டித் தந்ததற்காகவும், விடுதலைப் போராட்ட முதல் மாவீரன் பூலித்தேவனுக்கு நினைவு மண்டபம் மற்றும் மானம் காத்த பூமி சிவகங்கையில் மருது சகோதரர்களுக்கு புகழாஞ்சலி நிகழ்ச்சி நடத்துவதற்கு அறிவிப்புச் செய்ததற்கும், 40 ஆண்டு கால விவசாயிகளின் கோரிக்கையாக இருந்த நிலையூர் கம்பிக்குடி கால்வாய்த் திட்டத்திற்கு ரூ. 8 கோடியே 94 இலட்சம் ஒதுக்கியதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையில் ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலத் துறைக்கு கடந்த காலங்களில் 90 கோடி ரூபாய் என்ற அளவிற்கு இருந்த ஒதுக்கீட்டை, இந்த ஆண்டு 180 கோடி ரூபாய்

D
V211,31N99
N99.72.1
221087

அளவிற்கு ஒதுக்கியிருப்பது மிகவும் பெருமைக்குரியது. அதை வரவேற்கின்றோம். வரும் ஆண்டில் இதற்கு 300 கோடி ரூபாய் அளவிற்கு நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது மாநிலத்தில் மிக வரவேற்பினைப் பெற்றிருக்கிறது. ஆனால் ஒரு சில பகுதிகளில் காலதாமதம் ஆகிக்கொண்டிருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிவர்த்தி செய்து, இலவச வீட்டுமனைப் பட்டா பெறக்கூடிய மக்களுக்கு, அரசாங்கம் இலவசமாக வீட்டையும் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் இயங்கி வரக்கூடிய அமைப்புகளிலிருந்து, படித்த பட்டதாரிகளுக்கு கடன் உதவி அளிப்பதில் மிகவும் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தக் காலதாமதத்தைப் போக்கி, மனு செய்தபோதே அவர்களுக்கு உடனடியாக கடன் உதவி வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வை. சிவபுண்ணியம் தலைமை)**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்கிற இந்தத் தலைப்பைப் பொறுத்தவரையில், 1989ஆம் ஆண்டு தமிழகத்தில் மாண்புமிகு கலைஞர் அவர்கள் பொறுப்பு ஏற்றவுடன் சீர் மரபினர் என்ற பெயரை ஒதுக்கிவிட்டு, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற பகுதிகளில் இருக்கின்ற மறவர் சமுதாயத்து மக்களும், மதுரையிலே இருக்கின்ற பிரமலைக்கள்ளர் சமுதாயத்து மக்களும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டனர். இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலியிலுள்ள மறவர் சமுதாய மக்கள் தொழில் காரணமாக மதுரை, திருச்சி, சென்னை போன்ற பகுதிகளுக்கு வந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இங்கே அவர்களுக்கு பிற்படுத்தப்பட்ட சாதிச் சான்றிதழ்தான் வழங்கப்படுகிறது. இந்தக் குறையைப் போக்குகின்ற வகையில் அவர்களுடைய பிறந்த ஊரை அறிந்துகொண்டு, மறவர் சமுதாய மக்கள் எங்கிருந்தாலும் அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் பலர் இந்தக் கோரிக்கையை அனுப்பியிருக்கிறார்கள்.

முக்குலத்தோர் சமுதாய மக்களை--ஆறு பிரிவுகளாக, ஆப்பநாடு மறவர், செம்மநாடு மறவர், அம்பலக்காரர், கள்ளர், பிரமலைக்கள்ளர், அகமுடையர் என்று இருக்கக்கூடியவர்களை--ஒட்டுமொத்தமாக சீர்மரபினர் பட்டியலில் சேர்த்து, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று என்னைப் போன்றவர்களிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

என்னுடைய தொகுதியில் கள்ளர் சீரமைப்புத் துறையின் மூலமாக ஏராளமான பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போதுகூட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரையில் நடந்து வருகிற 108 ஆரம்பப் பள்ளிகளில் 10 பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தித் தந்திருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பதிலாக ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்படும் என்ற அறிவிப்பு வரவில்லை. எனவே பள்ளிகள் இல்லாத கிராமங்களுக்கு ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கி வைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளர் சீரமைப்புத் துறையின் சார்பில் என்னுடைய திருமங்கலம் தொகுதி கப்பலூரில் ஓர் உயர்நிலைப் பள்ளி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதனை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்கள் விடுதியினைப் பொறுத்தவரையில் மேலஉலப்பனூரில் ஒன்றும், கூடக்கோவிலூரில் ஒன்றும், திருமங்கலம் நகரத்தில் ஒன்றும் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. அதற்குப் புதிய சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூடக்கோவிலூர் மாணவர் விடுதிக்கு ஒரு புதிய கட்டடமும் அதுபோல செக்கானூரில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பெண்கள் மேல்நிலைப் பள்ளியைத் தனியாக அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சீர் மரபினர் துறையின் சார்பில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி செக்கானூரில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கடந்த காலத்தில்

அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மீண்டும் எடுத்து, அந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளர் சீரமைப்புத் துறை என்பது மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு, மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. தேனி மாவட்டத்திற்கும், திண்டுக்கல் மாவட்டத்திற்கும் தனி அலுவலகம் இல்லாமல் அவர்கள் எல்லாம் மதுரைக்கு வந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை மையமாகக் கொண்டு ஒரு தாசில்தார் அளவிற்காவது இந்தத் துறையைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். கள்ளர் சீரமைப்புத் துறையிலிருந்து மிகுந்த பயனுள்ள எதிர்பார்ப்பினை இந்தப் பிரமலைக்கள்ளர் சமுதாய மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த எதிர்பார்ப்பை நீங்கள் தீர்த்து வைப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் இந்த வேண்டுகோளை வைக்கின்றோம்.

பிற்பகல் 12-10

பிரமலைக்கள்ளர் சமுதாயத்தில் பிறந்து, பசும்பொன் தேவருக்குப் பின்னால் முக்குலத்தோர் சமுதாயத்தில் மிகப் பெரிய தலைவராக இருந்த பெரியவர் பி.கே. மூக்கையா தேவருடைய பெயரை கள்ளர் சீரமைப்புத் துறைக்கு வைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதனை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய திருமங்கலம் நகரம் குடிதண்ணீர்ப் பற்றாக்குறையால் மிகவும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறது. திருமங்கலம் நகரத்தையும் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கி, குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவணியாபுரம் பேரூராட்சியும் குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மிகுந்த பற்றாக்குறையில் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டு இந்தத் துறை மேலும் பயனளிக்கக் கூடிய அளவிற்குச் செயல்பட வரும் ஆண்டில் ரூ.300 கோடி ஒதுக்கித் தந்திட வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர் மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இந்த மானியம் ஆரம்பிக்கின்ற நேரத்திலே அமைச்சரவர்கள் உங்களுக்கு இனிப்பு வழங்கியிருக்கிறார்கள், நீங்கள் அதை உண்ண வேண்டுமென்று சொன்னார்கள். நமது தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், இந்தத் துறையின் மேம்பாட்டிற்கு என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதற்கு, அதனை ஆய்வு செய்வதற்கு ஓர் உயர்மட்டக் குழுவினை அமைத்தார்கள். அந்த உயர்மட்டக் குழுவின் மூலமாக அந்த நலத் துறையினை பொறுப்பேற்றிருக்கின்ற அமைச்சர் அவர்களும், அதிலே பொறுப்பேற்றிருக்கின்ற அதிகாரிகளும் மிகுந்த கவனத்தோடும், ஆர்வத்தோடும் இந்தத் துறையிலே இருக்கின்ற இடர்பாடுகளை எல்லாம் களைந்து, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உயர்வு ஏற்படுத்துகின்ற வகையிலே பல்வேறு கோரிக்கைகளை--ஏறத்தாழ 21 கோரிக்கைகள் என்று கருதுகின்றேன்--நமது முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த 21 கோரிக்கைகளையும் நிறைவு செய்கின்ற நிலைதான் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்குகின்ற இனிப்பாக இருக்க முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமூக நீதிக்காக குரல் கொடுத்தவர்கள் என்று தந்தை பெரியார், காமராஜர் போன்றவர்களை இன்றைக்கு சுட்டிக்காட்டினாலும்கூட, எங்களைப் பொறுத்த அளவிலே தென் பகுதியிலே வாழ்ந்த, மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த--முக்குலத்தோர் மக்கள் அன்றைக்கு வெள்ளையர்கள் ஆளுகின்ற காலத்திலே குற்றப் பரம்பரைச் சட்டம் என்கின்ற ஒரு கடுமையான--சி.டி. ஆக்ட் என்று சொல்வார்கள்--அந்தச் சட்டத்தின் மூலமாகப் பாதிக்கப்பட்டிருந்தபோது அந்த மக்களைக் கைதூக்குவதற்காக--அந்த நாளிலே வெள்ளையர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அந்தச் சட்டத்தை

நீக்குவதற்குக் குரல் கொடுத்து வெற்றி கண்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், அவருடைய அந்தச் சிறப்புமிக்க நடவடிக்கையின் காரணமாகத்தான் அங்கிருக்கின்ற முக்குலத்து மக்கள் எல்லாம் இன்றைக்குத் தலைநிமிர்ந்து வாழ்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் இல்லை என்கின்ற இந்தச் சூழ்நிலையில் அந்த மக்களைக் கைதூக்கி விடுகின்ற ஓர் அரணாகத்தான் இன்றைக்கு தமிழகத்தின் முதல்வராக இருக்கின்ற தங்களை அந்தப் பகுதி மக்கள் எண்ணி மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு நீங்கள் ஏற்றம் சேர்க்கின்ற அளவிலே இந்தக் குழுவினுடைய பரிந்துரையை ஏற்று, அதை நிறைவு செய்ய வேண்டுமென்று நான் தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலேகூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் இன்று இருக்கின்ற மொத்த ஜனத்தொகையிலே மூன்றில் இரண்டு பங்கு இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுக் காட்டியும்கூட, அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி என்பது மிகக் குறைவாகவே இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் உணர முடிகிறது. அதற்கு ஓர் எடுத்துக்காட்டு சொல்ல வேண்டுமானால் கள்ளர் சீரமைப்புத் துறையிலே 265 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. ஆனால் அந்தப் பள்ளிகளுக்கு ஒட்டுமொத்தமாக பழுதுபார்ப்பதற்கு ரூ.2 இலட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல அத்தனை பள்ளிகளுக்கும் ஒட்டுமொத்தமாக புதிய கட்டடம் கட்டுவதற்கு 30 இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாணவர்கள், மாணவியர்கள் உட்கார முடியாத அளவுக்குப் பல்வேறு பள்ளிகள் இப்போது பழுதுபட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் சீர் செய்வதற்கு நிறைய நிதி ஒதுக்கித் தர வேண்டும்.

பிற்பகல் 12-15

அதேபோல கல்வி என்பது உபயோகமான கல்வியாக இருக்க வேண்டும். மாணவர்கள் படித்துவிட்டு, பல கல்வித் தகுதிகளை, பட்டங்களை, M.A., M.Sc., போன்ற பட்டங்களை எல்லாம் வாங்கிவிட்டு வேலையில்லாத கஷ்டத்திலே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட கல்வியாக இருக்கக் கூடாது. மாணவர்கள் தொழிற்கல்வியைப் படித்துவிட்டு, அவர்களே அந்தக் கல்வியின் மூலமாகவே ஒரு சுய தொழிலை மேற்கொண்டு வாழ்க்கையை நடத்துகின்ற ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற



நோக்கத்திலேதான் இந்த I.T.I. போன்றவையெல்லாம் ஆரம்பிக்கப்பட்டன. பின்தங்கிய, சீர் மரபினர் வகுப்புகளுக்காக கடந்த காலத்திலே பிரிக்கப்படாத மாவட்டங்களாக இருந்த மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய--3 மாவட்டங்களும் பிரிக்கப்படாத மாவட்டங்களாக இருந்தன--3 பிரிக்கப்படாத மாவட்டங்களுக்கும் 3 I.T.I. -க்களை வழங்கியிருக்கிறார்கள். ஆனால் இப்போது அந்த மூன்று மாவட்டங்களும் 8 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மதுரை மூன்று மாவட்டங்களாகவும், இராமநாதபுரம் மூன்று மாவட்டங்களாகவும், நெல்லை இரண்டு மாவட்டங்களாகவும், ஆக எட்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. எனவே மாவட்டத்திற்கு ஒன்று என்கின்ற அளவிலாவது, சீர் மரபினர்களுக்குத் தொழிற்பயிற்சி நிலையங்களை அமைத்துத் தர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அங்கே பயிலுகின்ற மாணவர்களுக்கு 967 விடுதிகள் இருக்கின்றன. அதற்கு 161 கட்டடங்கள்தான் கட்டப்பட்டிருக்கின்றன. மேலும் 806 விடுதிகளுக்குக் கட்டடங்கள் இல்லை. இந்த ஆண்டிலே, நமது சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் சுட்டிக்காட்டியதைப்போல, விடுதிகள் புதிதாக உண்டுபண்ணுவதற்கும், விடுதிகளுக்குப் புதிதாக கட்டடங்கள் கட்டுவதற்கும் எந்த நிதி ஆதாரமும் ஒதுக்கப்படவில்லை என்கின்ற நிலை இருக்கிறது. அதையெல்லாம் அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, இந்த ஆண்டே புதிதாக விடுதிகள் அமைப்பதற்கும், விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கும் ஒரு சாதகமான நிலையை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல கள்ளர் சீரமைப்புத் துறையிலே--சகோதரர் முத்துராமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல--மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ஏற்கெனவே நடத்தப்பட்டுக் கொண்டிருந்தன. செக்கானூரணி, நாட்டாமங்கலம், இராஜதானி, உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி தொகுதியிலே மூன்று இடங்களிலே நடத்தப்பட்டு வந்தன. இப்போது இடைநிலை ஆசிரியர் பயிற்சியைப் பயின்றவர்கள் இல்லை என்கின்ற நிலை அந்த வகுப்பினரிடத்திலே இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது). இப்போது தனியார் நடத்துகின்ற

பள்ளிகளிலேயெல்லாம் அவர்கள் சென்று இடம் பிடிப்பது என்று சொன்னால் ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் ரூபாயைக் கொடுத்து, அந்த இடத்தைப் பெறுகின்ற ஒரு நிலை இருக்கிறது. எனவே மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் கல்வி கற்பதற்கு வசதியாக, இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் அந்த மூன்று இடங்களிலேயும் மீண்டும் தொடங்கப்பட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல எல்லா நிலைகளிலும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான நிதி ஒதுக்கீடு என்பது மிகவும் குறைந்த அளவிலே இருக்கிறது. எல்லாத் துறைகளிலும், கல்வித் துறை விவாதத்திலே சொல்லும்போதுகூட நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்...

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** சீக்கிரம் பேச்சை முடித்து விடுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்தத் துறையைப் பொறுத்தளவிலே மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்குக் கொடுக்கப்படாத ஒதுக்கீட்டை கவனத்தில் எடுத்துக்கொண்டு அதை நிரப்புவதற்கு வருகின்ற காலத்திலும் ஆவன செய்வேன் என்று கொள்கை அளவிலே--மாண்புமிகு மூத்த அமைச்சர் அவர்கள்--ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களே நமது மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி--மற்ற எல்லாத் துறைகளிலும் இப்படி, மிகவும் குறைந்த அளவிலே 5 சதவீதம், 7 சதவீதம், 10 சதவீதம் என்றுதான் ஒதுக்கப்படுகின்றன.

இன்றைக்கு வேலைவாய்ப்புகளைப் பொறுத்தளவிலே மிகுந்த ஆழத்திலே இருப்பவர்கள், மிகுந்த பள்ளத்திலே இருப்பவர்கள், அவர்கள் கைதூக்கிவிடப்பட வேண்டிய நிலையிலே இருப்பவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள்தான் என்கின்ற முறையிலே இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர், (திரு. வை. சிவபுண்ணியம்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. நிஜாமுதீன்.



**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்திலே என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்தியாவில் மாநிலங்களின் கட்டமைப்பு ஒரே மாதிரியாக இருக்கவில்லை. மாநிலத்திற்கு மாநிலம் வாழ்கின்ற மக்கள் வித்தியாசப்படுகின்றனர். ஒரு மாநிலத்திலே பட்டியல் பழங்குடியினர் அதிகம்; மற்றொரு மாநிலத்திலே பட்டியல் வகுப்பினர் அதிகம், இன்னொரு மாநிலத்திலே பிற்படுத்தப்பட்டவர்கள் அதிகம். இன்னொரு மாநிலத்திலே பிற்படுத்தப்பட்டவர்கள் இல்லாத நிலை. இப்படி மாநிலங்களுக்கு மாநிலம் வித்தியாசப்படுகின்ற சூழ்நிலையிலே இந்தியா முழுமைக்குமான ஒரே மாதிரியான இடஒதுக்கீடு என்பது பொருந்தக்கூடியதாக இல்லை என்பதை உணர்ந்த நமது மாநில அரசு கடந்த காலத்திலே இட ஒதுக்கீட்டை நிர்ணயிக்கின்ற உரிமை மாநில அரசுகளுக்குத்தான் வேண்டும் என்றும் அதற்கான அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கிறது. இதை மீண்டும் வலியுறுத்தி அந்த உரிமையை இந்த அரசு பெற வேண்டும் என்று நான் இப்போதே வலியுறுத்த விரும்புகின்றேன். ஏன் என்று சொன்னால் ஒவ்வொரு மாநிலத்திலும் வித்தியாசப்படும்போது அந்த அடிப்படையிலே நாமும் அதையே பின்பற்றி Constitution-ல் சொல்லப்பட்டிருக்கின்ற சமன்மையைக் கொண்டுவர முடியாது. ஆகவே இட ஒதுக்கீடு விஷயத்தில் அந்த உரிமையை மத்திய அரசிடமிருந்து மீண்டும் வலியுறுத்திப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அந்த வகையிலே வழங்கப்படுகின்ற இட ஒதுக்கீடு நிலையை மாற்றி, ஒவ்வொரு வகுப்புவாரியாக எவ்வளவு மக்கள் இருக்கிறார்கள் என்ற முறையை ஆராய்ந்து, பங்கீடு முறையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

69 சதவீத ஒதுக்கீடு குறித்து உச்சநீதிமன்றத்திலே வழக்கு இருப்பதனால் அதை இப்போதைக்குச் செய்ய முடியாது; இசுலாமியச் சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு செய்ய முடியாது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதிலுரை அளிக்கும்போது குறிப்பிட்டார்கள். ஆனால் ஒரு மாநில அரசு விரும்பினால்

அல்லது தேவைப்படுகின்ற சமயங்களிலே அந்த மாநிலத்திலுள்ள சிறுபான்மையினருக்கு இடஒதுக்கீடு அளிக்க முடியும் என்று அரசமைப்புச் சட்டத்திலே பிரிவு 16 (4)-லே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி இந்த மாநிலத்திலே வாழுகின்ற சிறுபான்மையினருக்கு, முஸ்லிம்களுக்கும் சரி, கிறிஸ்துவர்களுக்கும் சரி, அவர்கள் விகிதாச்சாரத்திற்கேற்ப போதிய இட ஒதுக்கீட்டை வழங்கி அரசமைப்புச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கின்ற சமன்மையை நிலைநாட்ட வேண்டும் என்று இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல் ஆந்திரப் பிரதேசத்தின் 10-வது Session-ல் 24ஆம் தேதியன்று ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் அந்த மாநில சிறுபான்மையினருக்கென கிட்டத்தட்ட 37 சலுகைகளை அறிவித்திருக்கின்றார்கள். அதிலே அரசு அலுவலர்கள் வாழுகின்ற குடியிருப்புகளிலே 10 சதவீதம் சிறுபான்மையினருக்கு வழங்க வேண்டும் என்பதும், Economic Support Scheme-லே 10 சதவீதம் சிறுபான்மையினருக்கு வழங்க வேண்டும் என்பதும், சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரை -Vice-Chancellor-ஆக நியமிக்க வேண்டுமென்பது போன்ற 37 விதமான சலுகைகளை சிறுபான்மையினருக்கு அந்த அரசு வழங்கியிருக்கிறது. அதுபோல நமது அரசும் சிறுபான்மையினர் நலன் காக்க அவர்களுடைய கவனம் திரும்பாது அல்லது மாற்று வழிச் செல்லாது இருக்க அவர்கள் கேட்கும் நியாயமான உரிமைகளை வழங்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

அதுபோல கிட்டத்தட்ட 67 சதவீதம் மக்கள்தொகை கொண்ட இந்தப் பிற்படுத்தப்பட்டோர் மானியக் கோரிக்கைக்கு ஒதுக்கிய 106 கோடி ரூபாய் என்பது மிகவும் சொற்பமான தொகையாகும். இது மிகவும் போதாத தொகை. ஆகவே இந்தத் தொகை உயர்த்தி வழங்கப்பட வேண்டும்.

வக்ஃப் வாரியத்திற்கு மானியமாக கடந்த ஆண்டு அரசு 45 இலட்சம் ரூபாய் அனுமதித்திருந்தது. இந்த வருடம் அதைக் குறைத்திருக்கிறது. 30 இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்கியிருக்கிறது. வக்ஃப் நிறுவன நிலங்கள், அறநிலையத் துறை நிறுவன



நிலங்களெல்லாம் தனியாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு விற்க முடியாத நிலை இருக்கும்போது இதுபோன்ற துறைகளை நிர்வகிப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. ஆகவே அந்த நிதியை மீண்டும் அதிகப்படுத்தி வழங்க வேண்டும்.

அதுபோல சொத்துக்களை ஆக்கிரமித்திருப்பவர்களிடமிருந்து அதை மீட்பதற்காக குடியிருப்போர் சட்டம் அதிலே தலையிடாத அளவுக்குச் சட்டத் திருத்தங்கள் கொண்டு வந்து கோவில் சொத்துக்களையும்--பள்ளி வாசல் சொத்து--வக்ஃப் சொத்துக்களையும் மீட்பதற்குச் சட்டத்திலே வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹஜ் பயணம் செல்பவர்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வருடமும் ஒரு quota முறை நிர்ணயித்து இத்தனை பேர்தான் செல்ல வேண்டுமென்ற விதிமுறை இருந்து கொண்டிருக்கிறது. மக்கள் தொகைப் பெருக்கத்தின் அடிப்படையிலே இந்த வருடம் அந்தக் quotaவை உயர்த்தி வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விடுதி மாணவர்களுக்கு உணவுக்காக வழங்கப்படும் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும். 225 ரூபாய் என்பது மிகவும் குறைவான தொகை. ஆகவே குறைந்தது 400 அல்லது 500 ரூபாய் என்ற நிலையில் அதை உயர்த்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாகையிலே மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதி வேண்டும். மிகவும் பிற்படுத்தப்பட்ட கல்லூரி மாணவர்களுக்கு விடுதி வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் விடுதிக்கும், மாணவியர் விடுதிக்கும், வேளாங்கண்ணியில் உள்ள மாணவர் விடுதிக்கும் கட்டடங்கள் வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

முஸ்லிம் சிறுபான்மையினர் கேட்கின்ற இடஒதுக்கீட்டை இந்த அரசு கவனத்திற்கொண்டு அவசியம் வழங்கி அவர்களுடைய உரிமையை நிலைநாட்டி இந்த அரசுதான் செய்தது என்ற பெயரையும் பெற்றுச் செல்ல வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

[1999 ஏப்ரல் 13

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் துறையில் பேசுகின்ற வாய்ப்பு வழங்கிய தங்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழை மக்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் பட்டியலில் அதிகமாக அடங்கியுள்ளார்கள். வறுமைக்கோட்டிலிருந்து அவர்களை நீக்குகின்ற வகையில் இந்தத் துறையின்கீழ் நம்முடைய மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் பல்வேறு நலத் திட்டங்களையும், பல்வேறு வகையான வழிகளையும் வகுத்துத் தந்ததற்காக நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர், சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட இளைஞர்களுடைய-- படித்துவிட்டு இலட்சக்கணக்கான இளைஞர்கள் வேலையில்லாமல் வாடிக்கொண்டிருக்கின்றார்கள்--துயரைத் துடைக்கின்ற வகையில் கடன் வழங்குகின்ற விண்ணப்பத்தை அவர்கள் தந்தால் அது முழுவதும் நிராகரிக்கப்படாமல் அவர்களுக்குக் கடன் வழங்க வேண்டும். மேலும் வழங்குகின்ற கடன் தொகை இப்போது போதாத சூழ்நிலையில் இருக்கிறது. அந்தத் தொகையை குறைந்தது 5 இலட்சமாக உயர்த்தப்பட வேண்டுமென்று இந்தநேரத்தில் கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல கூட்டுறவுத் துறையிலும், தனியார் துறையிலும் வேலைவாய்ப்பு வழங்குகின்ற நேரத்திலே அவர்களுக்கு இட ஒதுக்கீடு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். இதனைக் கண்காணிப்பதற்கு ஒரு குழுவையும் அமைக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய இரு இனங்களிலிருந்தும் தலா ஒருவரை தமிழ்நாடு அரசின் தேர்வாணையத்தில் நியமிக்க வேண்டுமென்று இந்தநேரத்தில் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல தற்போது இத்துறையின்மூலம் சலவைத் தொழிலாளர்களுக்காக வழங்கப்படுகின்ற சலவைப் பெட்டி அந்தத் தொழிலாளர்கள் மத்தியில் மிகவும் வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. அந்தப் பெட்டிக்காக காத்திருப்போர் பட்டியல் அதிக அளவில் உள்ளது. காத்திருப்போர் எண்ணிக்கையைக் குறைக்கின்ற வகையில் விண்ணப்பம் செய்த அனைவருக்கும் அந்தப் பெட்டியை வழங்க வேண்டும்.



1999 ஏப்ரல் 13] [திரு. மு.பெ. சாமிநாதன்]

அதேபோல துறையின் மூலம் முடிதிருத்துவோருக்காக வழங்கப்படுகின்ற உபகரணங்கள் அவர்களுடைய மத்தியிலே மிகவும் வரவேற்பை ஏற்படுத்தியிருக்கிறது. விண்ணப்பம் தந்த அனைவருக்கும் அந்த உபகரணங்களை வழங்க துறை தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களில் 5,000 பேருக்கு, இலவசமாக கணினி பயிற்சி வழங்குகின்ற திட்டத்தை அரசு அறிவித்ததற்காக தலைவர் கலைஞர் அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

துறையின் மூலம் கனரக வாகன ஓட்டுநர் இலவசப் பயிற்சி அளிக்கப்பட நேர்காணல் நடைபெற்றது. ஆனால் இன்னமும் அந்தப் பட்டியலில் இடம் பெற்றவர்களுடைய பெயர்கள் அறிவிக்கப்படாமல் இருக்கிறது. அதையும் விரைந்து அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

அதேபோல் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுவதற்காக நிலங்களைக் கையகப்படுத்தும் போது ஏக்கர் ஒன்றுக்கு அரசு நிர்ணயித்துள்ள விலை அவர்களுக்குக் கட்டுப்படியாகாத காரணத்தால் நிலத்தினுடைய உரிமையாளர்கள் நிலங்களைத் தருவதற்கு மறுக்கிறார்கள். நிர்ணயித்துள்ள விலையையும் உயர்த்தித் தர வேண்டும் என்று இந்தநேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய வெள்ளக்கோவில் தொகுதியில் கடந்த மூன்றாண்டுகளாக இரண்டு இடங்களில், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டும், அதிலும் குறிப்பாக கடந்த வாரம் ஓர் இடத்தில்தான் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதுபோல் இல்லாமல் விரைந்து வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*1997-98* ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டத்திற்கு அரசு இலவச வீட்டுமனைப் பட்டாவிற்காக அளித்துள்ள நிதியினை அந்த மாவட்ட நிருவாகம் சரியாகப் பயன்படுத்தாமல் அரசுக்குத் திருப்பியனுப்பியுள்ளது கவலை தரக்கூடியதாக இருக்கிறது. ஆகவே இனிவரும் காலத்தில் அதுபோல் இல்லாமல் அரசு வழங்கும் நிதியை முழுமையாகச் செலவழிக்கிற வகையில் அரசு. ஈரோடு மாவட்ட நிருவாகத்தை வ்லியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல என்னுடைய வெள்ளக்கோவில் தொகுதி, காங்கேயம் வட்டம், உத்தமபாளையம் வருவாய் கிராமத்தில் க.ச. எண் *465/1, 465/2* ஆகிய நிலத்தை அந்த உரிமையாளர் வீட்டுமனைப் பட்டாவிற்காகத் தர முன்வந்துள்ளார். விரைந்து அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சின்னமுத்தூர் வருவாய் கிராமத்தில் க.ச. எண் *281* நிலத்தின் உரிமையாளரும் அந்நிலத்தைத் தருவதற்காக முன்வந்துள்ளார். அந்த நிலத்தையும் கையகப்படுத்தி அதன்மூலம் பட்டா வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பூமாண்டன்வலசு கிராமம் க.ச. எண் *304* என்ற நிலத்தையும் அரசு கையகப்படுத்தி அதன்மூலம் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல சேனாபதிபாளையம் வருவாய் கிராமத்தில் க.ச. எண் *1425/5*-ன்கீழ் உள்ள நிலத்தையும் கையகப்படுத்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சின்னமுத்தூர் வருவாய் கிராமத்தில் க.ச. எண் *368* என்ற எண்ணுள்ள அந்த நிலத்தையும் கையகப்படுத்தி, வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வெள்ளக்கோவில் கிராமம் கணபதிபாளையத்தில் *191/ஏ.2, 191/பி.2, 191/ஏ.3, 191/பி.3, 191/1-ஏ* என்ற நிலங்களையும் கையகப்படுத்திட--ஏறத்தாழ *300* பேர் பட்டா பெறுவதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதால் அதன்மீது--விரைந்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல கம்பளியாம்பட்டி வருவாய் கிராமத்தில் க.ச. எண் *848, 849* ஆகிய நிலங்களைக் கையகப்படுத்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாராபுரம் வட்டம், அரிக்காரன்வலசு கிராமம் க.ச. எண் *1303/1* என்ற நிலத்தையும் கையகப்படுத்தி அதன்மூலம் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்



கொள்கிறேன். அதைப்போல மாம்பாடி வட்டம் அக்கரப்பாளையத்திலும் நிலம் தருவதற்கு முன்வந்துள்ளார்கள். அதைக் கையகப்படுத்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூலனூர் கிராமம் க.ச. எண் *700* என்ற இடத்தையும் அதன் உரிமையாளர் தருவதற்கு முன்வந்துள்ளார். அந்த இடத்தையும் அரசு கையகப்படுத்தி விரைந்து பட்டா வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குகிற நடவடிக்கையை மேற்கொள்கிறபோது அதற்காக நாங்கள் அலுவலர்களிடத்திலே பரிந்துரை செய்து வேலையை முடிப்பதற்குள் விஷப்பரிட்சை செய்வதுபோல் இருக்கிறது. அதுபோல் இல்லாமல், பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட நல அமைச்சர் ஈரோடு வருகை தந்து விரைவில் இதுபோன்ற கோரிக்கைகளை நிறைவு செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு வாய்ப்பு அளித்த தங்களுக்கு தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைச் சொல்லி, பேரவையை நடத்திக்கொண்டிருக்கின்ற துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர், சிறுபான்மையினர் மானியக் கோரிக்கையில் பல்வேறு போராட்டத்திற்கு இடையில் என்னைப் பேச அனுமதித்த தங்களை உளமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு மாநிலங்களில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோருடைய நலத் திட்டங்களை முறையாகச் செயல்படுத்தவில்லை என்று சொன்னாலும்கூட தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் மிக அக்கறையாக இந்தத் துறையில் தனிக் கவனம் செலுத்தி, அதற்கான ஒதுக்கீட்டையும் வழங்கி இந்தத் துறையை மிகச் சிறப்பாக நடத்திக்கொண்டு இருந்தாலும் நீண்ட நெடிய காலமாக இந்த மக்களுக்குக் கிடைக்க வேண்டிய சமூக நீதி, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றில் இந்த மக்கள்

புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மையை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எடுத்துக்காட்டாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டு முதலமைச்சர் அவர்கள் மாநில பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவை மாண்புமிகு அமைச்சருடைய தலைமையில் அமைத்துள்ளார்கள். இப்போது அரசுப் பணிகளில் அரசு கொடுத்திருக்கிற ஒதுக்கீடுபடி முறையாக அந்த மக்களுக்கு கல்வி, வேலைவாய்ப்புகளில் பணி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை ஆய்வு செய்து பார்க்கிறபோது, அரசமைப்புச் சட்டம் இருந்தும்கூட அரசு நிதிகளையும் ஒதுக்கீடுகளையும் வழங்கி வந்தும்கூட துறைகளில் பணியாற்றுகிற செயலாளர்கள் அரசமைப்புச் சட்டத்தை மீறி ஒதுக்கீடுகளை முறையாக நிறைவேற்றாத பல்வேறு நிலைகளை எங்களால் காண முடிந்தது என்பதை இந்த மன்றத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இப்போது அதை ஆய்வு செய்கிறபோது, சீர் மரபினர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு முழுமையாக கல் உடைக்கிற துறையின் வேலையில் மட்டும்தான் பூர்த்தி செய்திருக்கிறார்களேயொழிய மற்ற துறைகளில் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் அழுத்தம்திருத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக இந்த மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்த அரசு நினைக்கிறபோது ஒதுக்கீடுகளை முறையாக நிறைவேற்றாத அதிகாரிகளை நான் சுட்டிக்காட்டுகிறபோது ஒதுக்கீடு முறையாக நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள இப்போது இருக்கக்கூடிய அரசு, வெள்ளை அறிக்கை ஒன்றை இந்த மன்றத்தில் வைக்க வேண்டும். அப்படி வெள்ளை அறிக்கை வைக்கப்படுகிற போதுதான் எந்தெந்தத் துறைகளில் அதிகாரிகள் ஒதுக்கீடுகளை முறையாக நிறைவேற்றவில்லை என்பது இந்த நாட்டு மக்களுக்கும் இந்த மன்றத்திற்கும் தெளிவாகத் தெரியும் என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன்.

இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில், மத்திய அரசு இப்போது எங்களைக் கேட்டுத்தான் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று சொல்கிறது; மத்திய அரசு அந்த அதிகாரத்தைக் கைவிட வேண்டும்., மாநில அரசுக்கு அந்த அதிகாரத்தை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு இன்னொன்றையும் சுட்டிக்காட்டவிரும்புகிறேன். 1989-ல் Mandal Commission அறிக்கை தந்ததற்குப் பிறகு, மிகவும்



பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 விழுக்காடு என்று அறிவித்து நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் இப்படியிருந்தும்கூட சட்டநாதன் குழு பரிந்துரைகள் இன்னும் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1996-ல் தமிழ்நாட்டில் 29 பிரிவுகளாக இருந்த முத்தரையர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து, அரசாணை எண் 15-ஐ அன்றைக்கிருந்த முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் தந்தார்கள். ஆனால் அந்த அரசாணை முழுமையாக இன்றையவரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக நிறைவேற்றப்படவில்லை. தமிழகத்தில் 29 பிரிவுகளாக இருக்கிற முத்தரையர் சமுதாயம் மட்டுமல்லாமல் புதுக்கோட்டையிலே இருக்கிற கந்தர்வக்கோட்டை கள்ளர், கூத்தப்ப கள்ளர், திண்டுக்கல், தேனி, மதுரை போன்ற பகுதிகளில் வாழும் பிரமலைக்கள்ளர், மக்களுக்குக்கூட--இந்த ஒதுக்கீடுபடி மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் உள்ள அவர்களுக்குக்கூட-- சரியான கல்வி, வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை; சாதி சான்று கிடைக்கவில்லை என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

5-4-1999 அன்று சென்னையில், தமிழ்நாடு முத்தரையர் சங்கத் தலைவர் திரு. இராஜமாணிக்கம் தலைமையில், நம்முடைய மரியாதைக்குரிய பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் இராமதாஸ் அவர்கள், ஓர் உண்ணாவிரதத்தைத் தொடங்கி வைத்தார்கள். 1996-ல் 29 பிரிவுகளாக இருந்த முத்தரையரை ஒரே பிரிவு முத்தரையர் என்று சொல்லி அரசாணை வழங்கியிருந்தும்கூட--இப்போது புதுக்கோட்டை, தஞ்சை மாவட்டங்களில் மட்டும் 4 பிரிவினர்கள் என்று சொல்கிற சேர்வைக்காரர், அம்பலக்காரர், வளையர், முத்தரையர் இவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து, கல்வி, வேலைவாய்ப்புகளில் இடம் அளிக்கக்கூடிய சாதிச் சான்றிதழ் இவர்களுக்கு மட்டும்தான் கிடைக்கிறதேயொழிய--மற்ற எந்த மாவட்டத்திலும் சான்றிதழ் கிடைக்கவில்லை என்பதை முன்வைத்துத்தான் அன்றைக்கு உண்ணாவிரதம் இருந்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். 1996-ல் அரசாணையை தந்திருந்தும்கூட அதை நடைமுறைப்படுத்தவில்லை. அந்த அரசாணையை ஆய்வு செய்து 29 பிரிவுகளாக இருக்கக்கூடிய தமிழ்நாடு முத்தரையர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு

கல்வி, வேலைவாய்ப்புகளில் சாதிச் சான்று வழங்குகின்ற நடவடிக்கைகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள் இந்தச் சமுதாயத்திலே இருக்கக்கூடிய மக்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இனிமேலும் ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தால்--ஒதுக்கீடு முறையாக நடைபெறவில்லை, இந்த மன்றத்தில் வெள்ளை அறிக்கை வைக்கப்பட்டால்தான் அந்த மக்களை நிச்சயமாகக் காப்பாற்ற முடியும், ஒதுக்கீடுபடி, கல்வி, வேலைவாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்க முடியும் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன்--இந்த மன்றத்தில் வெள்ளை அறிக்கையை நீங்கள் வைக்க வேண்டும், சமர்ப்பிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

வளர்ந்து வருகிற இந்தச் சமுதாய மக்கள் தொழிற் கல்வி பெற தென் மாவட்டங்களிலேயே மூன்று இடங்களில்தான் பிற்படுத்தப்பட்டவர்களுக்காக பயிற்சி மையங்களை வைத்திருக்கிறீர்கள். மற்ற மாவட்டங்களிலும் இந்தத் துறையின்மூலம் தொழில் கல்வியை நீங்கள் நிச்சயமாகத் தரவேண்டும். புதுக்கோட்டை மாவட்டம் மிகமிகப் பின்தங்கிய மாவட்டம். ஆகவே அங்கு அரசு I.T.I. இருந்தாலும், இந்தத் துறையின்மூலம் ஒரு I.T.I. வழங்குவது பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு நிச்சயமாக நன்மை பயக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

5,000 பேருக்கு தொழில்நுட்பப் பயிற்சி வழங்குவதாக இந்த அரசு அறிவித்திருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அதேநேரத்திலே மூன்றில் இரண்டு பங்கு பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற தமிழ்நாட்டில் நிச்சயமாக 5,000 பேருக்கு பயிற்சி அளிப்பது என்பது போதாது. 10,000 பேருக்காவது பயிற்சி வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குப்பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட



சமுதாயங்கள் முன்னேற தந்தை பெரியார் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். நம்முடைய கலைஞர் அவர்கள் அதை உறுதியாகப் பின்பற்றி அவருடைய ஆட்சிக்காலமெல்லாம் அதற்கு உறுதுணையாக இருந்தார்கள் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் யாருக்கும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

பெரியார் அவர்கள் 1950 ஆம் ஆண்டு வகுப்புவாரி உரிமை குறித்து ஒரு விளக்கம் அளித்துள்ளார்கள். ஒவ்வொரு சமுதாயத்திற்கும் அதன் மக்கள் தொகைக்கேற்ப கல்வியில், வேலைவாய்ப்பில் ஒதுக்கீடு கொடுக்கப்பட வேண்டும். இதில் ஏதாவது ஒரு சமுதாயம் தங்களுக்குச் சேர வேண்டிய இடத்திற்கு அதிகமாக ஓர் இடத்தைப் பெற்றால்கூட அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து அந்த இடத்தைப் பறிமுதல் செய்ய வேண்டுமென்று தந்தை பெரியார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலிருந்து ஒரு சில பிரிவினரைப் பிரித்து மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலை உருவாக்கினார்கள், 1989 ஆம் ஆண்டில். அதன்பிறகு அந்தப் பிரிவு ஒரு கடவுள் சாதி மாதிரி ஆகிவிட்டது. அந்தச் சாதியில் சேர்க்க வேண்டும், அந்தச் சாதியில் சேர்க்க வேண்டும் என்று எல்லா சாதிக்காரர்களும், அதற்காக இப்போது போராடிக் கொண்டிருக்கிறார்கள். நான்கூட மூன்று தினங்களுக்கு முன்னால் என்னுடைய தொகுதியில் ஒரு சாவுக்குச் சென்றிருந்தேன். அங்கேகூட சில படித்த மாணவர்கள் என்னை வளைத்துப் பிடித்து, நீங்கள் முதல்வர் அவர்களுக்கு முன்னால்தானே உட்கார்ந்திருக்கிறீர்கள், நீங்கள் ஏன் நம்ம சாதியை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக்கூடாது, சொன்னால் உடனே செய்துவிடுவார்களே என்று தொல்லை கொடுத்தார்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று. இந்த ஒரு சாதி மட்டுமல்ல. இப்போது மறவர்களை எல்லாம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள். அகமுடையர், கள்ளர், நாங்கள் எல்லாம் தேவர் இனம்தானே, எங்களை ஏன் சேர்க்கக்கூடாது என்று அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதுபோல கொங்கு வேளாளர். ஏதோ எனக்குத் தெரிந்த சாதியைச் சொல்கிறேன். இதுமாதிரி கிட்டத்தட்ட 50, 60 சாதியினர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று இப்போது போராடிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே கூட்டம் நடத்துகிறார்கள். இதற்கெல்லாம் நம்முடைய

முதல்வர் அவர்கள் ஏதாவது ஒரு வழி கண்டாக வேண்டும். இல்லையென்றால் இதுவே பெரிய பிரச்சினையாக ஆகி, தமிழ்நாடு முழுவதும் ஒரு புதிய சாதிப் போராட்டம் வந்துவிடுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. நேற்று 40 சாதியைச் சேர்ந்தவர்கள்....

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அறிந்த ஓர் உண்மையை இந்தநேரத்திலே தெரிவிக்கவிரும்புகிறேன். பிற்படுத்தப் பட்டவர்களைவிட, அதிகம் பாதிக்கப்பட்ட நிலையிலே உள்ளவர்கள் என்று கணக்கிட்டு, ஏற்கெனவே கிடைத்த புள்ளிவிவர அடிப்படையில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர் என்ற ஒரு வரன்முறை வைக்கப்பட்டு அவர்களுக்கு என்று இடம் ஒதுக்கப்பட்டது. இப்போது பிற்படுத்தப்பட்டவர்களாக ஒதுக்கப்பட்டவர், மிக மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் இடத்தில் தங்களுக்கு அதிக வாய்ப்பு கிடைக்கும் என்று ஒரு தவறான கண்ணோட்டத்தில், அந்தப் பட்டியலில் இடம் பெற வேண்டுமென்று விரும்புகிற நிலை பல்வேறு சமூகங்களின் பல்வேறு அமைப்புகளினால் அடிக்கடி குரல் எழுப்பப்படுகிறது. இன்றைக்கு வைத்துள்ள விகிதாச்சார அடிப்படையில் 20 விழுக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, 30 விழுக்காடு பிற்படுத்தப் பட்டவர்களுக்கு. பிற்படுத்தப்பட்ட சமூகத்தினுடைய எண்ணிக்கை சற்று அதிகம், அவ்வளவுதான்; மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் சற்றுக் குறைவு. சற்றுக் குறைவே தவிர, முழுவதும் குறைவு அல்ல, இந்த 20 விழுக்காட்டில் வருகிறவர்கள். எனவே இவர்கள் எந்தப் பகுதிக்குத் திரும்பி மாறிப் போனாலும் 30 விழுக்காடு உள்ள இடத்திலே கிடைக்கிற வாய்ப்பு 20 விழுக்காடு உள்ள இடத்தில் அவர்களுக்குக் கிடைக்காது. தாங்களாகவே அங்கேயும் இதே நெருக்கடியை அவர்கள் அனுபவிப்பார்கள். எனவே இந்தப் பிரிவு, இரண்டுவிதமான Gate வைக்கப்பட்டு, சற்று உயர்ந்தவர்களுக்கு ஒரு Gate, சற்றுத் தாழ்ந்தவர்களுக்கு ஒரு Gate என்று, வாசற்படிகள் வேறு வேறு வைக்கப்பட்டிருக்கின்றன தவிர, இடம்மாறிப் போகிறபோது, அந்த வாசற்படியிலே நுழைவதிலே இதைவிட அதிக நெருக்கடி ஏற்படும். ஆகவே இன்றைக்குள்ள விகிதாச்சார முறையினால் இயல்பாக அவரவர்களுக்குரிய சில வாய்ப்பு கிடைக்க நல்ல முறையாக இருக்கிறது என்பதை என்னுடைய பட்டறிவு காரணமாக நான் தெரிவிக்க விரும்புகின்றேன். இன்னும் சொல்லப் போனால், இந்த இரண்டு இடத்திலும் இல்லாத O.C.-யிலே இருக்கின்ற வகுப்பார்,



இதிலே எதிலாவது நுழையலாம் என்று நினைத்தால், அவர்களுக்கும் இதிலே ஒன்றும் புதிய சலுகை கிடைக்காது. O.C. என்பது Open Competition. அதிலே இருக்கின்றவர்கள்கூட, இதிலே வர நினைப்பார்களேயானால்-- அதாவது என்னுடைய உறவினர்கள் சில பேர் கேட்டபோது நான் சொன்ன பதில், இதிலேயே முறைப்படி பாடுபட்டு வருவதற்கு வாய்ப்பிருக்கிறது, மறந்து இன்னொரு இடத்திலே போய் இடம்பெற வேண்டுமென்று அலைவதிலே அர்த்தமில்லை என்று ஒரு கருத்தை நான் சொல்வது வழக்கம். அந்த முறையிலே இப்படி இடம் மாறுகிற காரணத்தால் Gate பெரிதாகாது. இருக்கின்ற Gate சின்னதாக இருப்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

*பிற்பகல் 12-45*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஏன் இந்தக் கருத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன் என்று சொன்னால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்களோ மாட்டார்களோ தெரியாது. 1977-78-ல் அன்றைய முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். ஆனால் அன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து மிகக் கடுமையாக அதை எதிர்த்தார்கள். இப்போது அந்த முறையைக் கொண்டுவர வேண்டுமென்று நம்முடைய சொக்கர் அவர்கள் மிக வலியுறுத்திச் சொன்னார்கள். (சிரிப்பு) காரணம் என்னவென்று சொன்னால், அவர் நாடார் சமுதாயத்தைச் சேர்ந்தவர், பெரிய முதலாளி, நன்கு படித்தவர். இந்தச் சமுதாயத்தில் ஏற்படுகின்ற பலன் அனைத்தையும் இவர் போன்ற ஒரு சிலர்தான் அனுபவிக்கிறார்கள். என்னுடைய ஊரில் இருக்கின்ற ஏழையெளிய பனையேறி நாடார் மக்கள் எல்லாம் அந்தப் பலனை அனுபவிக்க முடியாமல் போகிறது. காரணம் அவர்களுடைய குழந்தை அந்த அளவிற்குப் படிக்க முடியாது. ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் எப்படி யோசிக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. ஏனென்றால் இங்கேகூட 40 சாதியைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அந்த உண்ணாவிரதத்திலே சில அர்த்தமில்லாத சட்டவிரோதமான தீர்மானங்களைக்கூடப் போட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி நான்

பேசவில்லை. ஒரே ஒரு கோரிக்கை, அவர்கள் என்ன வைத்திருக்கிறார்கள் என்றால், சாதி அடிப்படையில் ஏன் இட ஒதுக்கீடு செய்யக்கூடாது என்பதுதான். அலெக்சாண்டர் அவர்கள் தமிழ்நாட்டின் ஆளுநராக இருந்தபோது, அந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்தார். அதைத் திரும்பக் கொண்டு வர வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். கேரளாவிலேகூட ஆய்வு செய்திருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சாதி அடிப்படையிலே இட ஒதுக்கீடு வேண்டுமென்று சொல்வது தனித் தனி சாதியா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தனித் தனி சாதி. ஒவ்வொரு சாதியையும் கணக்கெடுத்து அவர்களுடைய விகிதாச்சாரப்படி வேலைவாய்ப்புகளில், படிப்பில், உத்தியோகத்தில் இட ஒதுக்கீடு முறையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

பிறகு, M.B.B.S., B.E., போன்ற பட்டங்கள் எல்லாம் இன்று பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எங்கே கிடைக்கிறது என்று சொன்னால், நகரங்களிலே இந்த வாய்ப்பு அதிகமாகக் கிடைக்கிறது. ஆகவே இனிமேல் நடக்கின்ற M.B.B.S., B.E., போன்ற உயர் பட்டப் படிப்புகளுக்கு அதாவது தொழில் அடிப்படையில் உள்ள கல்விக்கான Interview-களை எல்லாம் மாவட்ட வாரியாக நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக இப்போது இராமநாதபுரம் போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் M.B.B.S., படிப்பு படித்தவர்கள் இல்லை. நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை நான் அடிக்கடி கேட்கிறேன். எங்கள் ஊரில் பெண் மருத்துவர்கள் வருவதில்லையே என்று கேட்டால், யாராவது இருந்தால் சொல்லுங்கள், உடனே போடச் சொல்கிறேன் என்கிறார். அங்கே படித்தவர்களே கிடையாது. சென்னையில், திருச்சியில், கோவையில், இப்படிப்பட்ட இடங்களிலே இருப்பவர்கள்தான் இந்தப் படிப்புகளையெல்லாம் படிக்கிறார்களே தவிர, பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் உள்ளவர்கள் முறையாகப் படிப்பதற்கு இடம் கிடைப்பதில்லை. ஆகவே மாவட்ட



வாரியாக இந்தத் தேர்வுக்கான Interview நடத்தி M.B.B.S., போன்ற உயர்ந்த பட்டப் படிப்புகளுக்குத் தேர்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில கோரிக்கைகள் எனக்கு வந்திருக்கின்றன. அதாவது குரும்ப கவுண்டர் என்ற ஒரு சாதி பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருப்பதாகவும், குரும்பா என்ற பெயர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருப்பதாகவும், அவர்கள் உண்மையிலேயே மலைச் சாதி குரும்பன் என்கின்ற மலைச் சாதியினர் என்றும் சொல்கிறார்கள். இதையெல்லாம் சீர்செய்து குரும்ப கவுண்டர், குரும்பா, குரும்பன்ஸ் என்று இருப்பதை பழங்குடியினர் வகுப்பில் சேர்க்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அதை நம்முடைய அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பிற்பகல் 12-50

நம்முடைய தமிழக அரசின் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டு நலக் கழகம் என்பது, சென்னை-2, அண்ணா சாலையில் இயங்குகிறது. கடந்த 3 ஆண்டுகளாக அலைந்து அலைந்து துயருற்றதைத் தவிர, எந்தவிதமான கடனும் அங்கு வாங்க முடியவில்லை என்று வருத்தத்தோடு நீண்ட கடிதத்தை தாய்க்குலத்தைச் சேர்ந்த மகளிர் ஒருவர் எழுதி இருக்கிறார். அதையும் நம்முடைய அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குலாளர் என்று சொல்லக்கூடிய மண்பாண்டத் தொழிலாளர்கள் தங்களுடைய குறைகளை எல்லாம் மிக விளக்கமாக எழுதி இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் பல என்றாலும்கூட, கதர் கிராமத் தொழில் வாரியத்தில் எங்களுடைய சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை உறுப்பினராக ஆக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய தொழில் இப்போது நசிந்துகொண்டு வருகின்ற காரணத்தால் எங்களுக்கு வேறு தொழில் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

தண்டராம்பட்டு தொகுதி, சாத்தனூரில், பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி வேண்டுமென்று நம்முடைய சட்டமன்ற

உறுப்பினர், திரு. மணிவர்மா கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அதோடு என்னுடைய முதுகுளத்தூர் தொகுதியில் தேரிருவேலி, அலங்கானூர், கீழத்தூவல் ஆகிய இந்த 3 கிராமங்களில் இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளுக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டாக்டர் பத்மா அவர்கள் ஒரு கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். S.C. Christians தற்போது பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள். அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

கடலாடி தொகுதியினுடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒரு கோரிக்கை வைத்து, அதற்காக தான் போராடப் போவதாகச் சொல்லி இருக்கிறார். அது நியாயமான கோரிக்கை. என்ன கோரிக்கை என்று சொன்னால், தமிழ்நாடு முதலமைச்சராக தலைவர் காமராஜர் அவர்கள் இருந்த 1954 ஆம் ஆண்டில் கடலாடி, ஆப்பனூர், சாயல்குடி, கோயிலாங்குளம் ஆகிய 4 ஊர்களிலும் ரேகைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன் கருதி, அரசினர் மறவர் தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடிப் பார்வையில் இயங்கி வந்தன. இப்பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு ஆண்டுதோறும் இலவசப் பாடப் புத்தகங்கள், நோட்டுகள் சிலேட்டுகள், உயர்தரமான மதிய உணவு, ஆண்டுக்கு ஒரு முறை புத்தாடைகள், அறிவியல் ஆராய்ச்சிக் கூடம், நூலக வசதிகள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டன. இந்தப் பள்ளிகள் அனைத்தையும் நம்முடைய முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 1993 ஆம் ஆண்டு இரத்து செய்து, ஊராட்சி ஒன்றியத்தோடு சேர்த்துவிட்டார்கள். அதன் காரணமாக, எங்களுடைய மாணவர்கள், குறிப்பாக, மறவர் மாணவர்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். எனவே மறுபடியும் அந்தப் பள்ளிகளை நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் Control-ல் வைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இது ஒரு நியாயமான கோரிக்கை. இதையும் அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய நண்பர் முத்துராமலிங்கம் பேசினார். அதாவது திண்டுக்கல் மாவட்ட கள்ளர் சீரமைப்புத் துறை



இன்னும்கூட மதுரையிலேதான் இருக்கிறது; அதை திண்டுக்கல்லுக்கு மாற்ற வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்தார். அந்தக் கோரிக்கையை ஏற்று அரசு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, மாணவர்களுக்கு சாப்பாட்டுக்குக் கொடுக்கிற பணம் மிகக் குறைவாக இருக்கிறது. உயர்நிலைப் பள்ளி விடுதிகளுக்கு 400 ரூபாயும், கல்லூரி விடுதிகளுக்கு 500 ரூபாயும் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்க விரும்புகிறேன்.

சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்தும் தொழிலாளர்கள் எல்லாம் இப்போது தமிழ்நாட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ந்து இருந்தாலும்கூட உண்மையிலேயே அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களாகத்தான் இன்று நடத்தப்படுகிறார்கள் என்பதில் யாருக்கும் சந்தேகம் கிடையாது. கிராமங்களில் பார்த்தீர்களானால், அவர்கள் மிகுந்த கொடுமைக்கு உள்ளாகிறார்கள். தங்களை S.C. வகுப்பில் சேர்த்து விடுங்கள் என்று பல முறை அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நம்முடைய அரசு மத்திய அரசுக்கு எழுதி, இந்த இரு சாராரையும் தாழ்த்தப்பட்ட வகுப்பில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள வேண்டும்.

பிற்பகல் 12-55

அதேபோன்ற கோரிக்கைகளை நிறைய அவர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய இன்னொரு கோரிக்கை சென்னை, சைதை சின்னமலையில், சென்னை மாவட்ட சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் இயங்குகிறது. இந்தக் கூட்டுறவுச் சங்கம் சலவைத் தொழிலை...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, முடி திருத்துவோர் போன்றவர்களை தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆதரித்து இங்கே பேசியிருக்கின்றார்கள். ஆனால் வேடிக்கை என்னவென்றால், ஆதிதிராவிட சமுதாயத்திலுள்ள தலைவர்கள் யாரும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. அக்காள் பொன்னம்மாள்கூட ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அவர்கள் படுகின்ற சிரமங்களையெல்லாம் நாம் நேரடியாகப் பார்க்கிறோம். அதனால் கொடுக்கலாம். அவர்களுக்குப் போட்டியாக இவர்கள் வந்துவிட மாட்டார்கள். அவர்கள் சிறுபான்மையின மக்கள். ஆகவே அவர்களை தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று 1960 ஆம் ஆண்டு எத்திராஜ் அவர்கள் M.L.C. ஆக இருந்த நேரத்தில், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் முயற்சியினால் ஏற்பட்டது. அது முழுவதும் சீரழிந்து, இயங்க முடியாத சூழ்நிலையில் இப்போது இருக்கிறது. 1970 ஆம் ஆண்டு வாங்கிய இயந்திரங்கள் வெள்ளத்தில் போய்விட்டன. உடனடியாக அந்தக் கூட்டுறவுச் சலவைத் தொழிற் சங்கத்தை சீரமைத்துத் தரவேண்டுமென்று தொழிலாளர்கள் கேட்டிருக்கிறார்கள். இந்தக் குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்து, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் துணை புரிய வேண்டும்.

அதோடு கடைசியாக இன்னொரு கோரிக்கை. என்னுடைய விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் யாதவர்கள் இருக்கிறார்கள். யாதவர்கள் என்ற பெயர் முன்னால் கிடையாது. இடையர்கள் என்றுதான் பெயர். பின்னால், வெள்ளைக்காரர்கள் காலத்தில் எங்களுக்கெல்லாம் யாதவர்கள் என்ற பெயர் வந்துவிட்டது. அதன் காரணமாக, எங்களை முன்னேறிய சமுதாயமாகக் கருதி, எல்லாச் சலுகைகளும் இப்போது போய்விட்டன. இவர்கள் முழுக்க முழுக்க ஆடு மேய்ப்பவர்கள். ஆடுகளையெல்லாம் மேய்க்கும்போது பல துன்பங்களை அடைகிறார்கள். கிராமங்களுக்குச் காரில் செல்கின்றபோது வேகமாக ஓடி வருவார்கள். ஏனென்று சொன்னால், ஆடு மேய்ப்பவர்கள் பாம்பு கடித்தோ அல்லது வேறு வழியிலோ செத்து காரில் தூக்கிக்கொண்டு வருவதைத்தான் நாங்கள் சந்தித்திருக்கிறோம் என்று சொல்வார்கள். அந்த மாதிரி என்ன நடந்ததோ என்று ஓடி வருகிற சமுதாயம். அவர்களுக்கென்று தனியாக ஒரு வாரியம் அமைத்தால் நல்லது. பனைத் தொழிலாளர்களுக்கென தனி வாரியம் அமைத்ததைப்போல, ஆடு மேய்க்கும் இடையர்களுக்கும் தனி வாரியம் அமைத்திட தனிக் கவனம் செலுத்தி, அவர்களுடைய குழந்தைகளுக்கு நல்ல படிப்புதவி செய்து, வேலைவாய்ப்பில் நல்ல நிலையை அவர்களுக்கு ஏற்படுத்தித் தருமாறு கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது நான் சொன்னதாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் சொன்ன கருத்துதான். அதைத் தெளிவுபடுத்தவில்லையென்றால் வீணான சந்தேகம் வந்துவிடும். அதற்காகச் சொல்கிறேன். அனைத்து சமுதாயங்களிலும் வசதி உள்ளவர்களும் இருக்கிறார்கள்; வசதி இல்லாதவர்களும் இருக்கிறார்கள். வசதி இல்லாதவர்கள் உயர வேண்டுமென்பதுதான் இட ஒதுக்கீடு முறையினுடைய அடிப்படை நோக்கம். பிறப்பால் நான் சார்ந்துள்ள நாடார் சமூகத்தில் நான் வசதியாக இருக்கிறேன். நாடார் சமூகத்தாருக்கு அளிக்கக்கூடிய சலுகைகள் எனக்கோ அல்லது என்னுடைய குடும்பத்தாருக்கோ தேவையில்லை. என்னுடைய பிள்ளைகளை கஷ்டப்பட்டோ, பொருள் கொடுத்தோ நல்ல கல்லூரிகளில் சேர்க்க முடியும்; வேலைவாய்பைத் தேடிக்கொள்ள முடியும். ஆனால் நான் சார்ந்துள்ள சமூகத்தில் எத்தனையோ ஏழையெளியவர்கள் இருக்கிறார்கள். ஆகவே வசதி உள்ளவர்களுக்கு அளிக்கக்கூடிய சலுகைகளை நிறுத்திவிட்டு, அதே சமூகத்தில் உள்ள வசதி இல்லாதவர்களுக்கு இந்தச் சலுகைகளைக் கொடுத்தால் சமுதாயம் வேகமாக வளரும் என்ற கருத்து கொண்டவன்தான் நான். ஆனால் முதலமைச்சர் இதற்கு எதிரான கருத்து கொண்டவர் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, "socially and educationally" என்ற அடிப்படையிலேதான் இந்த இட ஒதுக்கீடு இருக்க வேண்டுமென்று தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், ஏன் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்கூட அப்படித்தான் விரும்பினார்கள். அப்படித்தான் அன்றைக்கு திருத்தப்பட்டு இன்றைக்கு நடைமுறையில் இருந்து வருகின்றது. பொருளாதார ரீதியாக என்று எடுத்துக்கொண்டால் "socially and educationally" என்பது அடிபட்டுப் போய்விடும். "socially and educationally" பொருளாதார ரீதியாக அன்றைக்கு அருமை நண்பர் எனவேதான் பொருளாதார ரீதியாக அன்றைக்கு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவரப்பட்ட அந்த உச்சவரம்பை நாம் எதிர்த்தோம். திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம் ஆகிய இந்த திராவிடர் இயக்கங்கள் மாத்திரமல்ல, அன்றைக்கு காங்கிரஸிலே உள்ள பல தலைவர்களும் எங்களுடைய மேடைகளிலே வந்து பேசினார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்களும் எங்களுடைய மேடைகளிலே வந்து, நான், வீரமணி, பேராசிரியர், அதைப்போல நம்முடைய பாண்டியன், ரமணிபாய், திண்டிவனம் இராமமூர்த்தி, இவர்களெல்லாம் ஒரே மேடையிலே பேசி அதைக் கண்டித்திருக்கிறோம் அன்றைக்கே. ஆகவே பொருளாதார அடிப்படையிலே இது கூடாது என்பதுதான் நம்முடைய வாதம். 9 ஆயிரம் ரூபாய் என்று அப்பொழுது உச்சவரம்பு வைக்கப்பட்டது. அப்பொழுது ஒரே வீட்டில் ஒருவர் முன்னேறிய சமுதாயமாக ஆகிவிடுவார். இன்னொருவர் பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக ஆகிவிடுவார். 9 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கின்ற அண்ணன் முன்னேறிய சமுதாயம், ரூ. 8,999 சம்பாதிக்கின்ற தம்பி பிற்படுத்தப்பட்ட சமுதாயம் என்று ஆகிவிடும். இந்தக் கோளாறுகளையெல்லாம் அன்றைக்கு எடுத்து விளக்கித்தான் இந்த உச்சவரம்பு வேண்டாமென்று அன்றைக்கு எடுத்துக்கூறி, அதற்குப் பிறகு எம்.ஜி.ஆர். அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, அதைத் திருத்தினார்.

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவனாம், தந்தை பெரியார் பெயரில், "பெரியார் நினைவு சமத்துவபுரம்", பேரறிஞர் அண்ணா பெயரில், "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்", ஊர்தோறும் தூர்வாரி, உழைப்போர் துயர் துடைக்கவும், தமிழ் மக்கள் நலன் காக்கவும், உதித்திட்ட உதயசூரியனாக விளங்கும் நம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த என்னை இந்தத் துறையின் அமைச்சராக நியமனம் செய்து, இந்தச் சமுதாய மக்களுக்கு பல நன்மைகள் புரிகின்ற வாய்ப்பை நல்கிய எங்களுடைய குடும்பத் தலைவருக்கு மீண்டும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் பிறந்திட்ட மண் என்பதால் தமிழகத்திற்கு இந்தியத் திருநாட்டில் என்றுமே ஒரு முக்கியத்துவம் உண்டு. தமிழ்ச் சமுதாய மக்களின்



தேவைகளை உணர்ந்து, அவர்கள் எதிர்பார்க்கின்ற அளவுக்கு உதவிட வேண்டுமென்ற எண்ணத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்கென முதன் முதலில் ஒரு தனித் துறையை ஏற்படுத்தியது 1969 ஆம் ஆண்டு கழக அரசுதான். பெரும்பான்மை மக்களின் நலன் காத்திட 1971-72-ல் பிற்படுத்தப்பட்ட துறைக்கென தனியாக மானியக் கோரிக்கையைக் கொண்டுவந்ததும் கழக அரசுதான். 1989 ஆம் ஆண்டு மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு என தனியாக ஒரு இயக்குநரகத்தை ஏற்படுத்தியதும் கழக அரசுதான்; கலைஞர் அரசுதான். அதே ஆண்டில் தலைமைச் செயலகத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு என தனியாக ஒரு துறையை உருவாக்கியதும் கழக அரசுதான். மாண்புமிகு கலைஞர் அவர்கள் அதிக நிதியை ஒதுக்கீடு செய்து, இந்தத் துறையை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் ஒரு குறையைக் கூறினார்கள். இந்தத் துறைக்கு அதிக நிதி வேண்டுமென்று கூறினார்கள். இந்தத் துறை தொடங்கப்பட்டபொழுது--1969 ஆம் ஆண்டு வரை ஆதிதிராவிடர் நலத் துறையோடு இணைந்து இருந்தது--அப்பொழுது இந்தத் துறைக்கென்று சில இலட்சங்கள் மட்டுமே இருந்தன. ஆனால் 1969-70 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்திற்கென ஒரு துறை தனியாக உருவாக்கப்பட்டு, அதற்கென ஒரு கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டது. 1996-97 ஆம் ஆண்டு கழக அரசு பதவி ஏற்றபொழுது ரூ. 47.26 கோடியாக இருந்தது. கழக அரசு பதவி ஏற்ற பின்னால், 1996-97-ல் ரூ. 54.52 கோடியும், 1997-98-ல் ரூ. 64.32 கோடியும், 1998-99-ல் ரூ. 89.45 கோடியும், நடப்பு நிதி ஆண்டிற்கென ரூ. 106 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்தது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுவதும் செலவிடப்பட்டு, அந்தத் திட்டங்களின் பயன்கள் மக்களைச் சென்று அடைந்துள்ளன என்பதை மனமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-05*

அதேபோல மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சி. ஞானசேகரன் அவர்களும், ஜி.கே. மணி அவர்களும், வை. சிவபுண்ணியம் அவர்களும், ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களும் ஒரு குறையைச் சொன்னார்கள். உணவுக் கட்டணம்

குறைத்து வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அது உண்மை அல்ல என்பதை உதாரணத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 1996-ல் கழக அரசு பொறுப்பேற்றபோது ரூ. 135 உணவுக் கட்டணமாக இருந்தது. அதை மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ரூ. 180-ஆக 1-6-1998 முதல் உயர்த்தினார்கள். அதற்குப் பிறகு மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்று ரூ. 180-லிருந்து ரூ. 225 ஆக உயர்த்தி வழங்குவது கழக அரசுதான். அதேபோல கல்லூரி மாணவ மாணவியர் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு, கிராமப்புறங்களில் இருக்கின்ற கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கான உணவுக் கட்டணம் ரூபாய் 193-ஐயும், சென்னைக்கு ரூ. 198 என்பதை ரூ. 300 ஆகவும், 1-6-1998 முதல் ரூ. 300 என்பதை ரூ. 400 ஆகவும் உயர்த்தித் தந்துள்ளது கலைஞர் அரசுதான் என்பதை நான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல 39 அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளில் உணவுக் கட்டணம் 1-11-1997 முதற்கொண்டு ரூ. 85-லிருந்து ரூ. 120 ஆகவும், பின்னர் ரூ. 120 என்பதை ரூ. 150 ஆகவும் கழக ஆட்சிதான் உயர்த்தி வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல சமையலர்களுடைய ஊதியம். 1-7-1998 முதல் மாதம் ரூ. 500 தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றிய சமையலர்கள் ரூ. 2550-3200 என்ற முறையான ஊதியத்திலும், மாதம் ரூ. 100 தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றிய சமையலர்களின் உதவியாளர்களுக்கு ஊதியமாக ரூ. 500 ஆக கழக ஆட்சியிலேதான் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இன்றையதினம் சட்டமன்ற உறுப்பினர்கள் ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும் என்றும், உணவுக் கட்டணத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். அப்படிக் கூறுகின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். விடுதிகளில் சரியான கண்காணிப்பு இருக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். கண்காணிப்புக் குழுவிலே சட்டமன்ற உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்களுடைய தொகுதிக்கு உட்பட்டுள்ள விடுதிகளை நேரடியாகச்



சென்று கண்காணிக்கின்ற உரிமை அவர்களுக்கு இருக்கிறது. ஏனென்றால் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏழை, எளிய மாணவர்கள் நல்ல உணவைச் சாப்பிட வேண்டும், நன்றாகப் படிக்க வேண்டும் என்ற உணர்வின் அடிப்படையில்தான் இதை எல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவருக்கு உறுதுணையாக நீங்கள் எல்லோரும் இருக்க வேண்டுமென்று நான் இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே நீங்கள் ஒவ்வொரு விடுதிக்கும் கண்டிப்பாகச் சென்று முறையாகக் கண்காணிக்க வேண்டுமென்று எடுத்துகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சரியாக உணவு சமைக்காத சமையலர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதை கவனிக்காத காப்பாளர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்தச் சட்டமன்றத்தின் வாயிலாக ஓர் எச்சரிக்கையாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல சட்டமன்ற உறுப்பினர்கள் சி. ஞானசேகரன், ம. முத்துராமலிங்கம், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாரியாதைக்குரிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் ஆகியோர் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் சரியான முறையில் கடன் வழங்கப்படவில்லை என்று கூறினார்கள். அது தவறு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் கடந்த ஆட்சியில் பல முறைகேடுகள் நடைபெற்று, அதன்மூலமாக கொடுத்த கடன் சரியாக வசூலிக்கப்படவில்லை என்கின்ற நிலை இருந்தது. அதனால் வங்கிகள் எல்லாம் கடன் கொடுப்பதற்கு ஒத்துழைக்கவில்லை. கடந்த வாரம் மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், இரண்டு துறைகளையும் சேர்ந்த செயலாளர்கள் மற்றும் அலுவலர்களை வைத்து கலந்துரையாடிய ஒரு கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 150 வகையான திட்டங்களுக்கு நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு கைத்தறி மேம்பாட்டுக் கழகம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கடன் உதவிகள் வழங்க வேண்டுமென்று ஒரு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இனிமேல் உறுப்பினர்கள் குறை கூறாவண்ணம் அந்த வங்கிகள் கண்டிப்பாக கடன் வழங்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [1999 ஏப்ரல் 13

பிற்பகல் 1-10

அதைப்போல தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் கடன்களைப் பொறுத்தவரையில் 33,021 நபர்களுக்கு ரூ. 2,107.62 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையங்களின் மூலமாக 2,000 நபர்களுக்கு ரூ. 456 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரை கடன் கோரும் விண்ணப்பங்கள் ரூ. 20-க்கு விற்கப்பட்டு வந்தன. இனி விண்ணப்பக் கட்டணம் ஏதுமின்றி, விண்ணப்பங்களைப் பயனாளிகளே தயார் செய்து விண்ணப்பித்துக் கொள்ளலாம் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி மக்களிடம் தெரிவித்து, அவர்கள் கடனுதவி பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சமூக நீதி சம்பந்தமாக, இட ஒதுக்கீடு சம்பந்தமாக தங்களுடைய கோரிக்கைகளை எடுத்து வைத்தார்கள். என்ன நடவடிக்கையை இந்த அரசு எடுத்துள்ளது என்றும் கேள்வி கேட்டுள்ளார்கள். பல நூற்றாண்டுக் காலமாக சமுதாயத்தில் பெரும்பகுதியினர் அனுபவித்து வந்த நிலைமைகளை அகற்றி, அதை ஈடு செய்வதற்கென இட ஒதுக்கீட்டுக் கொள்கை வகுக்கப்பட்டது. சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவினரின் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு உண்மையான முயற்சிகளை மேற்கொள்வதன் மூலமாக மட்டுமே அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும். வேலைவாய்ப்பு மற்றும் கல்வி ஆகியவற்றில் இட ஒதுக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்பட்டு வருகிறது. அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்படுவதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. கடந்த காலங்களில் இட ஒதுக்கீட்டுக் கொள்கை, இந்தப் பிரிவினருக்கு சமூகக் கல்வி மற்றும் பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தி பயனளித்துள்ளது. இட ஒதுக்கீட்டின் அளவு பெரும்பான்மையான மக்களின் தேவைக்கேற்ப படிப்படியாகத் தொடர்ந்து வளர்ந்து, தற்போது 69 விழுக்காடு என்ற நிலையை அடைந்துள்ளது. தற்போது தமிழ்நாட்டில் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் 30 விழுக்காடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், 20 விழுக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கும் 18 விழுக்காடு



1999 ஏப்ரல் 13] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

ஆதிதிராவிட வகுப்பினருக்கும், 1 விழுக்காடு பழக்குடியினருக்கும் என 69 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. மண்டல் குழு பரிந்துரை குறித்த வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் காரணமாக, தமிழ்நாட்டில் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டைத் தொடர்ந்து செயல்படுத்துவதில், சில நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டன. இந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பாதுகாக்க 1993 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. அச்சட்டம் தமிழ்நாடு சட்டம் 45/1994 ஆகும். அந்தச் சட்டமானது, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு அரசமைப்புச் சட்டத்தின் மூலம் 9-வது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். மேற்சொன்ன சட்டத்தை எதிர்த்து, பல்வேறு நீதிப் பேராணை விண்ணப்பங்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட நீதிப் பேராணை மனுக்கள் விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டு உச்ச நீதிமன்றத்தின் அரசமைப்புச் சட்ட நீதியர் ஆயத்திற்கு 1-8-1994-ல் அனுப்பிவைக்கப்பட்டன. அரசமைப்புச் சட்ட நீதியர் ஆயத்திற்கு அனுப்பப்பட்ட இவ்வழக்குகளை விரைவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி, விரைவுபடுத்தும் மனு 6-9-1996 இல் இவ்வரசினால் தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்து வருகிறது. மாநிலத்தில் நடைமுறையில் உள்ள 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினைப் பாதுகாத்திட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள கழக அரசு உறுதியுடன் உள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வியின் மூலமே தமிழக மக்கள் வளர்ச்சியில் உயர்வடைய முடியும் என்பதை உணர்ந்த அரசு, கல்வி வளர்ச்சிக்கென இத்துறையின் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்து கல்வி உதவித் தொகை அளித்தல், இலவசக் கல்வி, இலவசப் பாடநூல்கள், இலவசமாக எழுதுபலகைகள், சிறப்பு வழிகாட்டி நூல்கள், இலவசச் சீருடைகள் 'போன்றவை வழங்குதல், மாணவ மாணவியருக்கு விடுதிகள், சீர்மரபினருக்குத் தனிப் பள்ளிகள் நடத்துதல் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்தி, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் நலனில் அக்கறை காட்டி வருகிறது.

அடுத்து கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள். இந்தச் சமுதாய மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற காரணத்தினால்,

அவர்களுக்கென தனிப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்றையதினம், 208 ஆரம்பப் பள்ளிகள், 19 நடுநிலைப் பள்ளிகள்; 23 உயர்நிலைப் பள்ளிகள், 15 மேல்நிலைப் பள்ளிகள் என 265 பள்ளிகள் மதுரை, திண்டுக்கல், தேனி ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. ஆண்டுதோறும் இப்பள்ளிகளில் 55,346 மாணவ மாணவியர்கள் பயின்று வருகின்றார்கள். இப்பள்ளிகளின் நிருவாகத்திற்கென 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 9.63 கோடியும், 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 11.95 கோடியும், 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 14.95 கோடியாக இருந்த இந்த நிதி ஒதுக்கீடு 1999-2000 ஆண்டிற்கு ரூ. 17.23 கோடி என நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

அதேபோல கல்வி நிலைமையை மேம்படுத்திட அதிக விடுதிகளை இந்தக் கழக அரசுதான் திறந்து வைத்தது. அதாவது, மாணவ மாணவியர்களுக்காக கழக ஆட்சியில் 1996-97-ல் 45 புதிய விடுதிகளும், 1997-98-ல் 62 புதிய விடுதிகளும், 1998-99-ல் 25 புதிய விடுதிகளும் ஆக இந்த 3 ஆண்டுகளில் 132 விடுதிகள் திறக்கப்பட்டு, தற்போது 967 மாணவ-மாணவியர்கள் விடுதிகள் இயங்கி வருகின்றன என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேற்சொன்ன விடுதிகளில் 54,640 மாணவ-மாணவியர்கள் தங்கிப் பயில வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அவர்களுடைய கோரிக்கையாக தங்களுடைய தொகுதியில் விடுதிகள் வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். இந்தத் துறையின் மூலமாக 967 மாணவ-மாணவியர் விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஆனால் சில இடங்களில் போதிய மாணவர்கள் தங்கிப் பயில வாய்ப்பு இல்லை. அதனால்தான், இந்த ஆண்டு முதல் புதிய விடுதிகள் தொடங்குவதற்கு அரசு அனுமதிக்கவில்லை. இருக்கின்ற விடுதிகளை முறையாக, சரியாகப் பராமரிக்க வேண்டும் என்று மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் குறைக்குக் காரணம் என்னவென்றால், அதிக மாணவ-மாணவியர்கள் தங்கிப் படிப்பதற்கு வாய்ப்பில்லை என்று நான் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால் இப்போது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் Plus 2 பயிலும் மாணவர்கள்வரை இலவசப் பேருந்து பயண திட்டத்தை



அறிவித்ததன் அடிப்படையில் கிராமப்புறங்களிலிருந்து வந்து தங்கிப் பயிலும் மாணவர்கள் எல்லாம் இப்போது இந்த இலவச பேருந்துப் பயண திட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு நகர்ப்புறங்களுக்கு அன்றாடம் இலவசமாகப் பேருந்துகளிலே சென்று வருகின்ற காரணத்தினால் போதிய மாணவர்கள் விடுதியில் தங்கிப் படிக்கக்கூடிய வாய்ப்புகள் இல்லை. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களுடைய காலத்திலே ஒரு விடுதி தொகுதியில் திறக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அந்த ஆசையை நிறைவேற்ற இந்தத் துறையின் மூலமாக அதிக நிதியை வீணாகச் செலவிடுவது ஊழலுக்கு வழிவகுத்துவிடும் என்கின்ற காரணத்தால், இருக்கின்ற விடுதிகளை முறையாக நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், இருக்கின்ற விடுதிகளில் பயிலும் மாணவர்களுக்குத் தரமான உணவு வழங்கிட வேண்டும் என்பதனால் தான், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு, அதன் அடிப்படையில் இந்தத் துறையின் மூலமாக அனைத்து அதிகாரிகளும், இயக்குநர் அவர்களும் அதைக் கண்காணிக்கிறார்கள். அமைச்சராக இருக்கும் நாங்களும் ஒவ்வொரு பகுதிக்கும் செல்கின்றபோது விடுதிகளைக் கண்காணித்து இந்தத் துறையின் மூலம் இயங்குகின்ற விடுதிகளை நல்ல முறையில் ஓரளவிற்குக் கொண்டு வந்துள்ளோம் என்பதை மனமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல இந்த விடுதிகளில் சேருவதற்கு பெற்றோர் ஆண்டு வருமானம் முன்பெல்லாம் 15,000 ரூபாய் என்றிருந்தது. கழக அரசு டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு அது ரூ. 15 ஆயிரத்திலிருந்து ரூ. 50 ஆயிரமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆண்டு வருமானத்தை ரூ. 50 ஆயிரமாக உயர்த்தியது கழக அரசுதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல 1996-க்குப் பின்னர் 37 விடுதிகளுக்குச் சொந்தமாகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் கட்டப்பட்ட விடுதிகளைக் காட்டிலும் கூடுதல் வசதியுடன் கட்டடங்கள் கட்டுவதற்கு கூடுதல் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இந்தக் கழக அரசில்தான். ஆண்கள் விடுதிக்கு ரூ. 27.50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. பெண்கள் விடுதிக்கு ரூ. 33 இலட்சமாக உயர்த்தி நல்ல காற்றோட்டமுள்ள அதிக இடவசதி கொண்ட வசதியுள்ள கட்டிடங்களாகக் கட்டுவதற்கு டாக்டர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [1999 ஏப்ரல் 13

அதுபோல சீருடைகள் இந்தத் துறையின் மூலமாக மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன: மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் இயங்கி வரும் சீர்மரபினர் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணவ-மாணவியர்களுக்கும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ-மாணவியர்களுக்கும் பொங்கல் திருநாளில் ஒரு தொகுதி சீருடையும், தீபாவளித் திருநாளில் ஒரு தொகுதி சீருடையும் வழங்கப்பட்டு வந்தன. 1998-99 ஆம் ஆண்டு முதல் சீருடைகள் யாவும் கல்வியாண்டின் தொடக்கத்திலேயே வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில் அனைத்து மாணவர்களுக்கும் கல்வியாண்டின் முதல் நாளே அதைக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு அதுவும் கடந்த ஆண்டு கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் பயனடைந்த பயனாளிகளின் விவரம். பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் தங்கிப் ப்யிலும் 18,500 மாணவ, மாணவியர்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் விடுதிகளில் பயிலும் 20,050 மாணவ-மாணவியர்களும், சீர்மரபினர் பள்ளிகளில் பயிலும் 44,950 மாணவ-மாணவியர்களும் பயன்பெறுகின்றனர். 1999-2000 ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு ரூ. 133.4 இலட்சம் ஆகும்.

பிற்பகல் 1-20

இலவசப் பாடப் புத்தகங்கள் : இதுவரை, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ-மாணவியர்களுக்கு, ஒன்பதாம் வகுப்பிற்கு சில குறிப்பிட்ட பாடப் புத்தகங்களும், பத்தாம் வகுப்பிற்கு அனைத்துப் பாடப் புத்தகங்களும் வழங்கப்பட்டு வந்தன. 1999-2000 ஆண்டு முதல் பத்தாம் வ்குப்பைப் போல, ஒன்பதாம் வகுப்பு மாணவ-மாணவியர்களுக்கும் அனைத்துப் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலவசக் கல்வி பத்தாம் வகுப்பு முதல் பட்டப் படிப்பு வரை பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ-மாணவியர்களுக்கு, பெற்றோரின் ஆண்டு வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல், இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. பட்டதாரி இல்லாத குடும்பம் என்ற நிபந்தனை இல்லை. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இலவசக் கல்வி என்ற சலுகை,



1999 ஏப்ரல் 13] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 25 ஆயிரத்திற்குள்ளாக இருக்க வேண்டும். குடும்பத்தில் பட்டதாரிகள் இருக்கக் கூடாது. மேற்சொன்ன நிபந்தனைகளுக்குட்பட்டு, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பினருக்கு, குடும்பத்தில் தொழில்கல்வி பயிலும் முதல் மாணவராக இருப்பின், பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம், சட்டம் போன்ற மேற்படிப்புகளுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. மேற்சொன்ன நிபந்தனைகளுக்கு உட்பட்டு, 1997-1998 ஆம் ஆண்டு முதல் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவியருக்கும் இலவசக் கல்விச் சலுகை நீட்டிக்கப்படுகிறது. இலவசக் கல்வித்திட்டம், அரசுக் கல்லூரிகளுக்கும், அரசு மானியம் பெறும் கல்லூரிகளுக்கும், சுயநிதிக் கல்லூரிகளில் அரசு இட ஒதுக்கீட்டின்கீழ் அனுமதிக்கப்படும் மாணவ மாணவியர்களுக்கும் பொருந்தும். 1999-2000 ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ. 986.80 இலட்சமாக இருக்கும்.

கல்விக்கென ஊக்கப் பரிசுகள்: பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், மாணவ, மாணவியரை ஊக்குவிக்கும் வகையில், மாநில அளவில் 12 ஆம் வகுப்பில் முதலில் வரும் ஒரு மாணவனுக்கும், ஒரு மாணவிக்கும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இருப்பின், ரூ. 3,000/-மும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இருப்பின், ரூ. 5,000/-மும் வழங்கப்படுகின்றன. மாநில அளவில் பத்தாம் வகுப்பில் முதலிடம் பெறும் ஒரு மாணவனுக்கும், ஒரு மாணவிக்கும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இருப்பின் ரூ. 1500/-மும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இருப்பின் ரூ. 3000/-மும் வழங்கப்படுகின்றன.

அதேபோல் மாவட்ட அளவில் முதலிடம் பெறும் மாணவ-மாணவியர்களுக்கும் பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன. 1999-2000 ஆண்டில் நிதி ஒதுக்கீடு ரூ. 1.78 இலட்சமாக இருக்கிறது.

பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு: மாவட்ட அளவில் பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் முதலிடமும், இரண்டாவது இடமும் பெறும்--தொழில் படிப்பில் பயில்கின்ற--மாணவர் இருவருக்கும், மாணவியர் இருவருக்கும் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3,000 வீதம் வழங்கப்படுகிறது.

தந்தை பெரியார் நினைவுப் பரிசு: மாவட்ட அளவில் பத்தாவது வகுப்பில் முதல் இரண்டு இடங்களைப் பெற்று, பல்தொழில் பயிற்சி

நிலையத்தில் சேர்ந்து பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மாணவர் இருவருக்கும் மாணவியர் இருவருக்கும், ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 3,000/- வழங்கப்படுகிறது. 1999-2000 ஆண்டிற்கு மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 20.22 இலட்சம் ஆகும்.

அதேபோல் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் பயிற்சித் திட்டங்கள். சட்டப் பட்டதாரிக்குச் சிறப்பு பயிற்சி. மூத்த வழக்கறிஞர்களின்கீழ்: பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சட்டம் பயின்ற 20 பட்டதாரிகளுக்கு 3 ஆண்டுகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம். சட்டப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ. 750/- பயிற்சி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. பயிற்சி அளிக்கும் மூத்த வழக்கறிஞர்களுக்கு ஆண்டிற்கு ரூபாய் 5,001/- மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. 1999-2000 ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு ரூ. 4.70 இலட்சமாக இருக்கிறது.

அனைத்திந்தியப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு I.A.S., I.P.S., போன்ற தேர்வு எழுதி வெற்றி பெறும் பொருட்டு, சென்னையில் 100 நபர்களுக்கும், மதுரையில் 75 நபர்களுக்கும் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை ஆகிய இரு துறைகளும் சேர்ந்து, இரு சமுதாயத்தினரும் ஒரே இடத்தில் சேர்ந்து பயிற்சி பெறும் வகையில், அப்பயிற்சி நிலையத்திற்குச் சொந்தமான கட்டடம் கட்டும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. இப்பயிற்சியில் சேர்வதற்கு எந்தவிதமான வருமான வரம்பும் இல்லை. ஆனால் ஆண்டு வருமானம் ரூ. 24 ஆயிரத்திற்குட்பட்டு, பயிற்சியாளருக்கு மாதம் ரூ. 500/- வீதம் உணவுக் கட்டணம் வழங்கப்படுகிறது. 1999-2000 ஆண்டு நிதி ஒதுக்கீடு ரூ. 63.32 இலட்சம் ஆகும்.

12ஆம் வகுப்பு முடித்து, பொறியியல், மருத்துவம் போன்ற தொழில்நுட்ப நுழைவுத் தேர்வு எழுதும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 15 நாட்களுக்கு 72 மையங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. நிதி ஒதுக்கீடு ரூ. 0.94 இலட்சம் ஆகும்.

கணினி பயிற்சி: 175 பட்டதாரிகளுக்கு மட்டும் அளிக்கப்பட்டு வந்த கணினி பயிற்சியானது, 1997-98 ஆம் ஆண்டிலிருந்து 1000



பட்டதாரிகளுக்கு அளிக்கப்படுகிறது. சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னை அண்ணா பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழகம், திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் வாயிலாக இந்தக் கணினி பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

பிற்பகல் 1-25

கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி: இதைப் பொறுத்தவரையில் 150 பிற்படுத்தப்பட்ட, 100 மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் எனப் பிரிக்கப்பட்டு மொத்தம் 250 நபர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, 1997-98ஆம் ஆண்டிலிருந்து, 1200 பிற்படுத்தப்பட்ட, 800 மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் என உயர்த்தப்பட்டு மொத்தம் 2000 நபர்களுக்கு சாலைப் போக்குவரத்து நிறுவனங்களால் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலம் 3 மாதங்கள் ஆகும். பயிற்சிக் கட்டணம் மற்றும் விண்ணப்பக் கட்டணங்களை அரசே ஏற்றுக்கொள்கிறது.

ஆடை அலங்காரச் சான்றிதழ் பயிற்சித் திட்டம்: பயிற்சியாளர்கள் எண்ணிக்கை 20 பெண்கள். பயிற்சிக் காலம் 8 மாதங்கள். பயிற்சிக் கட்டணம் ரூ. 30,000/- இவற்றில் 27,000/- ரூபாயை அரசே ஏற்றுக்கொள்கிறது. 3000/- ரூபாய் மட்டும் பயிற்சியாளர்களால் செலுத்தப்பட வேண்டும். இது மைய அரசின் National Institute of Fashion Technology என்ற நிறுவனத்தினால் அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய திட்டங்கள்: பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் கருதி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக 100 வணிக வளாகங்கள், சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் புதிதாக ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு வணிக வளாகத்திற்கு 10 கடைகள் என 1000 கடைகள், 1999-2000 ஆண்டில் திறக்கப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வணிக வளாகங்கள் நகரப் பஞ்சாயத்து மற்றும் நகராட்சிப் பகுதிகளில் ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கென ரூ. 5 கோடி செலவிடப்படும்.

செவிலியர் உதவியாளர் பயிற்சி (மகளிர் மட்டும்): பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த பெண்கள் பயனடையும் வகையில் 1998-99 ஆம் ஆண்டில் 10-வது வகுப்பு தேறிய மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இனத்தைச் சேர்ந்த 15 மகளிருக்கும், பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த 10 மகளிருக்கும், சென்னை அடையாறிலுள்ள தன்னார்வ மருத்துவ மையத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. செவிலியர் உதவியாளர் பயிற்சி பெற்றவர்களுக்கு தனியார் மருத்துவமனைகளிலும் மற்றும் அரசு மருத்துவமனைகளிலும் வேலைவாய்ப்புகள் அதிகம் உள்ளதால், சென்ற ஆண்டு 25 நபர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த, இந்தப் பயிற்சி நடப்பு நிதியாண்டில் 250 நபர்களுக்கு வழங்கப்படவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ. 28.44 இலட்சம் ஆகும்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவியர்களுக்கு சிறப்பு ஊக்குவிப்புத் தொகை வழங்கும் திட்டம்: மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சேர்ந்தவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக பள்ளி மாணவ-மாணவியர்களுக்கென பல்வேறு திட்டங்கள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, சமூக நலத் துறை மற்றும் கல்வித் துறை ஆகியவைகளின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. Plus-2 வகுப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்பட்டாலும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமூகத்தினரின் பெண் குழந்தைகள் பொருளாதாரச் சிக்கல்களினால் ஆரம்பக் கல்வி நிலையிலேயே பெரும் எண்ணிக்கையில் இடையிலே நின்றுவிடுகின்றனர். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த பெண் குழந்தைகளின் நலன் கருதி 1 முதல் 6 ஆம் வகுப்பு வரை அவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கும் ஒரு சிறப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ. 500 வீதம் 60,000 மாணவியர்களுக்கும், 6 ஆம் வகுப்பில் பயிலும் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 100 வீதம் 10 மாதங்களுக்கு 30,000 மாணவியர்களுக்கும் ஊக்குவிப்பு தொகை வழங்கப்படுகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த ஊக்குவிப்புத் தொகை மாணவியர்கள் தங்கள் தேவைக்கான அடிப்படைப் பொருட்களை,



துணிமணிகளை வாங்குவதற்கு உதவியாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** இந்தத் திட்டத்தின் மூலமாக 90 ஆயிரம் மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர் மரபினர் மாணவியர்கள் பயன்பெறுவார்கள். இதற்கு ஆகும் செலவினம் ரூ. 6 கோடி ஆகும்.

இலவச தொழிற் கருவிகள் வழங்குதல்: சமுதாயத்தில் மிகவும் வறிய நிலையிலுள்ள பிரிவினரான சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர், போயர்கள் ஆகியவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த கடந்த ஆண்டுகளில் வழங்கியது போன்றே இந்த ஆண்டும் 4,000 என்பதை 6,000 சலவைப் பெட்டிகளாகவும், 500 என்பதை 2,000 முடிதிருத்தும் கருவிகளாகவும், 500 என்பதை 2,000 கல்லுடைக்கும் கருவிகளாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இதற்கான கூடுதல் செலவினம் ரூ. 36.42 இலட்சம் ஆகும்.

5,000 நபர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம்: வளர்ந்து வரும் அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கேற்ப, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர் மரபினர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கும்பொருட்டு தகவல், தொழில் நுட்பம் போன்ற பயிற்சிகள் வரும் ஆண்டுகளிலே பெருமளவு வேலைவாய்ப்பு அளிக்கும் என்பதாலும், 5,000 நபர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளிப் படிப்புத் திட்டத்தின்கீழ் 9 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவ-மாணவியர்களுக்கு இதுவரையில் வழங்கப்படாமல் இருந்த புத்தகங்கள் அனைத்தும் ரூ. 64.48 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் மாணவ-மாணவியர்களுக்கு புதியதாக 5 கல்லூரி விடுதிகள் ரூ. 22.16 இலட்சம் செலவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்

கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 15 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் விடுதிகளுக்கு ரூ. 9.00 இலட்சம் செலவில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இன்னும் நிறைய உள்ளன. சீக்கிரம் உரையை முடித்துக் கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டம், பெரியார் குடில் எனும் தனியார் உணவு இல்லத்தில் கூடுதலாக 50 மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர் மரபினர் மாணவர்களுக்கு இடம் அளிக்கும் வகையில் கூடுதலாக உணவு மானியங்கள் ரூ. 0.75 இலட்சம் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 10 கள்ளர் தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக ரூ. 56.50 இலட்சம் செலவில் நிலை உயர்த்தப்படும். 15 கள்ளர் பள்ளிகளுக்கு ரூ. 9 இலட்சம் செலவில் குடிநீர் வசதிகள் செய்து தரப்படும். 20 கள்ளர் பள்ளிகளுக்கு ரூ. 5 இலட்சம் செலவில் மின் இணைப்புகள் மற்றும் வசதிகள் செய்து தரப்படும். 20 கள்ளர் பள்ளிகளில் பெண்களுக்கு ரூ. 10.65 இலட்சம் செலவில் கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். சென்னை சிறப்புப் பயிற்சி நிலையத்திற்கு ரூ. 21.17 இலட்சம் செலவில் வசதிகள் மேம்படுத்தித் தரப்படும்.

சென்னை தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்ப மையத்தின் மூலம் 90 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் பெண்களுக்கு தையல் இயந்திரம் இயக்க பயிற்சி, ரூ. 6 இலட்சம் செலவில் அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் இனத்தவர்களுக்கு ரூ. 59.50 இலட்சம் செலவில் சிறப்பு கணினி வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

200 பிற்படுத்தப்பட்ட மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கு ரூ. 14.60 இலட்சம் செலவில் அலுவலக செயலர் பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தவர்களுக்கு ரூ. 18.32 இலட்சம் செலவில் தோல் பொருட்கள் தயாரிப்பில் பணிசார்ந்த பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தில் பங்கு மூலதனம் செலுத்த ரூ. 100 இலட்சம் தமிழ்நாடு



பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் திட்டங்களுக்கென ரூ. 20 கோடி மொத்த நிதி ஒதுக்கமாக கோரிக்கை எண் 60-ன் கீழ் ஒதுக்கப்படும் என்பதை மனமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-35

அதேபோல இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுவதற்கு ரூ. 18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

"பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் மக்களின் முன்னேற்றமே தமிழகத்தின் முன்னேற்றமாக இருக்க முடியும்" என்ற வகையில் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என் நெஞ்சுநிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் அவையின் நடவடிக்கைக் குறிப்புகளிலே நிறைவாக இடம் பெற்றவையாக இருக்கும். சம்பந்தப்பட்ட துறைகள் அவற்றின்மீது கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு ஏற்புடைய வகையில் என்னுடைய விளக்கங்களை அளித்துள்ளேன் எனவும் கருதுகின்றேன். வெட்டுத் தீர்மானங்களின் மூலம் சுட்டிக்காட்டியவைகளை நன்கு பரிசீலித்து உரிய வகையில் விடை அளித்துள்ளேன் எனவும் கருதுகின்றேன். "விதைக்கின்ற விதையும், பாய்கின்ற நீரும் பயன் அளிப்பதுபோல" இம்மானியக் கோரிக்கையின் வாயிலாகக் கொண்டு வரப்பட்டுள்ள திட்டங்கள் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர் மரபினர் மக்கள் வாழ்வில் ஏற்றம் தரும் என்பதில் ஐயம் இல்லை. வெட்டுத் தீர்மானங்களை அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவைகளைத் திரும்பப் பெறுவதுடன் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கையை ஏற்று, முழுமையாக நிறைவேற்றித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். "உழைப்பது நாமாக இருப்பினும் உயர்வது தமிழ் மக்களாக இருக்கட்டும்" என்று சொல்லி, என்னுடைய உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கம் சொல்ல வேண்டிய ஒரு கடமை எனக்கு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் பன்னீர்செல்வம் அவர்கள் பட்டதாரிகள் இல்லாத குடும்பத்து குழந்தைகளுக்கு இன்னின்ன விதமான சலுகைகள் வழங்குவதுபற்றி 10 பேருக்கு மாவட்டந்தோறும் சிறப்புக் கல்வி பெறுவதற்கு உதவுவது என்ற திட்டத்தை எடுத்துச் சொன்னார்கள். அது பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்கு மட்டும் அல்ல. அது பொதுவாக பட்டதாரி இல்லாத குடும்பத்துப் பிள்ளைகள் என்ற முறையிலே அமைந்தது ஆகும்.

இன்னும் ஒன்று. பிற்படுத்தப்பட்டவர், மிகமிகப் பிற்படுத்தப்பட்டவர் என்ற தலைப்பில் ரூ. 106,76,96,000/-க்கு மேற்படாத தொகை என்று கேட்கிறபோது பல பேருடைய மனதிலே படுகிற கருத்து, மிகமிகப் பிற்படுத்தப்பட்டவர், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இந்த ரூ. 106 கோடிதான் என்ற ஓர் எண்ணம் ஏற்படுகிறது. அதேபோல தாழ்த்தப்பட்டவர்களுக்கு--ஓர் உதாரணத்தைச் சொல்வேன்-- ரூ. 150 கோடி என்று ஒதுக்கப்பட்டால், ரூ. 150 கோடிதான் என்ற தவறான கருத்து இருக்கிறது. கல்வித் துறையைப் பொறுத்தவரையில், நான்காயிரத்து சொச்சம் கோடி மொத்தமாக ஒதுக்கப்பட்டு, அதிலே தொடக்கப் பள்ளியிலேயிருந்து, மேல்நிலைப்பள்ளி வரையிலே, அந்தக் கல்விக்கு ரூ. 3,000 கோடிக்கு மேல் செலவாகிறது. உயர் கல்விக்குக் குறைவு. இந்த ரூ. 3,000 கோடியில் பிற்படுத்தப்பட்டவர், மிக மிகப் பிற்படுத்தப் பட்டவர்களுக்குக் கிடைக்கிற பங்கு என்ன என்ற ஒரு கணக்கிட்டுப் பார்த்தால், ஏறத்தாழ தாழ்த்தப்பட்டவர்கள் உட்பட, ரூ. 2500 கோடி இந்த பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகங்களுக்குத்தான் பயன்படுகிறது. இயல்பாக கிராமத்துப் பள்ளிகள், சிற்றூர் பள்ளிகள், பேரூர் பள்ளிகள் என்ற முறையில் பெரும் பகுதி அவர்களுக்குத்தான் அந்த நிதி செலவாகிறது. பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, சட்டக் கல்லூரி, அதேபோல் வேறு சிறப்பு வேளாண்மைக் கல்லூரி, பல்கலைக் கழகம், இவை மூலமாக ஆகிற செலவையும், இந்த இட ஒதுக்கீடு விகிதாச்சார முறையிலேதான் மாணவர்கள் பெரும்பகுதி இடம் பெறுகிற காரணத்தால், அதற்காக ரூ. 600 கோடி, ரூ. 700 கோடி



செலவு. என்னுடைய துறையிலே மட்டுமல்ல, மருத்துவத் துறையில், சட்டத் துறையில், வேளாண்மைத் துறையில் செலவாகிற நிதியிலேயும் பெரும்பகுதி நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற சமூக நீதிக் கொள்கையின் அடிப்படையில் அது நடைமுறைப்படுத்தப்படுவதன் காரணமாக இந்தப் பெரு நிதியில் அந்த ரூ. 700 கோடியிலும் பெரும்பங்கு அங்கேயும் அந்தச் சமூகங்களுக்குத்தான் கிடைக்கிறது.

அதேபோல சிறு தொழில் வளர்ச்சி, கிராம வளர்ச்சிக்கு என்று ஒதுக்கப்படுகிற பெரு நிதி ஊராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படுகின்ற நிதியிலே எல்லாம் பெரும்பகுதி பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகத்திற்குத்தான் பயன்படுகிறது. இவ்வளவும் கிடைத்தும்கூட காணவில்லை என்பது வேறு. இன்னும் அதிக தேவை இருக்கிறது, வேண்டுகோள் இருக்கிறது என்பது வேறு. ஆனால் பெருமளவுக்கு, இலவசப் புத்தகம், சீருடை, சத்துணவு இவையும், வெவ்வேறு துறைகளின் மூலமாக இவற்றினுடைய செலவு மானியமாகக் குறிப்பிடப்பட்டாலும்கூட, நம்முடைய நாட்டில் இயல்பாக நூற்றுக்கு 80 பேர் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மிகவும் பின்தங்கிய மக்கள் இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு, மகளிர் என்ற முறையிலே அப்படிப்பட்டவர்களுக்குக் கிடைப்பது உள்பட, சேர்த்துப் பார்த்தால் நம்முடைய கலைஞர் அவர்களுடைய வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் 50 விழுக்காட்டுக்கு மேல் அவர்களுக்கான ஒதுக்கீடுதான் எனலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Clarification எல்லாம் ஆகிவிட்டது. Clarification-ஐத் தனியாகக் கேளுங்கள். பதில் சொல்வார்கள். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 31-பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன்.

வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.



**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 106,76,96,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. நாளை தமிழ்ப் புத்தாண்டு. அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரவை மீண்டும் வியாழக்கிழமை (15-4-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-42 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

135. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்-5) முதல் ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

136. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

93. மானியக் கோரிக்கை எண். 31-பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்).

94. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம். (தமிழ்).

95. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்).



## இணைப்பு

(60 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### மானியக் கோரிக்கை எண் 31--பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000

**அ. முகவுரை**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோரது மேம்பாட்டிற்குரிய நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு தனித்து விளங்குகிறது. பல நூற்றாண்டுகளாக மாறுதலின்றி சாதிப் பிரிவுகள் இருந்து வருவது இந்திய சமுதாய அமைப்பின் தனித் தன்மையாகும். இதற்கு தமிழ்நாடு விதிவிலக்கு அல்ல. தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மிகையானவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. சுமுகமான பொருளாதார வளர்ச்சிக்கு சமுதாய சமத்துவம் இன்றியமையாததாகும். சமூக வாழ்க்கை, தொழில், கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் இவர்களின் நிலை உயர்வதற்கான நேரடி வாய்ப்புகள் நீண்டகாலமாக மறுக்கப்பட்டு வந்தன. இத்தகைய இடர்பாடுகளை கருத்திற்கொண்டு இப்பிரிவினரின் கல்வி, பொருளாதார மற்றும் சமூக நிலைகளை முன்னேற்றி, பின்தள்ளப்பட்ட இப்பிரிவினரை, சமுதாயத்தின் முக்கிய அங்கமாக பங்கேற்கச் செய்வதற்கான நலத் திட்டங்களை உருவாக்கி, செயலாக்கிட இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

**ஆ. கொள்கை**

**(அ) இட ஒதுக்கீடு**

2. சமத்துவ கோட்பாட்டினை முழுமையாக பிரதிபலிப்பதாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் உள்ளது. பல நூற்றாண்டுகளாக சமுதாயத்தின் பெரும் பகுதியினர் அனுபவித்து வந்த குறைபாடுகளை அகற்றி ஈடு செய்வதற்கென இட ஒதுக்கீடு கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் பின்தங்கிய இப்பிரிவினரின்

[1999 ஏப்ரல் 13

பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றத்திற்கு உண்மையான முயற்சிகள் மேற்கொள்வதன் மூலம் மட்டுமே இவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும். வேலை வாய்ப்பு மற்றும் கல்வி ஆகிய இரு வரம்புகளில் இட ஒதுக்கீடு கொள்கை பின்பற்றப்படுகிறது. அரசுப் பணிகளிலும் கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீட்டு கொள்கையைப் பின்பற்றுவதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. கடந்த காலங்களில், இந்த இட ஒதுக்கீட்டு கொள்கை, இந்தப் பிரிவினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் நல்ல முன்னேற்றத்தினை ஏற்படுத்தி பயன் அளித்துள்ளது. இட ஒதுக்கீடு அளவு, பெரும்பான்மை மக்களின் தேவைக்கு ஏற்ப, படிப்படியாகத் தொடர்ந்து வளர்ந்து தற்போது 69 விழுக்காடு என்ற நிலையை அடைந்துள்ளது. அரசு கொள்கையின்படி, ஆதிதிராவிடர்களுக்கு 18 விழுக்காடும், பழங்குடியினருக்கு 1 விழுக்காடும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு 30 விழுக்காடும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கு 20 விழுக்காடுமாக இட ஒதுக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் வேலைவாய்ப்பிலும், கல்வி நிறுவனங்களிலும் தொடர்ந்து 69 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்ய அரசு, தமிழ்நாடு 1994-ஆம் ஆண்டு 45-ஆம் சட்டத்தை இயற்றியுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 9-ஆம் விவர அட்டவணையிலும் இது சேர்க்கப்பட்டது. தமிழ்நாடு 1994-ஆம் ஆண்டு 45-ஆம் சட்டத்தின் செல்திறனை எதிர்த்து இந்திய தலைமை நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் செல்திறனைப் பாதுகாக்கவும், அதன்மூலம் இம்மாநிலத்தில் தற்போதுள்ள 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டைப் பாதுகாக்கவும் வேண்டி பயனுள்ள அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இவ்வரசு தீர்மானித்துள்ளது.

**(ஆ) கல்வி**

3. பொருளாதார முன்னேற்றத்திற்கும், சமுதாய மாற்றத்திற்கும் கல்வி மிக இன்றியமையாததாகும். சாதிப் பிரிவுகள் நிறைந்த சமுதாயத்தில் இழைக்கப்படும் இன்னல்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் முக்கிய கேடயம் கல்வி என்பதை உணர்ந்து, 1999-2000 ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக வரவு-செலவுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டில் 73 விழுக்காட்டினை இப்பிரிவு மக்களின் கல்வி மேம்பாட்டிற்கென



1999 ஏப்ரல் 13]

அரசு ஒதுக்கியுள்ளது. இவ்வகுப்பினரிடையே குறிப்பாக ஊரகப் பகுதிகளில் வசிப்பவர்களில், எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் மிகக் குறைவு என்பதையும், இடையில் படிப்பை நிறுத்திவிடுபவர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதையும் கருத்திற்கொண்டு, மாணவரில்ல வசதிகள், படிப்புதவித் தொகைகள், இலவசக் கல்வி, இலவசமாகப் பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகள், சிறந்த மாணவர்களுக்கு பரிசுகள் ஆகியவற்றை வழங்குவதற்கு அரசு தனி முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மேலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களிடையே கல்வி நிலைமை மிகவும் மோசமாக உள்ள சீர்மரபைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தனிப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டதுடன், இவ்வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் அனைத்திந்திய அரசுப் பணிகள் தேர்வை எழுதுவதற்குச் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

**(இ) பொருளாதார நிலை உயர்த்துதலும், வேலை வாய்ப்பும்**

4. சமுதாய வளர்ச்சியும் பொருளாதார மேம்பாடும் ஒன்றோடொன்று பிணைந்தவையாகும். இப்பிரிவினர் சமூக மற்றும் கல்வித் தரத்தில் பின்தங்கிவிட்டமைக்கு வறுமைதான் வருந்தத்தக்க அடிப்படை காரணமாகும். இவ்வகுப்பைச் சேர்ந்தவர்களில் குறிப்பாக ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் எதிர்நோக்கும் பெரும் சிக்கலான பொருளாதாரப் பிரச்சினை வறுமையாகும். வறுமையும், வேலை வாய்ப்பின்மையும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவையாதலால், முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர்கள், போயர்கள் ஆகியோர்களுக்கு இலவசமாக கருவிகள் வழங்கியும், முடிதிருத்தகம், சலவையகம், நடமாடும் சலவையகம் ஆகியவற்றை அமைப்பதற்காக உதவித்தொகை மற்றும் நிதி உதவி அளித்தும், அவர்களுக்கு சுயவேலை வாய்ப்பை ஊக்குவிப்பதன் மூலம் அவர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்துவதற்குரிய திட்டங்களை வகுப்பதில் அரசு மிகவும் கவனம் எடுத்துக் கொண்டுள்ளதுடன், அவ்வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கான தனி தொழிற்பயிற்சி நிறுவனம் நடத்தி, வேலை வாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பயிற்சியையும் அளிக்கிறது. தகவல் தொழில்நுட்பத்திற்கு இவ்வரசு அதிக முக்கியத்துவம் அளிக்க தீர்மானித்துள்ளதால், எதிர்வரும் ஆண்டுகளில் பெருகும் வேலைவாய்ப்பினையும், கணினி உலகில் தினசரி ஏற்படும் முன்னேற்றத்தினையும் கருத்திற்கொண்டு தொலை நோக்குப்

பார்வையுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1999-2000 ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்ட உரையில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 5000 மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும் என அறிவித்துள்ளார்கள். இந்த நடவடிக்கைகள் இப்பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் வேலை வாய்ப்பு சந்தையில் போட்டியிட்டு வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு உதவியாக இவர்களின் திறமையைப் பெரிதும் உயர்த்தும்.

**(ஈ) வீட்டுவசதி**

5. இலவச வீட்டுமனைகளை ஒதுக்கீடு செய்வதன் மூலம் இந்த வகுப்புகளைச் சேர்ந்த குடும்பங்கள் தங்களுக்குத் தாங்களே உறைவிடத்தை அமைத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு உதவ வேண்டியது அவசியமாகும். மிகவும் பிற்படுத்தப்பட்டோரில் குறிப்பாக (1) முடிதிருத்துவோர் (2) சலவைத் தொழிலாளர் (3) போயர் (4) நரிக்குறவர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த நிலமற்ற குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தை அரசு 1981-82-ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த அனைத்து மக்களுக்கும் இத்திட்டம், 1990-91ஆம் ஆண்டில் அரசால் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1997-98ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்ட உரையில் தெரிவித்ததற்கிணங்க, ஊரகப் பகுதிகளில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் முற்பட்ட வகுப்பினர் அனைவருக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு செயலாக்கப்பட்டு வருகிறது.

**(உ) சிறுபான்மையினர் நலம்**

6. சிறுபான்மையினர், மாநிலம் மற்றும் சமுதாயத்தின் பண்பாடு மற்றும் நெறிமுறை ஆகியவற்றில் தாங்களும் ஒருங்கிணைந்த அங்கம் என்று உணரச் செய்யும் வகையில் சிறுபான்மையினர் நலனுக்குரிய நலத்திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துவதில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. சிறுபான்மையினரின் கல்வி மற்றும் வேலை வாய்ப்பிற்குச் சிறப்புக் கவனம் செலுத்துவதுடன், அவர்களது சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். தமிழ்நாட்டில் இஸ்லாமியர், கிருத்துவர், சீக்கியர், புத்த மதத்தவர்,





பார்ஸிகள் ஆகியோர் சிறுபான்மையினராகக் கருதப்படுகிறார்கள். சமய, மொழி வகையில் சிறுபான்மையினரின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு சிறுபான்மையினர் நல ஆணையம் ஒன்றை அரசு உருவாக்கியுள்ளது.

**இ. திட்டங்கள்**

**1. கல்வி**

**பள்ளிகள்**

7. சீர்மரபினர், அதிலும் குறிப்பாக பிரமலைக்கள்ளர் சமுதாயத்தினரின் கல்வித்தரம், ஏனைய சமுதாயத்தினரின் கல்வித் தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. பிரமலைக்கள்ளர் வகுப்பினரின் நலனில் சிறப்புக் கவனம் செலுத்துவதுடன் அவர்களது கல்வித்தரத்தைத் திறம்பட மேம்படுத்தும் பொருட்டு, பிரமலைக்கள்ளர் அதிகமாக வாழும் இடங்களான மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில், இத்துறையின் மூலம் 265 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 1998-99 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் மொத்த எண்ணிக்கை 55300 ஆகும்.

8. இப்பள்ளிகளின் கல்வித் தரத்தை உயர்த்தும் பொருட்டு தேவையான திட்டங்களை உடன் செயல்படுத்த அரசு பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பள்ளிகளின் நிலை உயர்த்துதல், கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தருதல், ஆய்வகங்கள் கட்டுதல், ஆய்வுக் கூட உபகரணங்களை வழங்குதல், மின் இணைப்புகள் அளித்தல், குடிநீர் வசதிகள் செய்து தருதல் மற்றும் மாணவியர்களுக்கு கழிப்பிடங்களை கட்டித் தருதல் ஆகியவைகள் இத்திட்டங்களில் அடங்கும்.

9. 1998-99ஆம் ஆண்டில் 10 துவக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், ஒரு நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகவும் மற்றும் ஒரு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப்பள்ளியாகவும் மொத்தம் ரூ. 62.89 இலட்சம் செலவில் நிலை உயர்த்தப்பட்டன. அதேபோன்று ரூ. 30.00 இலட்சம் மதிப்பீட்டில் 10 கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், ரூ. 21.00 இலட்சம் மதிப்பீட்டில் 14 ஆய்வுக் கூடக் கட்டடங்கள்

கட்டுதல், 13.50 இலட்சம் செலவில் 27 பள்ளிகளுக்கு குடிநீர் வசதி அளித்தல், ரூ. 14.11 இலட்சம் மதிப்பீட்டில் 17 பள்ளிகளில் மாணவியர்களுக்காக கழிப்பறைகள் கட்டித் தருதல் ஆகிய திட்டங்களும் கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் செயலாக்கப்பட்டுள்ளன. கள்ளர் பள்ளிக் கட்டடங்களைப் பழுது பார்க்கவும், சீரமைக்கவும் ரூ. 2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் கள்ளர் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் பயிற்சித் திறனை மேம்படுத்தும் பொருட்டு ரூ. 1.90 இலட்சம் செலவில் முதன்முறையாக புத்தறிவுப் பயிற்சியும் அளிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

10. அனைத்து நிலைகளிலும் பின்தங்கியுள்ள பிரமலைக்கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குச் சிறந்த கல்வி அறிவை அளிப்பதற்கு ஏதுவாக கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் அடிப்படைக் கூட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒவ்வோராண்டும் கணிசமான அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் மேம்பாட்டிற்காக 1999-2000 ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய திட்டங்களின் விவரங்கள் இக்கொள்கை விளக்கக் குறிப்பின் இறுதியில் "புதிய திட்டங்கள்" என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன.

**பாடப் புத்தகங்கள் மற்றும் எழுது பலகைகள் வழங்குதல்**

11. சீர்மரபினர் வகுப்பினரின் கல்வி மேம்பாட்டில் சிறப்புக் கவனம் செலுத்துவதற்காகவும் உதவித் தொகை அளிப்பதற்காகவும் வேண்டி செயற்படுத்தப்படும் திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 3வது வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு எழுது பலகைகளும், 10-வது வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1999-2000 ஆண்டிற்கு ரூ. 35.83 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சீருடை வழங்கல்**

12. சீர்மரபினர் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கும், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ இல்லங்களில் தங்கி 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கும் ஒவ்வோராண்டும் இரண்டு தொகுதி சீருடைகள் வழங்கப்படுகின்றன.





பிற்படுத்தப்பட்டோர் மாணவ இல்லங்களைச் சேர்ந்த 18,500 மாணவ/மாணவியரும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவ இல்லங்களைச் சேர்ந்த 20050 மாணவ/மாணவியரும், சீர்மரபினர் பள்ளிகளைச் சேர்ந்த 44,950 மாணவ, மாணவியரும் இத்திட்டத்தினால் பயன்பெறுகின்றனர். 1999-2000 ஆண்டில் இத்திட்டத்திற்கு தற்காலிக நிதி ஒதுக்கீடாக ரூ. 133.04 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**படிப்புதவித் தொகை**

13. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 25,000/- என்ற வரம்பிற்குட்பட்டுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு பல்வேறு படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

**பள்ளிப் படிப்பு உதவித் தொகை**

14. பள்ளிப் படிப்பு உதவித் தொகை திட்டத்தின்கீழ் இதுவரை பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர்களுக்கு, 9ஆம் வகுப்பிற்கு குறிப்பிட்ட சில பாடப்புத்தகங்களும், 10ஆம் வகுப்பிற்கு அனைத்து பாடப்புத்தகங்களும் வழங்கப்பட்டு வந்தன. 1999-2000 ஆண்டு முதல் 10ஆம் வகுப்புக்கு வழங்கப்படுவது போல், 9ஆம் வகுப்பு மாணவ/மாணவியர்களுக்கும் அனைத்து பாடப்புத்தகங்களும் வழங்கப்பட உள்ளன. இத்திட்டத்திற்கென 1999-2000 ஆண்டிற்கு ரூ. 64.48 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. 1998-99ம் ஆண்டு முதல் இத்துறையின் விடுதிகளில் தங்கி நான்கு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு இலவசமாக பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு 6 முதல் 10ஆம் வகுப்பு வரை அனைத்துப் பாடப்புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இப்புத்தகங்கள் அனைத்தும் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 25,000/-க்கு மிகைப்படாத மாணவ/மாணவியர்களுக்கு தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் மூலம் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும், மாணவர்கள் செலுத்த வேண்டிய தனிக் கட்டணமும் கல்வி நிலையங்களுக்கு ஈடு செய்யப்படுகிறது. 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணமும் மாணவர்கள் சார்பில் அரசு தேர்வுகள் இயக்குநருக்கு ஈடு செய்யப்படுகின்றது.

[1999 ஏப்ரல் 13

ஆண்டு வருமானம் ரூ. 25,000/-க்கு மிகைப்படாத பட்டதாரி அல்லாத குடும்பங்களைச் சார்ந்த பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியருக்கும், எந்த நிபந்தனையும் இன்றி அனைத்து மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்கும் அவர்கள் ஆங்கில மொழி வழி கல்வி பயில்பவராக இருந்தால் கல்விக் கட்டணமும் ஈடு செய்யப்படுகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்கள் இச்சலுகைகளுக்குத் தகுதியுடையவராவர். இத்திட்டத்திற்கு 1999-2000ம் ஆண்டிற்கு ரூ. 577.86 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை**

15. பள்ளிகளில் +2 வகுப்பு முதல், கல்லூரிகள்/ பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி பட்டப் படிப்பு வரையில், பயிலும் மாணவ/மாணவியர்களுக்காக பள்ளி மேற்படிப்பு உதவித்தொகைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 25,000/-க்கு மிகைப்படாத மாணவ/ மாணவியர்களுக்கு படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் புத்தகக் கட்டணம் ஆகியவைகளில் ஒரு பகுதியும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையுமாக உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

16. மேனிலைப் பள்ளியில் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு கற்கும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், அவர்களது கல்விக் கட்டணத்தைத் திரும்பப் பெறுவதற்கு அவர்களுடைய பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 25,000/-க்கு உட்பட்டிருக்க வேண்டும். அவர்களுடைய குடும்பத்தில் பட்டதாரிகள் இருக்கக் கூடாது என்ற நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. ஆங்கிலம் வழி கற்கும் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியர்கள் நிபந்தனைகள் ஏதுமின்றி மேற்கூறிய சலுகைகளை அடையலாம். கல்வி நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு உதவித் தொகை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி உணவு மற்றும் உறையுள் கட்டணம், படிப்புதவித் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மெட்ரிக் படிப்புக்குப் பிந்தைய படிப்புக்குரிய படிப்புதவித் தொகை வழங்குவதற்காக, 1999-2000 ஆண்டில் ரூ. 689.24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 13]

**இலவசக் கல்வி**

17. பத்தாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கு அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியரைப் பொறுத்தமட்டில் (அ) அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 25,000/-க்கு மேல் இருக்கக்கூடாது மற்றும் (ஆ) அவருடைய குடும்பத்தில் பட்டதாரிகள் இருக்கக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, பத்தாம் வகுப்பிலிருந்து பட்டப்படிப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

18. பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் இனத்தவர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நிபந்தனைகளோடு, அக்குடும்பத்தில் அம்மாணவர் தொழிற்கல்வி பயிலும் முதல் நபராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் மற்றும் சட்டம் போன்ற தொழில் பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இலவசக் கல்வி வழங்கும் இத்திட்டம், 1997-98ஆம் ஆண்டு முதல், பல்தொழில் பயிற்சிப் பள்ளியில் பட்டயப் படிப்பு பயிலும் மேற்சொன்ன மூன்று தொகுதிகளைச் சேர்ந்த மாணவ/மாணவியர்களுக்கு மேற்கண்டுள்ள அதே இரண்டு நிபந்தனைகளுக்குட்பட்டு நீட்டிக்கப்பட்டுள்ளது. 1997-98ஆம் ஆண்டு 2000 நபர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்த இத்திட்டம், 1998-99ஆம் ஆண்டு முதல் தகுதியுடைய அனைத்து மாணவ/மாணவியர்களும் பயன்பெறும் வகையில் வரம்பு நீக்கப்பட்டது.

19. இந்த இலவசக் கல்வி திட்டங்களின்கீழ் பயின்று வரும் மாணவ/மாணவியருக்கு அரசு ஏற்பளித்துள்ளவாறு அரசுக் கல்லூரிகளுக்கும், அரசு மானியம் பெறும் கல்லூரிகளுக்கும் பொருந்தத்தக்க வீதங்களில் கல்விக் கட்டணங்கள், சிறப்புக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணங்கள் மற்றும் ஏனைய திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து முழுவதுமான விலக்களிக்கப்பட்டுள்ளது. இக்கட்டண விலக்களிப்பினால், கல்வி நிறுவனங்களுக்கு ஏற்படும் நிதி இழப்புத்

[1999 ஏப்ரல் 13

தொகை, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறைகள் மூலம் இக்கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றது. இத்திட்டங்களின்கீழ், 1999-2000 ஆண்டிற்கு 1,60,000 மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் பொருட்டு ரூ. 986.80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**உணவு மானியம்**

20. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியரின் நலனுக்காகப் பராமரிக்கப்பட்டுவரும், அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் விடுதிகள், இல்லங்கள் ஆகியவற்றிற்கு அவ்வில்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 50,000-க்கு மிகாமலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களின் உணவு மற்றும் உறையுள் கட்டணம் தொடர்பான செலவுகளை ஏற்பதற்கு உணவு மானியம் என்ற வகையில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. 1997-98ஆம் ஆண்டு வரையில், ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு, உணவு, உறையுள் கட்டணமாக மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 120- வழங்கப்பட்டது. 1998-99ஆம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு இத்தொகை ரூ. 120-லிருந்து ரூ. 150-ஆக உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், 39 தனியார் இல்லங்கள் உள்ளன. 1998-99ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 2,900 மாணவ, மாணவியர்கள் பயனடைந்தனர். 1999-2000 ஆண்டிற்கு ரூ. 19.89 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1999-2000 ஆண்டு முதல் ரூ. 0.75 இலட்சம் செலவில் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரியார் குடில் எனும் உணவு இல்லத்தில் மேலும் 50 மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் மாணவ/ மாணவியர்கள் பயன் பெறும் வகையில் கூடுதலாக உணவு மானியங்கள் வழங்கப்படவுள்ளன.

**பரிசுகள் வழங்குதல்**

**(1) மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுகள்**

21. இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் மாநில அளவில், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கான அரசுத் தேர்வுகளில் உயர் மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு இரண்டு முதல் பரிசுகள்



1999 ஏப்ரல் 13]

(மாணவருக்கு ஒன்று, மாணவியருக்கு ஒன்று) வழங்கப்படுகின்றன. பன்னிரெண்டாம் வகுப்பில், முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியராக இருந்தால் ரூ. 3,000-மும், மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர் மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராக இருந்தால் ரூ. 5,000-மும் வழங்கப்படுகிறது. 10ஆம் வகுப்பில் முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியராக இருந்தால் ரூ. 1,500-ம், மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர் மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராக இருந்தால் ரூ. 3,000-மும் வழங்கப்படுகிறது.

22. இதுபோலவே, மாவட்ட அளவில் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு இரண்டு முதல் பரிசுகள் (மாணவருக்கு ஒன்று, மாணவியருக்கு ஒன்று) வழங்கப்பட்டு வருகின்றன. பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியராக இருப்பின் ரூ. 1,500-ம், மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர் மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராகயிருப்பின் ரூ. 3,000-மும் வழங்கப்படுகின்றன.

23. பத்தாம் வகுப்பு மாணவ/மாணவியருக்கு இரண்டு முதல் பரிசுகள், இரண்டு இரண்டாம் பரிசுகள் மற்றும் இரண்டு மூன்றாம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராய் இருப்பின், முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளுக்கு முறையே ரூ. 500, ரூ. 250 மற்றும் ரூ. 150 வழங்கப்படுகின்றன. மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராயிருப்பின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளுக்கு முறையே ரூ. 1,000, ரூ. 500 மற்றும் ரூ. 300 வழங்கப்படுகின்றன. 1999-2000 ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 1.78 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(2) பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு (12ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்)**

24. பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர் மரபினர் சமூகத்தைச் சேர்ந்தவர்களில் பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம், இரண்டாம் இடம் பெற்று தொழிற்படிப்பில் சேருகின்ற மாணவர் இருவர், மாணவியர் இருவருக்கு, ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 3,000 வீதம் நான்கு ஆண்டுகளுக்கு பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

**தந்தை பெரியார் நினைவுப் பரிசு (10ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்)**

25. ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்தொழில் பயிற்சி நிலையத்தில் பட்டயப் படிப்பில் சேர்ந்துள்ள பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர் மரபினர் சமூகத்தைச் சேர்ந்த மாணவ மாணவியரில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் உயரிய மதிப்பெண்கள் பெற்றுள்ள மாணவர் இருவருக்கும், மாணவியர் இருவருக்கும், ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 3,000 வீதம் மூன்றாண்டுகளுக்கு தந்தை பெரியார் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

அண்ணா, பெரியார் நினைவுப் பரிசுகளுக்காக 1999-2000 ஆண்டிற்கென ரூ. 20.22 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**மாணவர் இல்லங்கள்**

26. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை 1997-98 வரையில் 942 மாணவர் இல்லங்களை நடத்தி வந்தது. 1998-99ஆம் ஆண்டில் புதிதாக 25 பிற்படுத்தப்பட்ட மாணவர் இல்லங்கள் தொடங்கப்பட்டன. இன்றைய நிலையில் 967 மாணவரில்லங்கள் செயல்படுகின்றன. அவற்றில் 537 மாணவரில்லங்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றன. எஞ்சியுள்ள 430 மாணவரில்லங்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். சீர்மரபினர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் மொத்தம் 50,060 மாணவ/மாணவியர்கள் மாணவரில்ல வசதிகளைப் பெற்றுள்ளனர். மாணவரில்லங்களில் சேர அனுமதி பெற, விண்ணப்பதாரரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 50,000க்குட்பட்டு இருத்தல் வேண்டும். 967 மாணவரில்லங்களில், 161 மாணவரில்லங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்படுகின்றன. எஞ்சியுள்ள 806 மாணவரில்லங்கள் வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன.

அரசு இல்லங்களில் தங்கியுள்ள மாணவ/மாணவியர்களுக்கு அடிப்படை வசதிகளுடன் போதுமான இட வசதியுடன் பொதுப்பணித் துறையினால் வடிவமைக்கப்பட்ட வரைபடங்களின்படி விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. மாணவியர் இல்லங்களில் உள்ள பெண்களுக்கு தொடர்ந்து பாதுகாப்பு





அளித்திடும் நோக்கத்துடன் சுற்றுச் சுவர் மற்றும் காப்பாளினி குடியிருப்புடன் சேர்த்து மாணவியர் இல்லக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. 1998-99ஆம் ஆண்டு ரூ. 496.10 இலட்சம் மதிப்பீட்டில் 15 விடுதிக் கட்டடங்கள் கட்ட உத்தரவிடப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாணவரில்லக் கட்டடங்களைப் பராமரிப்பது தொடர்பாக ரூ. 22.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது 41 மாணவரில்லங்களின் கட்டடங்களைக் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது. இந்த மாணவரில்லங்களுக்கு மாவு அரவை இயந்திரங்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் (கல்லூரி மாணவரில்லங்களுக்கு மட்டும்), நூலகங்கள் ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. மாணவர் இல்லங்களில் தங்கிப் படிப்பவர்களின் பொது அறிவை மேம்படுத்தும் வகையில், இந்த மாணவரில்லங்களுக்கு ஆங்கில நாளிதழ் ஒன்றும், தமிழ் நாளிதழ்கள் இரண்டும் வழங்கப்படுகின்றன. அரசு இல்லங்களில் தங்கியுள்ள மாணவ/மாணவியர்களுக்கு 10ஆம் வகுப்பு வரை இலவசப் பாடப்புத்தகங்கள் பல்வேறு திட்டங்களின்கீழ் வழங்கப்படுகின்றன. 10ஆம் வகுப்பு மற்றும் +2 அரசு பொதுத் தேர்வுகள் எழுதும் மாணவ/மாணவியர்களின் தேர்ச்சி சதவிகிதத்தை உயர்த்த அவர்களுக்கு இலவசமாக பல்வேறு பாடமுறைகளுக்கான வழிகாட்டி நூல்களும் (கைடுகள்) வழங்கப்படுகின்றன. இந்த மாணவரில்லங்களின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு மாணவரில்லத்திற்கும் மாணவரில்ல கண்காணிப்புக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டில் கொடுக்கப்பட உள்ள ஏனைய வசதிகள் பற்றிய விவரங்கள், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் இறுதியில் 'புதிய திட்டங்கள்' என்ற தலைப்பின் கீழ் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

**உணவுக் கட்டணங்கள்**

27. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை நடத்தும் மாணவரில்லங்களில் தங்கிப் பயில்பவர்களுக்கு அரசு அனுமதிக்கும் வீதங்களில் உணவுக் கட்டணங்கள் அனுமதிக்கப்படுகின்றன.

கடந்த 1-6-1998 முதல் கல்லூரி விடுதி மாணவ/மாணவியர்களுக்கான மாதாந்திர உணவுக் கட்டணத் தொகை நபர்

ஒருவருக்கு ரூ. 300/-ல் இருந்து ரூ. 400/- ஆகவும், பள்ளி விடுதி மாணவ/மாணவியர்களுக்கான மாதாந்திர உணவுக் கட்டணத் தொகை நபர் ஒருவருக்கு ரூ. 180/-இல் இருந்து ரூ. 225/- ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றது. விடுதி மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தை உயர்த்துவதை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.

28. கடந்த 1-7-1998 முதல், அரசு இல்லங்களில் மாதம் ரூ. 500/- என்ற தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த சமையலர்கள் ரூ. 2550-3200 என்ற முறையான ஊதிய விகிதத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். அதேபோன்று சமையல் உதவியாளர்களின் மாதாந்திர தொகுப்பூதியமும் ரூ. 100/-இல் இருந்து ரூ. 500/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

1999-2000 ஆண்டிற்கு விடுதிகளைப் பராமரிக்க மொத்தம் ரூ. 3174.14 இலட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

## 2. பொருளாதார மேம்பாடு

### கருவிகளை இலவசமாக வழங்குதல்

29. சமுதாயத்தில் மிகவும் வறிய நிலையிலுள்ள பிரிவினருக்கு குறிப்பாக, ஆண்டு வருமானம் ரூ. 12,000/-க்கும் குறைவாக உள்ள சலவைத் தொழிலாளர்கள் முடிதிருத்துவோர், போயர்கள் ஆகியோரின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையிலும், சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதற்கும் ஆண்டுதோறும் 4000 பித்தளை தேய்ப்புப் பெட்டிகளும், 500 முடிதிருத்தும் கருவிகளும், 500 கல்லுடைக்கும் கருவிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இருப்பினும், 1998-99ஆம் ஆண்டில் மேலும் கூடுதல் நபர்கள் பயனடையும் வகையில் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட துணி தேய்ப்புப் பெட்டிகளின் எண்ணிக்கை 4000-லிருந்து, 6000 ஆகவும் முடிதிருத்துவோர் கைப்பெட்டிகள் எண்ணிக்கை 500-லிருந்து 2000 ஆகவும் கல்லுடைக்கும் கருவிகள் எண்ணிக்கை 500-லிருந்து 2000 ஆகவும் அதிகரிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 1999-2000 ஆண்டில் ரூ. 64.46 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### முடிதிருத்தகங்கள், சலவை நிலையங்கள், நடமாடும் சலவை நிலையங்கள் ஏற்படுத்துதல்

30. முடிதிருத்தகங்கள், சலவை நிலையங்கள், நடமாடும் சலவை நிலையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கு அரசு பின்வருமாறு நிதியுதவி அளிக்கிறது :

| திட்டத்தின் பெயர் | பயனடைவோரின் எண்ணிக்கை | அரசு உதவித் தொகை | வங்கிக் கடன் உதவி | ஒவ்வொரு பயனீட்டாளருக்கான மொத்தச் செலவு |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| முடிதிருத்தகம் | 200 | 1500 | 3500 | 5000 |
| சலவை நிலையம் | 150 | 1500 | 3500 | 5000 |
| நடமாடும் சலவை நிலையம் | 50 | 600 | 1400 | 2000 |

பயனடைவோர், 400 பேருக்கு நிதியுதவி அளிப்பதற்காக 1999-2000 ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3. பயிற்சியும் வேலைவாய்ப்பும்

### அனைத்திந்தியப் பணிகளுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டம்

31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த திறமையான மாணவர்களும் மாணவியர்களும் அனைத்திந்திய சிவில் பணிகள் தேர்வுகளில் வெற்றி பெற இயலும் வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க 1971ஆம் ஆண்டிலிருந்து சென்னையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. 1997-98ஆம் ஆண்டு வரையில் ஆண்டுதோறும் ஐம்பது பேருக்கு மட்டும் இந்நிறுவனத்தின் மூலம் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டு முதல் இந்த எண்ணிக்கை 100 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இலவச இடவசதி, தனிப் பயிற்சி, நூல் நிலைய வசதி ஆகியவற்றுடன் மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ. 500 வீதம் உணவுக் கட்டணமும் அளிக்கப்படுகிறது. வருமான

வரம்பு நிபந்தனை இன்றி பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த அனைத்து மாணவ மாணவியருக்கும் இவ்வசதி அளிக்கப்படுகிறது. 1999-2000 ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 63.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வட்டாரப் பயிற்சி மையம் ஒன்றும் மதுரை காமராசர் பல்கலைக் கழக வளாகத்தில், 75 மாணவ மாணவியருக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் இயங்கி வருகிறது.

அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வு எழுதுவோருக்குப் பயிற்சி அளிக்க சென்னையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக ஒன்றும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக ஒன்றும், ஆக இரண்டு பயிற்சி நிலையங்கள் உள்ளன. இப்பயிற்சியின் தரத்தை உயர்த்தவும், நம் மாநிலத்திலிருந்து அகில இந்தியப் பணிகளுக்குத் தேர்வு செய்யப்படும் நபர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும், இவ்விரண்டு பயிற்சி நிலையங்களையும் ஒருங்கிணைத்து வசதிகளையும் தரத்தையும் மேம்படுத்துவது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுக்கு சிறப்புப் பயிற்சி அளித்தல்**

32. கிராமப் பகுதிகளிலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு, சீர்மரபினர் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களை ஊக்குவிக்க இத்துறை, தொழில் கல்வி நுழைவுத் தேர்வை எழுதுகின்ற இப்பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 72 மையங்கள் மூலம் ஒவ்வோராண்டும் சிறப்புப் பயிற்சி அளிக்கிறது. மாவட்டங்களிலுள்ள அரசு மற்றும் அரசு மானியம் பெறும் மேனிலைப் பள்ளிகளில் 15 நாட்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் சேருவதற்கு வருமான வரம்பு ஏதுமில்லை. 1999-2000 ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 0.94 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சட்டப் பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்**

33. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த 20 சட்டப் பட்டதாரிகளுக்கு ஒவ்வோராண்டும் மூத்த வழக்குரைஞர்களின்கீழ் மூன்றாண்டுகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமொன்றுக்கு அரசு



அனுமதியளித்துள்ளது. இப்பயிற்சிக்கால அளவில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ரூ. 750/- பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சேர ஆண்டு வருமான வரம்பு ரூ. 25,000/- ஆகும். பயிற்சி அளிக்கும் மூத்த வழக்குரைஞருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 5001/- வீதம் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. 1999-2000 ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ. 4.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பயிற்சி மையங்கள்**

34. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள முதுகுளத்தூரில் ஒன்றும், மதுரை மாவட்டத்திலுள்ள செக்கானூரணியில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வீரகேளம்புதூரில் ஒன்றும், ஆக மூன்று தொழில் பயிற்சி நிறுவனங்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் துறையின் நிதியுடன், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வோராண்டும் இந்தப் பணிமனைகளில் 208 மனுதாரர்களுக்கு வெவ்வேறு தொழில்களில், கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு பயிற்சி அளிக்கப்படுகிறது :

| தொடர் எண் | தொழில் பெயர் | பயனடைவோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பொருத்துபவர் | 96 பேர் |
| 2. | பற்றவைப்பவர் | 48 பேர் |
| 3. | உலோகத் தகட்டுப் பணியாளர் | 64 பேர் |

1999-2000 ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 49.60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

35. திருநெல்வேலி, மதுரை, கன்னியாகுமரி, இராமநாதபுரம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் 220 பெண்கள் பயனடையும் வகையில், ஏழு தையற்பயிற்சி மையங்களையும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குழித்துறையில் நாரிழைத் தயாரிப்புப் பயிற்சி மையம் ஒன்றையும் அரசு நடத்தி வருகிறது. 1999-2000 ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ. 18.24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1999 ஏப்ரல் 13

**வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சித் திட்டம்**

36. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த மாணவ, மாணவியர் வேலை வாய்ப்பு பெறுவதில் மற்றவர்களுடன் போட்டியிடத் தகுதி பெற, இந்த வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம் வகை செய்கிறது. இந்தப் பயிற்சித் திட்டங்கள் மாணவ மாணவியர் தகுதியினை உயர்த்துவதுடன் வேலைவாய்ப்பினைப் பெறவும் உதவுகின்றன. வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சித் திட்டம் பெரும்பாலும் அரசு நிறுவனங்களாலும், அத்தகைய வசதி இல்லாத இடங்களில் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களாலும் அளிக்கப்படுகிறது. இதற்குரிய பயிற்சிக் கட்டணத்தை அரசு ஏற்றுக் கொள்கிறது. கணினி பாடத் திட்டங்கள், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, தட்டச்சு, சுருக்கெழுத்து, தொலைபேசி இயக்கம், தானியங்கி பொறியியல், குளிர்சாதனம் மற்றும் குளிர்சாதனப் பெட்டி பழுதுபார்ப்பு, துணை செவிலியர் பயிற்சி, பிளாஸ்டிக் செய்முறை இயந்திரம் இயக்குதல், காலணிகள் தயாரிப்பு, துணி நூல்கள் தொடர்பு பிரிவுகளில் பயிற்சி ஆகியவை அளிக்கப்படுகின்றன. தொலைதூர பயிற்சியாளர்களுக்கு உணவுக் கட்டணம் வழங்கப்படுகிறது. 1998-99ஆம் ஆண்டின்போது மொத்தம் 60 பெண்களுக்கு தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனத்தின் மூலம் கணினி உதவியுடன் ஆடை வடிவமைப்பு, அலங்கார ஆடை விரிவாக்கம் மற்றும் ஆடை உற்பத்தித் தொழில் நுட்பவியல் ஆகியவைகளில் பயிற்சியளிக்கவும் தேர்வு செய்யப்பட்டனர். 1999-2000 ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 457.45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்பத் துறை வருமாண்டுகளில் மிகப் பெருமளவு வேலைவாய்ப்புகளை அளிக்கும் என்பதால், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரில் 5,000 பேருக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று இந்த நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்படும். 1998-99ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகிய வகுப்பினைச் சேர்ந்த மாணவர்களுக்கு அளிக்கக் கருதியுள்ள புதிய பயிற்சித் திட்டங்கள் குறித்த பட்டியல், கொள்கை விளக்கக் குறிப்பின் இறுதியில், 'புதிய திட்டங்கள்' என்னும் தலைப்பின்கீழ் விரிவாக அளிக்கப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 13]

**இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம்**

37. 1996-97ஆம் ஆண்டு வரையில், ஆண்டு வருமானம் ரூ. 12,000க்குக் கீழ் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு, சீர்மரபினர் ஆகியவற்றைச் சேர்ந்த குடும்பங்களுக்கு இத்திட்டத்தின்கீழ் 3 சென்ட் பரப்பளவு உள்ள நிலம் வழங்கப்பட்டது. 1997-98ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு இத்திட்டத்தின்கீழ் அதிக எண்ணிக்கையிலான மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகியவற்றைச் சேர்ந்த குடும்பங்கள் பயன் பெறுகிற வகையில் இத்திட்டத்திற்காக முன்பு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த தொகை ரூ. 200 கோடி ரூ. 10 கோடியாக உயர்த்தப்பட்டது. மேலும் 1997--98ஆம் ஆண்டே இத்திட்டம் கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் மற்றும் முன்னேறிய வகுப்பினருக்கும் நீட்டிக்கப்பட்டு, இதன் பயனாக 1998-99ல் மொத்தத்தில் 34832 பட்டாக்கள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டன. 1999-2000 ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 18.04 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணிகளை விரைந்து செயல்படுத்துவதற்காக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் நில எடுப்புப் பணிகளுக்காக தனியாக 15 தனி வட்டாட்சியர் மற்றும் தேவையான தொழில்நுட்பப் பணியாளர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டன. பிற்படுத்தப்பட்டோருக்கு வீடு கட்டித்தரும் திட்டத்திற்கு மானியக் கோரிக்கை எண் 32ன்கீழ் ரூ. 821.54 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஏனைய திட்டங்கள்**

38. சமூக நீதிக்காகப் போராடியவர்களை கௌரவிக்கும் பொருட்டு அரசு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதினை வழங்கி வருகின்றது. 24-12-1998ஆம் நாளன்று நடைபெற்ற அரசு விழாவில் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் 1998-99ஆம் ஆண்டுக்கான ஒரு சவரன் எடையுள்ள தங்கப் பதக்கம், ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கம் அடங்கிய இந்த விருதினை நாத்திகம் திரு. இராமசாமி அவர்களுக்கு வழங்கினார்கள். 1999-2000 ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 47,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1999 ஏப்ரல் 13

**சிறுபான்மையினர் நலன்**

39. சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு மாநிலத்தில், மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் இயங்கி வருகிறது. சிறுபான்மையினரின் பிரச்சினைகளை ஆராயவும், உரிய குறை தீர் நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைக்கவும் இந்த ஆணையம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைப் பார்வையிடுகிறது.

40. தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் மற்றும் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகம், ஆகியவற்றின் வழிமுகமையாகப் பணியாற்றும் பொருட்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பெயர் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் என்று மாற்றப்பட்டுள்ளது.

41. 1997ஆம் ஆண்டு வரை 'வக்பு மற்றும் ஹஜ் புனித யாத்திரைக் குழு' ஆகியவை சம்பந்தப்பட்ட பணிகளைத் தலைமைச் செயலகத்திலுள்ள வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறை கவனித்து வந்தது. சிறுபான்மையினர் நலனை, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்ககம் கவனித்து வருகிறது. 'வக்பு மற்றும் ஹஜ் புனித யாத்திரைக் குழு' ஆகியவற்றின் மீது தனிக் கவனம் செலுத்துவதற்காக இவை குறித்த விஷயங்கள் 18-8-1997-ஆம் நாளிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறைக்கு மாற்றப்படுள்ளன. பிரதமரின் 15 அம்சத் திட்டத்தின்கீழ், சிறுபான்மையினரின் நலனுக்காக, கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன :

(அ) காவல் துறைப் பணியாளர்கள் நியமனத்தில் சிறுபான்மையினருக்குத் தனிச் சலுகை அளித்தல்.

(ஆ) மேம்பாட்டுத் திட்டங்களில் சிறுபான்மையினருக்கு நியாயமான வாய்ப்புகள் அளித்தல்.

(இ) சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் அவர்களுடைய தாய் மொழியில் கல்வி பயில வசதிகள் செய்து கொடுத்தல்.



1999 ஏப்ரல் 13]

(ஈ) மொழிவாரிச் சிறுபான்மையினருக்குத் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் பாடநூல்கள் வழங்குதல்.

(உ) சென்னை, கிருஷ்ணகிரி, தேசூர் ஆகிய இடங்களில் முறையே உருது, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை நடத்துதல்.

**வக்பு வாரியம்**

42. 1995ஆம் ஆண்டு வக்பு சட்டத்தின்கீழ் (மத்தியச் சட்டம் 43/1995) தமிழ்நாடு 1997ஆம் ஆண்டு வக்பு வாரிய (உறுப்பினர்கள் தேர்தலை நடத்துதல்) விதிகள் இயற்றப்பட்டுள்ளன. 1995ஆம் ஆண்டு மத்தியச் சட்டத்தின் (43/1995) கீழும் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றின்கீழும், தமிழ்நாடு வக்பு வாரிய உறுப்பினர்கள் அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு வாரியத்தில் நியமிக்கப்படடுள்ளனர். அதற்கிணங்க புதிய தமிழ்நாடு வக்பு வாரியம் 10-6-1997-ஆம் நாளன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியம் அதன் தலைவரை 25-6-1997-ஆம் நாளன்று தேர்ந்தெடுத்துள்ளது.

43. வக்பு அல்லது வக்பு சொத்து தொடர்பான எந்தவொரு பூசலையும் முடிவு செய்வதற்கு, 29 மாவட்டங்களில் அதிகார வரம்பை பெற்றுள்ள 23 வக்பு நடுவர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வக்பு சொத்துக்களைப் பொறுத்தவரையில் நில அளவை நிலவரி ஏற்பாட்டு ஆணையாளர்-இயக்குநர், தேவையான துணைப் பணியாளர்களுடன், நில அளவை ஆணையாளராக அறிவிக்கப்பட்டு நியமிக்கப்பட்டு உள்ளார். ஆண்டுதோறும் தமிழ்நாடு வக்பு வாரியத்திற்கு நிர்வாக மானியம் அரசு வழங்கி வருகிறது. 1998-99ஆம் ஆண்டில் வக்பு வாரியத்திற்கு அரசு ரூ. 30.00 இலட்சம் வழங்கியது. 1999-2000 ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 30.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பழுதுபார்ப்பு சீரமைப்பு மானியம்**

44. மசூதியைப் புதுப்பித்தல், சுற்றுச் சுவர் கட்டுதல், அல்லது இஸ்லாமியர் இடுகாட்டிற்கு முட்கம்பி வேலி அமைத்தல் ஆகிய வகையில் ஒவ்வோராண்டும், வக்பு வாரியத்திற்கு, அரசு மானியம் வழங்கி வருகிறது. 1998-99ஆம் ஆண்டில் 40 வக்பு கட்டடங்கள் சீரமைப்பிற்கு ரூ. 10.00 இலட்சம் வழங்கப்பட்டது.

[1999 ஏப்ரல் 13

**உலமா ஓய்வூதியம்**

45. முவாஜின், பேஷ் இமாம் அல்லது அரபு மொழி ஆசிரியராக 20 ஆண்டுகள் பணியாற்றி 60 வயதை அடைந்து எந்தவித நிதி ஆதாரமும் இல்லாத உலமாக்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 500/- உலமா ஓய்வூதியமாக தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டது. 27-1-1999 முதல், அளவை செய்யப்பட்டு அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்ட வக்ஃபுச் சட்டம் 1995-ன்கீழ் சகாயத் தொகை செலுத்தி வரும் வக்ஃபுகளில், அவ்வக்ஃபுகள் பதிவு செய்திருந்தாலும் அல்லது பதிவு செய்யப்படாமல் இருந்தாலும், அவற்றில் பணியாற்றிய உலமாக்களுக்கு, உலமா ஓய்வூதியத்திற்கான மற்ற பிற தகுதிகள் பெற்றிருந்தால், உலமா ஓய்வூதியம் வழங்கப்படும். 1997-98ஆம் ஆண்டுவரை உலமா ஓய்வூதியப் பயனாளிகளின் எண்ணிக்கை 2000. இது 1998-99ஆம் ஆண்டு முதல் 2200-ஆக உயர்த்தப்பட்டது. 1999-2000 ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 1.32 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மசூதிகள், தர்காக்கள் ஆகியவற்றைப் பழுதுபார்க்க மற்றும் சீரமைப்புப் பணிகள் குறித்த புதிய திட்டங்கள், கொள்கை விளக்கக் குறிப்பின் இறுதியில் 'புதிய திட்டங்கள்' என்னும் தலைப்பின்கீழ் அளிக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு மாநில ஹஜ் புனித யாத்திரைக் குழு**

46. ஹஜ் குழு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரைத் தலைவராகவும், 15 பேரை உறுப்பினர்களாகவும் கொண்டு 18-3-1997ஆம் நாளன்று அமைக்கப்பட்டுள்ளது. 7 பேரை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளவும் அரசு இசைவு அளித்துள்ளது. இக்குழுவின் பதவிக்காலம் 3 ஆண்டுகள் ஆகும். நிர்வாகச் செலவுகளைச் செய்வதற்காக, 1997-98ஆம் ஆண்டு வரை ஒவ்வோராண்டிற்கும் தமிழ்நாடு மாநில ஹஜ் புனித யாத்திரைக் குழுவிற்கு 5 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. 1998-99 முதல் இத்தொகை ரூ. 7.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

47. தமிழ்நாடு ஹஜ் குழுவின் முக்கியமான செயல்பாடுகள் யாதெனின் ஹஜ் புனிதப் பயணத்தின்போது, ஹஜ் பயணிகளுக்குத் தேவையான உதவிகள் செய்வதன் மூலம் ஹஜ் புனிதப் பயணிகளின் நலன்களைக் கவனித்தல், வெளியூர்களிலிருந்து வரும் பயணிகளுக்கு சென்னையில் தங்குவதற்கான இடவசதிகள் செய்து கொடுத்தல்,



1999 ஏப்ரல் 13]

தங்கியிருக்கும் இடத்திலிருந்து சென்னை விமான நிலையத்திற்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் செய்தல், சென்னையிலிருந்து விமானத்தில் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுத்தல் ஆகியனவாகும்.

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு நிர்வாக மானிய வகையில், 1999-2000 ஆண்டில் ரூ. 7.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஹஜ் பயணிகளுக்கு உதவிட ஹஜ் தொண்டர்கள் அனுப்புதல்**

48. ஹஜ் புனிதப் பயணத்தின்போது ஹஜ் புனிதப் பயணிகள் தங்குவதற்குத் தேவையான கட்டடங்களைத் தேர்ந்தெடுக்க, ஹஜ் காலத்திற்கு முன் கட்டடத் தேர்வுக் குழுப் பிரதிநிதிகளும், ஹஜ் காலத்தில் தமிழ்நாடு புனிதப் பயணிகளின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு உயர்நிலை அலுவலர் மற்றும் ஹஜ் தொண்டர்கள் ஆகியோரை தமிழ்நாடு அரசு அனுப்புகிறது.

1999-2000 ஆண்டில் இதற்கென ரூ. 6.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முஸ்லீம் மகளிருக்கு உதவும் சங்கம்**

49. முஸ்லீம் மகளிருக்கு உதவும் சங்கம், சென்னையில் 1-10-1892 அன்று தொடங்கப்பட்டது. இச்சங்கம், சங்கங்களைப் பதிவு செய்வதற்கான சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் முக்கியமான நோக்கங்கள் யாதெனில், ஆதரவற்ற முஸ்லீம் விதவைகளுக்கு மாதாந்திரப்படி அளித்து உதவுதல், தகுதியுடைய முஸ்லீம் மகளிர் மற்றும் பெண்களுக்கு உதவிகள் செய்தல், ஆதரவற்ற முஸ்லீம் மகளிருக்கு, கதர், கைவினைப் பொருள்கள் மற்றும் சிறு தொழில்கள் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்கான இல்லம் ஒன்றை அமைத்தல், தொண்டர்களிடமிருந்து பெறும் நன்கொடைகளை ஏற்றுக் கொள்வதன் மூலம் இச்சங்கம் அதன் நிதியைத் திரட்டுகிறது. இச்சங்கம், திரட்டியுள்ள நிதியில், பாதித் தொகை அரசு மானியமாக அளிக்கப்பட்டதாகும். இச்சங்கத்திற்கு மானியமாக 1998-99ஆம் ஆண்டில் அரசு ரூ. 39,495/- வழங்கியுள்ளது.

[1999 ஏப்ரல் 13

இந்நோக்கத்திற்காகவே 1999-2000 ஆண்டில் ரூ. 40,000/- ஒதுக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம்

50. மண்டல் குழு வழக்கில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவையொட்டி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலைப் பரிசீலித்து, பரிந்துரைப்பதற்காக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் என்னும் நிரந்தர ஆணையத்தை அரசு 15-3-1993 அன்று அமைத்துள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலைக் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை திருத்தும் பணியும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தங்கள் வகுப்புகளைச் சேர்க்குமாறு பல்வேறு வகுப்பினரிடமிருந்து வரபெற்ற முறையீடுகள் குறித்தும், அவை மீதான மறுப்புகள் குறித்தும் ஆணையம் தற்போது விசாரணை நடத்தி வருகிறது.

51. 1998-99ஆம் ஆண்டில் 131 வகுப்புகளிடமிருந்து 938 முறையீடுகள் ஆணையத்திற்கு வரப்பெற்றுள்ளன. 1998-99ல் 67 வகுப்புகள் குறித்து 51 விசாரணைகள் நடைபெற்றுள்ளன.

### தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

52. இந்நிறுவனம் 1956ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசால் 16-11-1981ஆம் நாளன்று நிறுவப்பட்டு 22-5-1982-லிருந்து செயல்படத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

(அ) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அச்சங்கங்களுக்குத் தொடக்க நிதியுதவி வழங்குதல்.



1999 ஏப்ரல் 13]

(ஆ) தமிழ்நாடு அரசு, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம், புதுடெல்லி, தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகம் ஆகியவற்றிலிருந்து நிதி உதவி பெற்று மேற்சொன்ன வகுப்பினர்க்கு பொருளாதார மேம்பாட்டிற்கு அவசியம் என்று கருதக்கூடிய வழிகளில் எல்லாம், பொதுவான நடவடிக்கைகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ மேற்கொள்ளுதல்.

53. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் மற்றும் தேசிய சிறுபான்மையினர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் வழிமுகமையாக 1993-94ஆம் ஆண்டிலிருந்து நிதி உதவியைத் தவணைக் கடனாக வழங்கி வருகிறது.

54. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், 1997-98 வரையில் 125 நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியின் 29 கிளைகள், கைத்தறி மேம்பாட்டுக் கழகத்தின் 10 கிளைகள் ஆகியவற்றின் மூலமும், நகர்ப்புற வங்கிகள் இல்லாத பகுதிகளில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலமும் செயல்படுத்தி வந்தது. 1998-99ஆம் ஆண்டு முதல் மேற்சொன்ன நிதி நிறுவனங்களுடன் தனியார் மற்றும் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளும் முகமைகளாக நியமிக்கப்பட்டுள்ளன.

55. ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின்கீழ், ஆய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு, கடன் விண்ணப்பங்களைத் தீர்வு செய்து அவற்றைச் சம்பந்தப்பட்ட நிதியுதவி அளிக்கும் வங்கிகளுக்கு அனுப்பி வைக்கும். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இதுவரையில் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 2340.76 இலட்சமும், புதுடில்லியிலுள்ள தேசிய சிறுபான்மையோர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து ரூ. 464.00 இலட்சமும் நிதியுதவி பெற்றுள்ளது. இதுவரையில், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் ஆகியோருக்கு தவணைக் கடன் வகையில் நிதியுதவியாக ரூ. 1968.56 இலட்சமும்,

[1999 ஏப்ரல் 13

சிறுபான்மையினர்களைப் பொறுத்தவரையில், இத்தகைய தவணைக் கடன் ரூ. 139.06 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

56. இதுவரையில், இக்கழகம், தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனி நபர் கடன்களைப் பொறுத்தவரை, 33021 நபர்கள் பயன் பெறும் வகையில், ரூ. 2107.62 இலட்சம் வழங்கியுள்ளது. கறவை மாடுகள் வாங்குவதற்கு மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தி இணையங்கள் வாயிலாக 2000 நபர்களுக்கு ரூ. 456.00 இலட்சம் இக்கழகம் வழங்கியுள்ளது.

57. 1998-99ஆம் ஆண்டில் பங்கு மூலதன நிதியுதவியாக ரூ. 100 இலட்சமும், இக்கழகப் பணிகளை மேம்படுத்த ரூ. 845.45 இலட்சமும் நிதியுதவியளிக்கப்பட்டது.

1999-2000 ஆண்டில் இக்கழகத்திற்கு பங்கு மூலதன நிதியுதவியாக ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**அரசுப் பணிகளில் நியமனம் பற்றிய குழுக்கள்**

58. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் அரசுத் துறைப் பணிகளிலும், அரசு நிறுவனப் பணிகளிலும் பணி நியமனம் பற்றி ஆய்வு செய்ய ஓர் உயர்மட்டக் குழு ஏற்படுத்தப்பட்டது. இதேபோன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குறித்தும் ஓர் உயர்மட்டக் குழு ஏற்படுத்தப்பட்டது. இவ்விரு குழுக்களும் அரசுக்கு அறிக்கைகளை அளித்துள்ளன. இவற்றை இரு துறைகளின் அமைச்சர்கள் மற்றும் செயலர்கள் கொண்ட குழு பரிசீலித்து வருகிறது.

1999-2000 ஆண்டின்போது செயல்படுத்தப்பட உள்ள புதிய திட்டங்கள் குறித்த விவரங்கள்:

59. மாநிலத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட/மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மக்களின் முன்னேற்றத்திற்காக 1999-2000 ஆண்டின்போது கீழ்க்காணும் புதிய திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்:

1. பள்ளிப் படிப்பு திட்டத்தின்கீழ் 9ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ மாணவியர்களுக்கு இதுவரையில் வழங்கப்படாமல் இருந்த புத்தகங்கள் அனைத்தும் ரூ. 64.48 இலட்சம் செலவில் வழங்கப்படும்.



1999 ஏப்ரல் 13]

2. மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு புதியதாக 5 கல்லூரி விடுதிகளை ரூ. 22.16 இலட்சம் செலவில் திறத்தல்.

3. .5 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு ரூ. 9.00 இலட்சம் செலவில் குடிநீர் வசதி அளித்தல்.

4. 20 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு ரூ. 10.00 இலட்சம் செலவில் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்குதல்.

5. 200 பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு ரூ. 12.00 இலட்சம் செலவில் புதிய பாத்திரங்கள் வழங்குதல்.

6. இதுவரை சிறு நூலகங்களும் மற்றும் புத்தக அலமாரிகளும் வழங்கப்படாத எஞ்சியுள்ள மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு ரூ. 1.64 இலட்சம் செலவில் அவ்வசதிகளைச் செய்து தருதல்.

7. பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு ரூ. 5.00 இலட்சம் செலவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்.

8. பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் விடுதி மாணவ/மாணவியர்களுக்கு ரூ. 3.50 இலட்சம் செலவில் வேலை வாய்ப்புகள் குறித்த ஆலோசனை வகுப்புப் பயிற்சிகள் அளித்தல்.

9. பெரம்பலூர் மாவட்டம், பெரியார் குடில் எனும் தனியார் உணவு இல்லத்தில் கூடுதலாக 50 மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மாணவர்களுக்கு இடம் அளிக்கும் வகையில் கூடுதலாக உணவு மானியங்கள் ரூ. 0.75 இலட்சம் செலவில் வழங்குதல்.

10. கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 10 கள்ளர் தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக ரூ. 56.50 இலட்சம் செலவில் நிலை உயர்த்துதல்.

11. 15 கள்ளர் பள்ளிகளுக்கு ரூ. 9.00 இலட்சம் செலவில் குடிநீர் வசதிகள் செய்து தருதல்.

12. 20 கள்ளர் பள்ளிகளுக்கு ரூ.5.00 இலட்சம் செலவில் மின் இணைப்புகள் மற்றும் வசதிகள் செய்து தருதல்.

13. 20 கள்ளர் பள்ளிகளில் பெண்களுக்கு ரூ.10.65 இலட்சம் செலவில் கழிப்பிட வசதிகள் செய்து தருதல்.

14. சென்னை சிறப்புப் பயிற்சி நிலையத்திற்கு ரூ.21.17 இலட்சம் செலவில் வசதிகளை மேம்படுத்தித் தருதல்.

15. சென்னை தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில்நுட்ப மையத்தின் மூலம் 90 பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர் மரபினர் பெண்களுக்குத் தையல் எந்திரம் இயக்க பயிற்சி ரூ.6.00 இலட்சம் செலவில் அளித்தல்.

16. பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர் மரபினர் இனத்தவர்களுக்கு ரூ.59.50 இலட்சம் செலவில் சிறப்புக் கணினி வேலைவாய்ப்புப் பயிற்சி அளித்தல்.

17. 200 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர் மரபினர் பெண்களுக்கு ரூ.14.60 இலட்சம் செலவில் அலுவலகச் செயலர் (Private Secretaryship) பயிற்சி அளித்தல்.

18. பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர் மரபினர் இனத்தவர்களுக்கு ரூ.18.32 இலட்சம் செலவில் தோல் பொருட்கள் தயாரிப்பில் பணி சார்ந்த பயிற்சி அளித்தல்.

19. மசூதிகள் மற்றும் தர்க்காக்களின் பராமரிப்பு, சீரமைப்புப் பணிகளுக்காக தமிழ்நாடு வக்பு வாரியத்திற்கு ரூ.40.00 இலட்சம் நிதியுதவி அளித்தல்.

20. தகவல் தொழில்நுட்பத் துறை வருமாண்டுகளில் மிகப் பெருமளவு வேலைவாய்ப்புகளை அளிக்கும் என்பதால், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் ஆகியோரில் 5,000 பேருக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.





21. தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தில் பங்கு மூலதனம் செலுத்த ரூ.100 இலட்சம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

22. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலத் திட்டங்களுக்கென ரூ.20 கோடி மொத்த நிதி ஒதுக்கமாகக் கோரிக்கை எண் 60-இன்கீழ் ஒதுக்கப்படும்.

**ஈ. முடிவுரை**

60. சமுதாய வளர்ச்சிக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. மொத்த மக்கள் தொகையில் பெரும்பான்மையினரை பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகக் கொண்டுள்ள மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதால், இப்பிரிவினரின் முன்னேற்றத்திற்கென இவ்வரசு மேற்கொள்ளும் திட்டங்களை நாடே உற்று நோக்குகிறது. பெரும்பான்மையான மக்கள் பின்தங்கிய நிலையிலேயே இருக்கும்போது உண்மையான தேசிய வளர்ச்சியை எய்திட இயலாது. பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த பயனாளிகளுக்குக் கடனுதவி வழங்கும் நிறுவனமாகத் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இயங்கி வருகிறது. எதிர்வரும் காலங்களில் இந்த நிறுவனத்தின் செயல்பாடுகளை பன்மடங்கு விரிவாக்குவதற்கும், குறிப்பாகப் பயனாளிகளுக்குப் பல்வேறு சிறு தொழில்களைத் தொடங்குவதற்கு நிதியுதவி அளிப்பதற்கும் முன்னுரிமையளித்து திட்டம் தீட்டப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் முன்னேற்றத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளை இவ்வரசு நன்கு உணர்ந்து, அவர்களின் நல்வாழ்விற்கான பல்வேறு நலத் திட்டங்களைத் தொடர்ந்து செயலாக்கி வருகிறது.

## இணைப்பு

### 1999-2000 ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

| நிர்வாகம் | | | மொத்த ஒதுக்கீடு | |
|---|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | | 50514 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 429363 |
| மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | | 1325 | மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 551413 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | | 2899 | வக்பு வாரியம் | 17801 |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | | 7988 | ஹஜ் குழு | 1325 |
| திருப்பி வசூலிக்கப்பட்டவை— | | | முஸ்லீம் பெண்கள் சங்கம் | 40 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 2035 | | | |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 2973 | | | |
| மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | 9 | | | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | 11 | 5028 | | |
| மொத்தம் | | 67754 | | 999942 |
| | | | | 1067696 |



(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண். | திட்டங்கள் | திட்டப் பணிகள் பி.வ. | மி.பி.வ. | சீ.ம. | திட்டத்தில் சேராப் பணிகள் பி.வ. | மி.பி.வ. | சீ.ம. | மொத்தம் பி.வ. | மி.பி.வ. (ம) சீ.ம. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1. | படிப்புதவித் தொகை | 9842 | 9720 | 1731 | 69572 | 28070 | 7775 | 79414 | 47296 |
| 2. | இலவசக் கல்வி | 40170 | 46530 | - | 7855 | 4125 | - | 48025 | 50655 |
| 3. | பள்ளிகள் | - | - | 12661 | - | - | 156080 | -- | 168741 |
| 4. | புத்தகங்களும் எழுது பலகைகளும் | - | - | - | - | - | 3583 | -- | 3583 |
| 5. | உடைகள் | 1128 | 1250 | 6600 | 2176 | 705 | 1445 | 3304 | 10000 |
| 6. | உணவு மானியம் | 173 | 280 | -- | 1019 | 510 | 7 | 1192 | 797 |
| 7. | மாணவர் இல்லங்கள் | 58657 | 29365 | 3265 | 115139 | 62315 | 48673 | 173796 | 143618 |
| 8. | பல்கலைக்கழகத்திற்கு மானியம் | - | - | - | 27 | 13 | - | 27 | 13 |
| 9. | சீர்மரபினர் வகுப்பினர் சார்ந்த ஆசிரியர்களுக்கு வீடுகள் | - | - | 15 | - | - | - | - | 15 |
| 10 | பல்நோக்கு பொறியியல் பட்டறைகள் | - | - | - | - | - | 4960 | - | 4960 |
| 11. | குடிசைத் தொழில்கள் | - | - | - | 1580 | - | 244 | 1580 | 244 |
| 12. | இலவசக் கருவிகள் | -- | 500 | - | - | 5946 | - | - | 6446 |
| 13. | சலவைத் துறை | -- | 1 | - | - | - | - | - | 1 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14. | சிறப்பு தனிப் பயிற்சி நிலையம் | 3196 | - | - | 3136 | - | - | 6332 | - |
| 15. | வீட்டுமனை கையகப்படுத்துதல் | 80040 | 100000 | - | - | - | 350 | 80040 | 100350 |
| 16. | சீர்மரபினர்களுக்கு வீடுகள் | - | - | 1 | - | - | - | - | 1 |
| 17. | மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி | - | - | - | 29 | - | - | 29 | - |
| 18. | பட்டயக் கணக்கர் படிப்பு | - | - | - | 3 | 2 | - | 3 | 2 |
| 19. | பரிசுகள் வழங்குதல் | 2200 | - | | - | - | - | 2200 | - |
| 20. | வேலைவாய்ப்புத் திட்ட மாணவர் இல்லம் | 1640 | - | - | - | - | - | 1640 | - |
| 21. | பணி சார்ந்த பயிற்சிகள் | 12032 | 316 | - | 19222 | 14175 | - | 31254 | 14491 |
| 22. | சட்டப் பட்டதாரிகளுக்குப் பயிற்சி | 470 | - | - | - | - | - | 470 | - |
| 23. | பள்ளி மாணவர் இல்லங்கள் பழுதுபார்த்தல் | - | 10 | - | 10 | - | - | 10 | 10 |
| 24. | சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது | - | - | - | 47 | - | - | 47 | - |
| 25. | கள்ளர் சீரமைப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கு புத்தறிவுப் பயிற்சி | - | - | 190 | - | - | - | - | 190 |
| | மொத்தம் | 209548 | 187972 | 24463 | 219815 | 115861 | 223117 | 429363 | 551413 |



**மொத்தம் 1998-1999** (ரூபாய் ஆயிரத்தில்)

| | | | |
|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 395218 | | |
| மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | 1254 | | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | 2403 | 398875 | |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலத் துறை | 485540 | 485540 | |
| வக்பு வாரியம் | 4896 | | |
| ஹஜ் குழு | 408 | | |
| முஸ்லீம் பெண்கள் சங்கம் | 46 | 5350 | 889765 |
| திருப்பி வசூலிக்கப்பட்டவை | | | 4700 |
| மொத்தம் | | | 894465 |

**மொத்தம் 1999-2000** (ரூபாய் ஆயிரத்தில்)

| | | | |
|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 479877 | | |
| மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | 1325 | | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | 2899 | 484101 | |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலத் துறை | 559401 | 559401 | |
| வக்பு வாரியம் | 17801 | | |
| ஹஜ் குழு | 1325 | | |
| முஸ்லீம் பெண்கள் சங்கம் | 40 | 19166 | 1062668 |
| திருப்பி வசூலிக்கப்பட்டவை | | | 5028 |
| மொத்தம் | | | 1067696 |

****

221087